# SPM

# தமிழ்மொழி வினாத் தாள் தொகுப்பு

## 2012 – 2019

தாள் 6354/1
தாள் 6354/2

வெ.விஜயன்

# உள்ளடக்கம்


| | கடந்தாண்டு கேள்விகள் பகுப்பாய்வு | |
|---|---|---|
| 1. | தாள் 1 (6354/1) | i |
| 2. | தாள் 2 (6354/2) | vi |
| | | |
| | தாள் 1 | |
| 3. | 2019 | 1 |
| 4. | 2018 | 3 |
| 5. | 2017 | 5 |
| 6. | 2016 | 7 |
| 7. | 2015 | 9 |
| 8. | 2014 | 11 |
| 9. | 2013 | 13 |
| 10. | 2012 | 15 |
| | | |
| | தாள் 2 | |
| 11. | 2019 | 17 |
| 12. | 2018 | 29 |
| 13. | 2017 | 41 |
| 14. | 2016 | 53 |
| 15. | 2015 | 66 |
| 16. | 2014 | 80 |
| 17. | 2013 | 92 |
| 18. | 2012 | 103 |

# எஸ்.பி.எம். தமிழ்மொழி தாள் 1 (6354/1) பகுப்பாய்வு (2005 - 2019)

## பிரிவு A

வெ.விஜயன், மெந்தகாப் இடைநிலைப்பள்ளி

| | வழிகாட்டிக் கட்டுரை | | | | | வடிவமாற்றுக் கட்டுரை |
|---|---|---|---|---|---|---|
| | பேட்டி | நட்புக் / உறவுக் கடிதம் | அலுவல் கடிதம் | அறிக்கை | உரையாடல் | |
| 2019 | | | | | | மனவோட்டவரை → உரைநடை |
| 2018 | | | வீடமைப்புத் திட்டத்தில் குறைகள். முறையீட்டுக் கடிதம் | | | |
| 2017 | | | | | உடல் நலத்தைப் பேணும் வழிமுறைகள் | |
| 2016 | | பள்ளியில் நடக்கும் தமிழ்மொழி வகுப்பிற்கு அடிக்கடி மட்டம் போடும் நண்பருக்குக் கடிதம் | | | | |
| 2015 | விளையாட்டுத் துறை அமைச்சரைப் பேட்டி காணுதல் | | | | | |
| 2014 | | | வியாபாரத்தை விரிவுபடுத்துதல். வங்கிக் கடன் விண்ணப்பம் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2013 | | சிறப்புத் தேர்ச்சி பெறத் தவறிய சிற்றப்பா மகனுக்கு ஆலோசனைக் கடிதம் | | | | |
| 2012 | | | பொது மண்டபம் கட்டுவதற்கு விண்ணப்பித்தல் | | | |
| 2011 | | | | நகராண்மை கழகத்திற்கு **முறையீட்டு அறிக்கை** | | உரையாடல் - உரைநடை |
| 2010 | | | | | விளையாட்டுத் துறையில் நம்மவரின் ஈடுபாடு | கவிதை - உரைநடை |
| 2009 | | | | தமிழ்மொழிக் கழக **ஆண்டறிக்கை** | | நாளிதழ் செய்தி – பேட்டி |
| 2008 | | குடும்பத் தகராற்றால் பிரிந்து வாழும் அண்ணனுக்குச் சமாதானம் கூறுதல் | | | | பாடல் – உரைநடை |
| 2007 | | | | | வாசிப்புப் பழக்கம் | கடிதம் – உரைநடை |
| 2006 | | | | தமிழ் விழா **நிகழ்வறிக்கை** | | கவிதை – உரையாடல் |
| 2005 | | | சுற்றுலாவிற்கு அனுமதி கோரல் | | | உரையாடல் - உரைநடை |

**எஸ்.பி.எம். தமிழ்மொழி தாள் 1 (6354/1) பகுப்பாய்வு (2005 - 2019)**

**பிரிவு B**

வெ.விஜயன், மெந்தகாப் இடைநிலைப்பள்ளி

| கேள்வி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| | **கருத்து விளக்கக் கட்டுரை** | **வாதக் கட்டுரை** | **விவாதக் கட்டுரை** | **உரை** | **வருணனை** | **சிறுகதை / நாடகம்** |
| 2019 | தகவல் ஊடகங்கள் | மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க பெற்றோர்களே முக்கியப் பங்காற்றுகின்றனர். | காடுகள் பரவலாக அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள். | மொழி வாரத்தை முன்னிட்டு ‘வாசிக்கும் பழக்கம்’ எனும் தலைப்பில் உரையாற்ற அழைக்கப்பட்டுள்ளீர். | உமது பள்ளியில் பரிசளிப்பு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது | தியாகம் |
| 2018 | பாரம்பரிய விளையாட்டு | சமச்சீர் உணவினால் மட்டுமே ஆரோக்கியமாக வாழ முடியும் | துணை வகுப்புகளுக்குச் செல்வதால் ஏற்படும் விளைவுகள் | பகடிவதையைத் தவிர்ப்போம். | இரவுச்சந்தை | உடன்பிறப்பா? நட்பா? |
| 2017 | ஒழுக்கம் | கூடா நட்பு மட்டுமே சமூக சீர்கேடுகளுக்கு வித்திடுகின்றது | தொலைக்காட்சி அலைவரிசைகளின் அதிகரிப்பினால் ஏற்படும் விளைவுகள் | தமிழர் திருநாள் விழாவில் 'தமிழர் பண்பாடு' என்னும் தலைப்பில் உரை | பள்ளியில் சிற்றுண்டித் தினம் | சாதனை |
| 2016 | கல்வி | தொழிற்கல்வி மட்டுமே வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். | அதிகரித்துவரும் சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள். | நம்மிடையே தமிழ்ப்பற்றை மேலோங்கச் செய்வதில் தகவல் ஊடகங்கள் பெரும் பங்காற்றுகின்றன. | உறவினர் திருமண நிகழ்ச்சி | ஊனம் ஒரு தடையல்ல! |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2015 | பணம் | இன்றைய சூழலில் கூட்டுக் குடும்பமாக வாழ்வதே சிறப்பு | நம் நாட்டில் அதிகமான தமிழ் நாளிதழ்கள் வெளிவருவதால் ஏற்படும் விளைவுகள் | இந்திய இளைஞர்கள் வியாபாரத் துறையில் ஈடுபடுவதன் அவசியம் | மாலைநேரக் கடற்கரைக் காட்சி | எது வீரம்? |
| 2014 | இனம் | அன்றாடப் பொருள் விலையேற்றத்திற்குப் பயனீட்டாளர்களே காரணம் | நாட்டில் அதிகமான தனியார் உயர்கல்விக் கூடங்கள் நிறுவப்படுவதால் பல விளைவுகள் ஏற்படுகின்றன. | சமுதாய முன்னேற்றத்திற்குச் சமூக இயக்கங்கள் ஆற்ற வேண்டிய பங்கு. | கேமரன் மலையின் இயற்கை அழகு | உழைப்பு |
| 2013 | கடமை | ஆசிரியர்களால் மட்டுமே நாட்டுக்குத் தேவையான நற்குடிமக்களை உருவாக்க முடியும் | இந்தியர்கள் குறிப்பிட்ட சில துறைகளில் வேலை செய்ய நாட்டம் கொள்வதால் ஏற்படும் விளைவுகள் | தமிழர் திருநாளில் ‘ஒற்றுமையே பலம்’ எனும் தலைப்பில் உரை | சுதந்திர தினக் கொண்டாட்டம் | புகழ் |
| 2012 | நட்பு | சமயக் கல்வி மட்டுமே இன்றைய இளைஞர்களைப் பண்படுத்த முடியும் | நம் நாட்டில் மேற்கொள்ளப்படும் அதிகமான மேம்பாட்டுத் திட்டங்களினால் பல விளைவுகள் ஏற்படுகின்றன. | மாணவர்கள் தொண்டூழிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாகும். | தேசிய அளவிலான போட்டி விளையாட்டி நேரடி வருணனை செய்தல் | இலட்சியக் கனவு |
| 2011 | உலகம் | பொதுமக்கள் தாமாகவே முன்வந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்த முடியும் | நவீன வாழ்க்கை முறைகளால் குடும்ப உறவுகளில் ஏற்படும் விளைவுகள் | அன்னிய கலாசாரத் தாக்கத்தினால் நமது பாரம்பரியங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன | | எது செல்வம்? |
| 2010 | அழகு | தண்டனைகளைக் கடுமையாக அமலாக்கம் செய்வதன் வாயிலாக மட்டுமே கட்டொழுங்கு மிக்க வாகனமோட்டிகளை உருவாக்க இயலும் | குறுஞ்செய்தி சேவை பயன்பாட்டால் மாணவர் வாழ்க்கையில் ஏற்படும் விளைவுகள் | தமிழ்மொழிச் சீர்கேட்டைக் குறைப்பதில் ஊடகங்களின் பங்கு | | இனப்பற்று |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2009 | குடும்பம் | அறிவியல் தொழில்நுட்பத் துறையில் முன்னேறினால் மட்டுமே நம் நாடு வளர்ச்சி அடைந்த நாடாக மாறும் | ஆண் பெண் இருபாலருக்கும் சம உரிமைகளால் ஏற்படும் விளைவுகள் | மொழியும் இலக்கியமும் இனத்தின் இரு காண்கள் போன்றவை | | நன்றிக் கடன் |
| 2008 | தமிழர் திருநாள் | கல்வியால் மட்டுமே நம் சமுதாயம் மேன்மை அடைய முடியும் | அந்நியத் தொழிலாளர்களின் அதிகப்படியான வருகையால் ஏற்படும் விளைவுகள் | இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள் | | காதலா? பெற்றோரின் கனவா? |
| 2007 | தமிழ்மொழி | தனிமனித முன்னேற்றத்தினால் மட்டுமே சமுதாய முன்னேற்றத்தைக் காண இயலும் | உலகெங்கிலுமிருந்தும் வருகை புரியும் சுற்றுப்பயணிகளால் ஏற்படும் விளைவுகள் | பல்லினம் வாழும் மலேசியாவில் ஒற்றுமையின் அவசியம் | | பிள்ளைப் பாசம் |
| 2006 | இலக்கியம் | நம்மவர்கள் வியாபாரத்துறையில் ஈடுபடுவதன் வாயிலாக மட்டுமே விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய இயலும் | பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்வதால் குடும்பத்தில் ஏற்படும் விளைவுகள் | வரலாற்று நிகழ்வுகளைக் கற்றும், அறிந்தும் வைத்திருப்பதன் அவசியம் | | மனமாற்றம் |
| 2005 | இயற்கை | தாய் மொழிக் கல்வி வாயிலாக மட்டுமே நமது கலை பண்பாட்டுக் கூறுகளைப் பேணிக் காக்க இயலும் | கைத்தொலைபேசியால் மனித வாழ்க்கையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் | நாட்டின் மேம்பாட்டிற்கு இளைஞர்கள் ஆற்ற வேண்டிய பங்கு | | நட்பு |

# எஸ்.பி.எம். தமிழ்மொழி
# தாள் 2 (6354/2)
# தேர்வுத் தாள் பகுப்பாய்வு 2012-2019

வெ.விஜயன், மெந்தகாப் இடைநிலைப்பள்ளி

| கேள்வி எண் | புள்ளி | வினா வகை | வினாக் கூறு | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | கருத்துணர்தல்<br>(படம்) | கருத்து<br>செய்தி | சமுதாயம்<br>2 கருத்து | அணு ஆயுதம்<br>2 கருத்து | இளைஞர்<br>சுதந்திரம்<br>செய்தி | தொழில்நுட்பம் –<br>விளையாட்டு<br>கருத்து | உடல் உறுப்பு<br>தானம்<br>கருத்து | காலம்<br>கருத்து | தகவல் ஊடக<br>ஆதிக்கம்<br>கருத்து | ஆரோக்கிய உணவு<br>கருத்து |
| 2<br>முதல்<br>6 | 2 | கருத்துணர்தல் | படிப்பினை /<br>கருத்து /<br>அறிவுரை /<br>உணர்த்தும்<br>கருத்து /<br>செய்தி | கருத்து | உணர்த்தும்<br>கருத்து | அறிவுரை | படிப்பினை | திறன்பேசி<br>(கருத்து) | தமிழின சிறப்பு<br>(செய்தி) | எதிர்பார்ப்பு | சான்றோர்<br>வழிகாட்டல்<br>முக்கிய கருத்து |
| | | உரைவீச்சு /<br>ஹைக்கூ கவிதை | | | | | | | | | |
| | | நிகழ்ச்சி / அறிவிப்பு /<br>தகவல் / செய்தி /<br>கடிதம் / கவிதை | நோக்கம் /<br>கூற்று /<br>படிப்பினை | செய்தி | 2 கருத்து | கருத்து | டத்தோ பத்மநாபன்<br>2 சிறப்பு | இலக்கியம்<br>(அறிவிப்பு) | இன மாண்பு<br>(படிப்பினை) | (மொழிப்பற்று)<br>முக்கியச் செய்தி | இயற்கை அழிவு<br>அறிவுரை |
| | | துணுக்கு /<br>நகைச்சுவை | தன்மை /<br>தனித்தன்மை /<br>கருத்து /<br>கூறவருவது /<br>உணர்த்துவது | அறிவது | கூறவருவது | கூறவருவது | கருத்து | எத்தகைய<br>தன்மை | கூற்று<br>உணர்த்துவது | தன்மை | உட்கருத்து |
| | | தமிழுக்குத்<br>தொண்டாற்றியவர்கள்<br>/ சாதனையாளர்கள் /<br>கலைத்துறை<br>சாதனையாளர்கள் | பங்களிப்பு /<br>சாதனை /<br>எதிர்ப்பார்ப்பு /<br>செய்தி /<br>சிறப்பு /<br>தொண்டு /<br>விழிப்புணர்வு | ராதிகா சிற்சபை<br>ஈசன்<br>(2 சிறப்பு)<br><br>எம்.ஜி.ஆர்.<br>(2 சிறப்பு) | பெருஞ்சித்திரனார்<br>(2 பங்களிப்பு)<br><br>பட்டுக்கோட்டை<br>கல்யாணசுந்தரம்<br>(2 சிறப்பு) | இளையராஜா<br>(2 எதிர்ப்பார்ப்பு)<br><br>பஞ்ச் குணாளன்<br>(2 சாதனை) | என்.எஸ்.கிருஷ்ணன்<br>தனித்தன்மை<br><br>கால்டுவெல்<br>(தொண்டு) | எஸ்.பி.பாலா<br>(2 சிறப்பு)<br><br>ஆறுமுகம்<br>(2 சாதனை) | இரத்ததானம்<br>(விழிப்புணர்வு)<br><br>கி.ஆ.பெ.<br>(சிறப்பு) | தனிநாயக<br>அடிகள்<br>(பங்களிப்பு)<br><br>டத்தோ<br>குமரேசன்<br>(2 சாதனை) | ரம்லி இப்ராஹிம்<br>(2 சிறப்பு)<br><br>கோ.சாரங்கபாணி<br>(2 தமிழ்த்தொண்டு) |

| | | | குறுந்தகவல் | தமிழ்ப்பள்ளிகள் | தமிழ்ப்பெண்களின் பண்பாடு | முதியோர் இல்லம் | சித்த மருத்துவம் | சல்லிக்கட்டு | தமிழர் பாரம்மரிய உணவு | மறுபயனீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | கருத்துணர்தல் | கூற்று. ஏன்? | காரணம் | அடையாளம் | சவால் | அடிப்படைத் தத்துவம் | எப்போது? | ஆரோக்கிய வாழ்வு | மறுபயனீடு என்றால் என்ன? |
| 8 | | | பாதிப்பு? | கூற்று. ஏன்? | i)காரணம்<br>ii)கருத்து | i)கூற்று. ஏன்?<br>ii)எதிர்ப்பார்ப்பு | i)சிறப்பு<br>ii)வளர்ச்சி - தடை | i)காளைகள் பராமரித்தல்?<br>ii) வீரம்-சான்று | i) மூலப்பொருள்<br>ii) உணவுமுறை சிறப்பு | i) காரணம்<br>ii) விழிப்புணர்வு திட்டம் |
| 9 | | | ஏற்ற பொருள் | ஏற்ற பொருள் | ஏற்ற பொருள் | ஏற்ற பொருள் | ஏற்ற பொருள் | ஏற்ற பொருள் (தாக்குப்பிடித்து) | ஏற்ற பொருள் (மேலோங்கும்) | ஏற்ற பொருள் (ஊறு) |
| 10 | 10 | பரிந்துரை / வழிமுறை / காரணம் / இழப்பு / விளைவு | குறுந்தகவலால் மாற்றம் (வழிமுறை) | தமிழ்ப்பள்ளிகள் (பரிந்துரை) | தமிழ்பெண்களின் பண்பாட்டுச் சீரழிவு (விளைவு) | முதியோர் இல்லம் (இழப்பு) | சித்த மருத்துவம்- நவீன மருத்துவம் (காரணம்) | தமிழர் விளையாட்டு நிலைத்திருக்க (நடவடிக்கை) | இளைய தலைமுறையினர்க்கு பாரம்பரிய உணவு மீது நாட்டம் (பரிந்துரை) | இயற்கை அழியாமல் பாதுகாக்க<br><br>5 நடவடிக்கை |
| 11 | 20 | கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்) | பிரச்சினை யாவை? | கூற்று. ஏன்? | அறியக்கூடியது | அறியக்கூடியது | காரணம் | காரணம் | 2 பண்புநலன் | காரணம். ஏன்? |
| 12 | | | காரணம் | i) கூற்று. வெளிப்படும் கருத்து<br><br>ii)அறிவது என்ன? | i)காரணம்<br><br>ii)காரணம் | i)காரணம்<br><br>ii)காரணம் | i)காரணம்<br><br>ii)பண்புநலன் | i)பண்புநலன்<br><br>ii)எதிர்பார்ப்பு | i) காரணம்<br>ii) நோக்கம் | அ) 2 பண்புநலன்<br>ஆ) சூழலுக்கான பொருள்<br>i. கரைந்து விடுவான்<br>ii. கடனையெல்லாம் தீர்த்துவிட்டு |
| 13 | | | சூழலுக்கான பொருள்<br><br>சூழலுக்கான பொருள் | கூறவரும் செய்தி<br><br>கருத்து? | சூழலுக்கான பொருள் | சூழலுக்கான பொருள் | - சூழலுக்கான பொருள்<br><br>- காரணம் | சூழலுக்கான பொருள் | சூழலுக்கான பொருள்<br><br>(புளியைக் கரைத்து விட்டது) | அ) மாற்றம் – நீ கருதுகிறாய்<br>ஆ) எத்தகை எண்ணம் |
| 14 | | | வரிகள் உணர்த்தும் கருத்து | சூழலுக்கான பொருள் | i)உணர்த்தும் செய்தி<br>ii)தாக்கம் | i)நியாயப்படுத்துதல்<br>ii)தாக்கம் | 2 படிப்பினை | i)உணர்த்தும் 2 செய்தி<br><br>ii)ஏற்பட்ட 2 உணர்வு | i) எடுத்த முடிவு சரியா?<br>ii) உணர்த்தும் 2 கருத்து | 2 படிப்பினை |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 10 | கவிதை | கருத்தைச் சொந்த மொழிநடையில் எழுதுதல் | கவிதை தமிழினம் | பாடல் (வாழ்க்கை என்றால் ஆயிரம்.......) | பாடல் தூக்கம் (தூங்காதே தம்பி...) | கவிதை தமிழ் சோறு போடுமா? | பாடல் தன்னம்பிக்கை (ஒவ்வொரு பூக்களுமே) | கவிதை நாளைய தலைவன் | கவிதை தமிழ்மொழி | கவிதை உழைப்பு |
| 16 | 2 | மொழியணி | வாக்கியம் அமைத்தல் | மரபுத்தொடர் தண்ணீர் காட்டுதல் | இரட்டைக் கிளவி திமுதிமு | உவமைத் தொடர் மாலுமி இல்லதாத..... | மரபுத்தொடர் தண்ணீர் காட்டுதல் | இரட்டைக் கிளவி நசநச | உவமைத் தொடர்<br><br>குன்றின் மேலிட்ட விளக்கு போல | மரபுத்தொடர் கரைத்துக் குடித்தல் | இரட்டைக் கிளவி திருதிரு |
| 17 | 2 | மொழியணி | மொழியணி எழுதுதல் / பொருள் எழுதுதல் | பழமொழி பொருள் → பழமொழி (தர்மம் தலை.....) | திருக்குறள் பொருள் → குறள் (இன்னா.......) | திருக்குறள் பொருள் → குறள் (எவ்வ துறைவது....) | திருக்குறள் குறள் → பொருள் (நகுநற்..........) | பழமொழி → பொருள் பூவோடு...... | (திருக்குறள்) நவில் தொறும்.... -பொருள் (படிவம் 4 | திருக்குறள் விளக்கம் → பொருள் உடையர் எனப்படுவது....... | பழமொழி பொருள் → பழமொழி (மனக்கவலை) |
| 18 | 4 | செய்யுள் | விளக்கம் / பொருள் எழுதுதல் | விவேக சிந்தாமணி (புத்திமான்........ ........போல) முழு விளக்கம் *படிவம் 4 | நன்னூல் அன்ன மாவே....... (முதல் அடி விளக்கம்) *படிவம் 5 | நளவெண்பா (மன்னர் விழி.....) முழு விளக்கம் *படிவம் 4 | மணிமேகலை குடிப்பிப்...... ..........விடூஉம் வரி விளக்கம் *படிவம் 5 | கம்ப இராமாயணம் (குயிலினம்..... ....அழகு செய்ய) வரி விளக்கம் *படிவம் 5 | (நளவெண்பா) சீதமதி.......... -கடைசி 2 அடிகள்- பொருள் (படிவம் 4 | சிலப்பதிகாரம் என்னொடு போந்த....... ....... அறிந்திலள் அடிகள்-பொருள் (படிவம் 4) | மணிமேகலை மண்டிணி....... ... கொடுத்தோரே அடிகள் – பொருள் (படிவம் 5) |
| 19 | 12 | சூழலுக்குப் பொருத்தமான மொழியணி எழுதுதல் | மொழியணி | பழமொழி உவமைத்தொடர் திருக்குறள் திருக்குறள் | இணைமொழி மரபுத்தொடர் பழமொழி திருக்குறள் | மரபுத்தொடர் இணைமொழி திருக்குறள் பழமொழி | பழமொழி மரபுத்தொடர் உவமை தொடர் திருக்குறள் | மரபுத்தொடர் பழமொழி இணைமொழி திருக்குறள் | உவமை தொடர் பழமொழி மரபுத்தொடர் திருக்குறள் | இரட்டைக்கிளவி மரபுத்தொடர் பழமொழி உவமைத்தொடர் | திருக்குறள் இணைமொழி மரபுத்தொடர் உவமைத்தொடர் |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | 10 | இலக்கணம்<br><br>எழுத்தியல்<br>சொல்லியல் | | i)சேர்த்தெழுது<br>செம்மை + பயிர்<br>வந்து + பார்<br>தீ + பெட்டி<br><br>ii)வினைச்சொல்?<br>2<br>எடுத்துக்காட்டு | i)காலம்,திணை,<br>எண், இடம், பால்<br>(வருவோம்)<br><br>ii)பெயர்ச்சொல்?<br>2 எடுத்துக்காட்டு | i)சேர்த்தெழுது<br>கண் + இமை<br>எட்டு + எட்டு<br><br>ii)இடம் | i)காலம்,திணை,<br>எண், இடம், பால்<br>(வருவோம்)<br><br>ii)பிரித்தெழுது<br>அவையடக்கம் | i)இன எழுத்து<br><br>ii)போலி | i)பிரித்தெழுது<br>தண்ணீர்<br>திருவோடு<br><br>ii)சேர்த்தெழுது<br>பத்து + மூன்று<br>வடக்கு +<br>கிழக்கு<br>எட்டு +<br>தொகை<br><br>iii) எச்சம்? | அ) குற்றியலுகர<br>வகை<br>-நெடில்தொடர்<br>-மென்தொடர்<br><br>ஆ) மெய்<br>எழுத்து வகை | அ) காரணப் பெயர்<br>ஆ) ஆகுபெயர் |
| 21 | 10 | இலக்கணம்<br><br>தொடரியல் | | தன்வினை →<br>பிறவினை | எதிர்மறை<br>வாக்கியம்→<br>உடன்பாட்டு<br>வாக்கியம் | i)நேர்க்கூற்று →<br>அயற்கூற்று<br><br>ii)செயப்பாட்டு<br>வினை<br>→ செய்வினை | i)செயப்பாட்டு<br>வினை →<br>செய்வினை<br><br>ii)விழைவு வாக்கியம் | குன்றியவினை | i) அயற்கூற்று<br>→ நேர்க்கூற்று | அ) விழைவு<br>வாக்கியம்<br><br>ஆ) நான்காம்<br>வேற்றுமை<br>உருபு வாக்கியம்<br>அமைத்தல் | இருபெயரொட்டுப்<br>பண்புத் தொகை |
| 22 | 10 | பிழை ஆய்வு | ஐந்து<br>பிழைகளை<br>அடையாளம்<br>கண்டு<br>அவற்றைத்<br>திருத்தி எழுத<br>வேண்டும். | ன,ணகரம்<br>ர, றகரம்<br>ல, ளகரம்<br>வலிமிகுதல் -<br>2ஆம்<br>ல, ளகரம் | வலிமிகுதல் –<br>வ.தொ.கு.உகரம்<br>ல,ளகரம்<br>ன,ணகரம்<br>வலிமிகுதல் -2ஆம்<br>ர, றகரம் | ர, றகரம்<br>ன, ணகரம்<br>வலிமிகுதல் -2ஆம்<br>ள, ழகரம்<br>காலம் –<br>இ.காலம் | ர, றகரம்<br>பெயரெச்சம்-<br>வலிமிகாமை<br>நிறுத்தக்குறி<br>வினைத்தொகை<br>(வலிமிகாமை)<br>விளித்தொடர்<br>(வலிமிகாமை) | ன, ணகரம்<br>வலிமிகுதல் –<br>இந்த<br>வலிமிகாமை –<br>மெ.தொ.கு.உ.<br>ள, ழகரம்<br>வலிமிகுதல் -<br>2ஆம் | ஓர்-ஒரு<br>எப்படி<br>லள-கரம்<br>வலிமிகாமை –<br>மென்தொடர்<br>வலிமிகுதல் -<br>2ஆம் | ன, ண கரம்<br>வலிமிகுதல் –<br>4வே.உ.<br>ல,ழ கரம்<br>ஒரு-ஓர்<br>வலிமிகாமை –<br>மென்தொடர்<br>கு.உ. | ற, ரகரம்<br>ஓர் – ஒரு<br>வலிமிகுதல் –<br>வன்தொ.கு.உ<br>வலிமிகுதல் -2ஆம்<br>வலிமிகாமை –<br>மென்தொடர் கு.உ. |

வெ.விஜயன், மெந்தகாப் இடைநிலைப்பள்ளி

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
**2019**

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**
(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

கீழ்க்காணும் மனவோட்டவரையில் உள்ள தகவல்களை உரைநடை (கட்டுரை) வடிவில் மாற்றி எழுதுக.

**கவிஞர்**
**செ.சீனி நைனா முகம்மது**



**தோற்றம்** 11-09-1947 **மறைவு** 07-08-2014

**1. புனைப்பெயர்கள்**

கரும்பன், அபூபரீதா, இபுனு சையது, இல்லார்க்கினியன், நல்லார்க்கினியன்

**2. பெற்றோர்**

செய்யது ஆலம் – இபுராகிம் பீவி

**3. ஆரம்பக் கல்வி**

- தமிழகத்தில் படிவம் 3 வரை
- மலேசியாவில் படிவம் 5 வரை

**இளங்கலைக் கல்வி**
திருச்சிராப்பள்ளி சமால் முகம்மது கல்லூரி
(முழுமை பெறவில்லை)

**4. தமிழ்த்தொண்டுகள்**

- இலக்கணப் பயிலரங்குகள்
- தொல்காப்பிய வகுப்பு நடத்துநர்
- 'உங்கள் குரல்' மாத இதழாசிரியர்

**5. விருதுகள்**

- இறையருட் கவிஞர் - 2007
- தொல்காப்பிய ஞாயிறு - 2007
- இலக்கியச் சுடர் - 2014

**6. படைப்புகள்**

- கவிதை, இசைப்பாடல், கட்டுரை
- இலக்கண ஆய்வுகள்
- யாப்பு வழிகாட்டிக் கையேடுகள்

**உரைநடையைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

- உரைநடை (கட்டுரை) வடிவத்தில் அமைந்திருத்தல்
- பத்திப் பிரித்து எழுதியிருத்தல்
- வரிசைக்கிரமமாக எழுதியிருத்தல்
- முழு வாக்கியங்களில் எழுதியிருத்தல்
- இடைச்சொல் பயன்பாடு இருத்தல்
- அனைத்துக் குறிப்புகளும் எழுதப்பட்டிருத்தல்

(30 புள்ளி)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2019

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 தகவல் ஊடகங்கள்
இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க பெற்றோர்களே முக்கியப் பங்காற்றுகின்றனர்.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 காடுகள் பரவலாக அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள்.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 மொழி வாரத்தை முன்னிட்டு 'வாசிக்கும் பழக்கம்' எனும் தலைப்பில் உரையாற்ற அழைக்கப்பட்டுள்ளீர்.
இத்தலைப்பில் நீ ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5 உமது பள்ளியில் பரிசளிப்பு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
அந்தப் பரிசளிப்பு விழாவின் சூழலை **வருணித்து** எழுதுக.

6 தியாகம்
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக.

(70 புள்ளி)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2018

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

அண்மையில் புதிய வீடமைப்புத் திட்டத்தில் புதிய வீடு வாங்கி குடியேறியவர்கள், அதன் நிர்மாணிப்பில் பல குறைகளைக் கண்டறிந்துள்ளனர். இது குறித்து, குடியிருப்போர் சங்கச் செயலாளரான நீ, வீடமைப்புத் திட்ட நிர்வாகிக்கு **முறையீட்டுக் கடிதம்** ஒன்றனை எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள **குறிப்புகளை விவரித்து** உமது **முறையீட்டுக் கடிதத்தைத்** தயார் செய்க.

- குடியிருப்புப் பகுதியின் பின்னணி
- சுவர்களில் வெடிப்பு, கூரைகள் ஒழுகுதல்
- குடியிருப்பாளரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்
- நிர்ணயித்தபடி தரம் இல்லை - மன உளைச்சல்
- குடியிருப்பாளரின் எதிர்பார்ப்பு - வீடமைப்பு நிர்வாகம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

**முறையீட்டுக் கடிதத்தைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- முறையீட்டுக் கடிதம் வடிவில் இருத்தல்
- அனுப்புநர், பெறுநர் முகவரி, நாள் **சரியான முறையில்** எழுதப்பட்டிருத்தல்
- பெறுநரை விளிக்கும் சொல், தலைப்பு எழுதப்பட்டிருத்தல்
- பத்திகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
- முடிவுரை எழுதப்பட்டிருத்தல்
- கையொப்பம் இட்டிருத்தல்
- அனுப்புநர் பெயர் அடைப்புக்குறியில் இருத்தல்
- அனுப்புநர் பதவி, குடியிருப்போர் சங்கத்தின் பெயர் குறிக்கப்பட்டிருத்தல்

(30 புள்ளி)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2018

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 பாரம்பரிய விளையாட்டு
இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 *சமச்சீர் உணவினால் மட்டுமே ஆரோக்கியமாக வாழ முடியும்.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 துணை வகுப்புகளுக்குச் செல்வதால் ஏற்படும் விளைவுகள்.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 *பகடிவதையைத் தவிர்ப்போம். இத்தலைப்பில் பள்ளி சபைக்கூடலில் நீ ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5 உமது வசிப்பிடத்தில் இரவுச்சந்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அந்த இரவுச்சந்தையின் சூழலை **வருணித்து** எழுதுக.

6 உடன்பிறப்பா? நட்பா?
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக.

(70 புள்ளி)

*சமச்சீர் உணவு - Makanan Seimbang
*பகடிவதை - Kes Buli

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2017

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

உடல் நலத்தைப் பேணும் வழிமுறைகள் குறித்து நண்பர்கள் இருவர் உரையாடுகின்றனர். **அவ்வுரையாடலை** எழுதுக,

கீழே கொடுக்கப்பட்டுள்ள **குறிப்புகளை விவரித்து** உமது **உரையாடலைத்** தயார் செய்க.

* உடற்பயிற்சி, விளையாட்டு
* முறையான உணவுப்பழக்கம்
* போதுமான ஓய்வும் தூக்கமும்
* நன்னெறிமிக்க வாழ்க்கைமுறை
* முறையான மருத்துவப் பரிசோதனை

**உரையாடலைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

* உரையாடல் அமைப்பில் இருத்தல்
* சூழல் எழுதியிருத்தல் (யார்?, எங்கு?, என்ன?)
* முகமன் இருத்தல் - இருவர் பேசுவதாக அமைந்திருத்தல்
* இருவருமே கருத்துகளைப் பேசியிருத்தல்
* ஒருவர் குறைந்தது இரு முறையாவது பேசியிருத்தல்
* உரையாடலுக்குரிய குறியீடுகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியிடத்தல்
* முடிவு - விடைபெறுதல் இருத்தல்

(30 புள்ளி)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2017

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 ஒழுக்கம்
இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 கூடா நட்பு மட்டுமே சமூக சீர்கேடுகளுக்கு வித்திடுகின்றது.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 தொலைக்காட்சி அலைவரிசைகளின் அதிகரிப்பினால் ஏற்படும் விளைவுகள்.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 தமிழர் திருநாள் விழாவில் 'தமிழர் பண்பாடு' என்னும் தலைப்பில் உரையாற்ற அழைக்கப்பட்டுள்ளீர். இத்தலைப்பில் நீ ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5 உன் பள்ளியில் சிற்றுண்டித் தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
அந்தச் சிற்றுண்டித் தினத்தை **வருணித்து** எழுதுக.

6. சாதனை
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக

(70 புள்ளி)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2016

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

வெளியூரில் வசிக்கும் உமது நண்பர், அவர் பள்ளியில் நடக்கும் தமிழ்மொழி வகுப்பிற்கு அடிக்கடி மட்டம் போடுவதாக உமக்குத் தெரியவருகிறது. அவருக்குத் தமிழ்மொழி வகுப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் **நட்புக் கடிதம்** ஒன்றனை எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள **குறிப்புகளை விவரித்து** உமது **கடிதத்தைத்** தயார் செய்க.

- இலக்கண இலக்கியத் திறன்களைப் புரிந்து கொள்வதில் சிக்கல்
- தமிழ்மொழியில் ஆளுமை குன்றிவிடும்; சிறப்புத் தேர்ச்சிப் பெற முடியாது
- தமிழ்மொழிச்சார்ந்த புறப்பாட நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை
- எதிர்காலத்தில் தேர்வுப் பாடமாக எடுக்கும் எண்ணிக்கையில் சரிவு
- தமிழ்மொழித்துறைச்சார்ந்த வேலை வாய்ப்பிற்கு விண்ணப்பிக்க முடியாது

**கடிதத்தைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- நட்புக் கடிதம் வடிவில் இருத்தல்
- அனுப்புநர் முகவரி **சரியான முறையில்** எழுதப்பட்டிருத்தல்
- தேதி எழுதப்பட்டிருத்தல்
- பெறுநரை விளிக்கும் சொல் & பெறுநரை நலம் விசாரித்தல்
- பத்திப் பிரித்து எழுதப்பட்டிருத்தல்
- முடிவுரை எழுதப்பட்டிருத்தல்
- அனுப்புநரின் கையொப்பம் இட்டிருத்தல்
- அனுப்புநரின் பெயர் அடைப்புக்குறியில் இருத்தல்

(30 புள்ளி)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2016

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 கல்வி
இத்தலைப்பில் **விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 தொழிற்கல்வி மட்டுமே வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 அதிகரித்துவரும் *சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள்.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 நம்மிடையே தமிழ்ப்பற்றை மேலோங்கச் செய்வதில் தகவல் ஊடகங்கள் பெரும் பங்காற்றுகின்றன.
இத்தலைப்பில் நீ ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5 உறவினர் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளீர்.
அந்தத் திருமண நிகழ்ச்சியை **வருணித்து** எழுதுக.

6 ஊனம் ஒரு தடையல்ல!
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக.

[70 புள்ளி]

*சமூக வலைத்தளங்கள் - Facebook, WhatsApp, Wechat, Viber போன்றவை.

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2015

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

நம் நாட்டின் பிரபலமான மாத இதழின் நிருபராகப் பொறுப்பேற்றுள்ள நீர், விளையாட்டுத் துறை அமைச்சரைப் பேட்டி காண்கிறீர். அவரோடு நடத்தப்படும் **பேட்டியை** எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை விவரித்து உமது பேட்டியைத் தயார் செய்க.

- விளையாட்டுத்துறையின் இன்றைய நிலை
- விளையாட்டுத்துறையில் நம் நாட்டின் சாதனைகள்
  - பூப்பந்து, காற்பந்து, சுவர்ப்பந்து (squash), நீச்சல், கராத்தே போன்றவை
- விளையாட்டுத்துறையில் அமைச்சு மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள்
- விளையாட்டுத்துறை அடையத் திட்டமிட்டிருக்கும் இலக்குகள்
- விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற முறையில் இளைஞர்களுக்குக் கூறவரும் ஆலோசனைகள்

**பேட்டியைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- பேட்டியின் விவரம் எழுதப்பட்டிருத்தல் - [யார், யாரை, எங்கு)
- அறிமுகம் எழுதப்பட்டிருத்தல்
- பேட்டி காண்பவர் பெயர் எழுதப்பட்டிருத்தல்
- பேட்டி காணப்படுபவர் பெயர் எழுதப்பட்டிருத்தல்
- கேள்வி - பதில் அமைப்பில் எழுதப்பட்டிருத்தல்
- முடிவுப் பகுதி எழுதப்பட்டிருத்தல்
- நன்றி நவின்றிருத்தல்
- பத்திப் பிரிப்பு இருத்தல்

(30 புள்ளிகள்)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2015

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 பணம்
இத்தலைப்பில் **விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 இன்றைய சூழலில் கூட்டுக் குடும்பமாக வாழ்வதே சிறப்பு.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 நம் நாட்டில் அதிகமான தமிழ் நாளிதழ்கள் வெளிவருவதால் ஏற்படும் விளைவுகள்.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 இந்திய இளைஞர்கள் வியாபாரத்துறையில் ஈடுபட வேண்டியது அவசியம்.
இத்தலைப்பில் நீர் ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5 மாலைநேரக் கடற்கரைக் காட்சியை **வருணித்து** எழுதுக.

6 எது வீரம்?
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக.

(70 புள்ளிகள்)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2014

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

நீர், உமது வியாபாரத்தை விரிவுபடுத்த எண்ணம் கொண்டுள்ளீர். அதற்காக, வங்கி மேலாளருக்குக் கடன் விண்ணப்பித்து அதிகாரபூர்வக் கடிதம் ஒன்றனை எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை விவரித்து உமது **கடிதத்தைத்** தயார் செய்க.

- வியாபாரத்தின் பின்புலம்:
  - வியாபாரம் செய்யும் இடம், முகவரி, உரிமையாளர்
  - உற்பத்தி செய்யப்படும் பொருள்
  - சந்தையில் அதற்கான வரவேற்பு
  - வியாபாரத்தின் தற்போதைய ஆண்டு வருமானம்
- கடன் விண்ணப்பிப்பதற்கான காரணங்கள்: -
  - நவீன இயந்திரங்கள் வாங்குவதற்கு
  - தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு
- கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான உத்தரவாதம்

**கடிதத்தைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- அனுப்புநர், பெறுநர் முகவரி **சரியான முறையில்** எழுதப்பட்டிருத்தல்
- தேதி எழுதப்பட்டிருத்தல்
- விளிப்பு எழுதப்பட்டிருத்தல்
- தலைப்பு எழுதப்பட்டிருத்தல்
- முகமன் எழுதப்பட்டிருத்தல்
- பத்திப் பிரிப்பு இருத்தல்
- முடிவுப் பகுதி எழுதப்பட்டிருத்தல்
- கையொப்பம் இடப்பட்டிருத்தல்

(30 புள்ளிகள்)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2014

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 இனம்
இத்தலைப்பில் **விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 அன்றாடப் பொருள் விலையேற்றத்திற்குப் பயனீட்டாளர்களே காரணம்.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 நாட்டில் அதிகமான தனியார் உயர்கல்விக் கூடங்கள் நிறுவப்படுவதால் பல விளைவுகள் ஏற்படுகின்றன.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 சமுதாய முன்னேற்றத்திற்குச் சமூக இயக்கங்கள் ஆற்ற வேண்டிய பங்கு.
இத்தலைப்பில் நீர் ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5 கேமரன் மலையின் இயற்கை அழகை **வருணித்து** எழுதுக.

6 உழைப்பு
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக.

(70 புள்ளிகள்)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2013

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

அண்மையில் வெளியான எஸ்.பி.எம். தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெறத் தவறிய உமது சிற்றப்பா மகனுக்கு ஆலோசனை வழங்கும் வகையில் கடிதம் ஒன்றனை எழுதுக. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை விவரித்து உமது **கடிதத்தைத்** தயார் செய்க.

- கிடைத்த முடிவுக்காக மனந்தளராமலிருக்க வலியுறுத்துதல்
- தேர்ச்சிக்கேற்பப் பொருத்தமான தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுக்கக் கூறுதல்
- அத்தொழிற்கல்வி தொடர்பான நன்மைகளைக் கூறுதல்

**கடிதத்தைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- முகவரி இருத்தல்
- தேதி இருத்தல்
- விளிப்பு இருத்தல்
- முகமன் இருத்தல்
- பத்திப் பிரித்து எழுதி இருத்தல்
- முடிவுப் பகுதி இருத்தல்
- கையொப்பம் இருத்தல்

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2013

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 கடமை
இத்தலைப்பில் **விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 ஆசிரியர்களால் மட்டுமே நாட்டுக்குத் தேவையான நற்குடிமக்களை உருவாக்க இயலும்.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 இந்தியர்கள், குறிப்பிட்ட சில துறைகளில் வேலை செய்ய நாட்டம் கொள்வதால் ஏற்படும் விளைவுகள்.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 தமிழர் திருநாள் விழாவில் 'ஒற்றுமையே பலம்' என்னும் தலைப்பில் உரையாற்ற அழைக்கப்பட்டுள்ளீர்.
இத்தலைப்பில் நீர் ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5 தேசிய அரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை நேரடி வருணனை செய்யும் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்.
**அவ்வருணனையை** எழுதுக.

6 புகழ்
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** ஒன்றனை எழுதுக.

(70 புள்ளிகள்)

# தமிழ்மொழி தாள் 1 (6354/1)
# 2012

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ, பிரிவு ஆ** என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்)

உமது குடியிருப்புப் பகுதியில் பொதுமண்டபம் இல்லாததால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அக்குடியிருப்புச் சங்கச் செயலாளராக உம்மைக் கற்பனை செய்துகொண்டு பொதுமண்டபம் ஒன்றைக் கட்டுவதற்காக மாவட்ட மன்றத் தலைவருக்கு **விண்ணப்பக் கடிதம்** ஒன்றனை எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள காரணங்களைக் குறிப்பிட்டு உமது **கடிதத்தைத்** தயார் செய்க

- உள்ளரங்கு விளையாட்டுகள் நடத்துவதில் சிரமம்
- அரசாங்க நிகழ்வுகள் ஏற்பாடு செய்ய இடமில்லை
- கல்வி நடவடிக்கைகள் நடத்துவதற்கு வசதியில்லை
- திருமணம் போன்ற சமூக நிகழ்வுகள் நடத்துவதற்கு இடமில்லை
- செயற்குழுக் கூட்டங்கள் / சந்திப்புக் கூட்டங்கள் நடத்த இடமில்லை

**கடிதம் கட்டாயமாகக் கீழ்க்காணும் அமைப்பில் இருக்க வேண்டும்.**

- தேதி மற்றும் மேற்கோள் எழுதப்பட்டிருத்தல்
- அனுப்புநர், பெறுநர் முகவரி **சரியான முறையில்** எழுதப்பட்டிருத்தல்
- தலைப்பு இடப்பட்டிருத்தல்
- பத்திகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
- முடிவுரை எழுதப்பட்டிருத்தல்
- அனுப்புநரின் கையொப்பம் இட்டிருத்தல்
- அனுப்புநரின் பெயர் - அடைப்புக்குறியில் இருத்தல்
- அனுப்புநரின் பதவி குறிப்பிட்டிருத்தல்

(30 புள்ளிகள்)

தமிழ்மொழி தாள் 1 (6354/1)
2012

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

(பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்)

கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 நட்பு
இத்தலைப்பில் **விளக்கக்** கட்டுரை எழுதுக.

2 சமயக்கல்வி மட்டுமே இன்றைய இளைஞர்களைப் பண்படுத்த இயலும்.
இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

3 நம் நாட்டில் மேற்கொள்ளப்படும் அதிகமான மேம்பாட்டுத் திட்டங்களால் பல விளைவுகள் ஏற்படுகின்றன.
இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4 மாணவர்கள் தொண்டூழிய* நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாகும்.
இத்தலைப்பில் ஓர் **உரை** எழுதுக.

5 தேசிய அளவில் நடைபெறும் ஒரு போட்டி விளையாட்டை நேரடி வருணனை செய்யும் பொறுப்பை ஏற்றுள்ளீர்.
அப்போட்டி விளையாட்டை **வருணித்து** எழுதுக.

6 இலட்சியக் கனவு.
இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு ஒரு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக.

(70 புள்ளிகள்)

** சேமப்படை {RELA), தன்னார்வ இயக்கம் போன்றவை*

தமிழ்மொழி தாள் 2 (6354/2)

**2019**

**பிரிவு அ: கருத்துணர்தல் (பல்வகை)**
**[30 புள்ளி]**

கீழ்க்காணும் **கருத்துப்படத்தைக்** கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுது.

**ஆரோக்கியத்தை நோக்கி**



1. இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது?

(2 புள்ளி)

2. கீழ்க்காணும் பனுவல்வழி, எழுத்தாளர் உணர்த்தவரும் முக்கியக் கருத்து யாது?

**சமுதாய வழிகாட்டிகள்!**

தமிழ்ச் சமுதாயத்திற்குப் பல்லாயிரம் நல்லாசான்கள் வழிகாட்டி உள்ளனர். பாடம் புகட்டியுள்ளனர்; பயிற்சி கொடுத்துள்ளனர். நமது முன்னோர்கள் நல்ல குணநலன்களுக்கு, முன்னுதாரணமாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்துள்ளனர். மேலும், அன்பிற்கும் ஜீவகாருண்யத்திற்கும் வழிகாட்டியாகவும் திகழ வேண்டும் என்ற பேரிலக்குக் கொண்டவர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

நமது சமுதாயம் நலம் பெற வேண்டி...

தொல்காப்பியர் முதல் திருவள்ளுவர் வரை எண்ணிலடங்கா ஆசான்கள் சமுதாயத்திற்குக் கல்வி புகட்டியுள்ளனர். மூவாயிரம் பாடல்களைத் திருமூலரும் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்களைத் திருவள்ளுவரும் தந்தருளியுள்ளனர். திருக்குறளில், தமிழ் இளைஞர்களுக்குப் பேச்சில்கூட 'வன்முறை வேண்டாம், என்பதை

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'**

என வலியுறுத்தியுள்ளார்.

மேலும், நமது இளைஞர்கள் எடுத்ததற்கெல்லாம் உணர்ச்சிவசப்படாமல் கோபதாபங்களை விட்டொழிப்பதற்கு 'ஆறுவது சினம்' என்று ஔவை ஆத்திசூடியை அருளியுள்ளார். ஆக, இவர்கள் வழி வந்த நம் இளைஞர்களுக்கு இது புரிய மாட்டேன் என்கிறதே...!!!

*நன்றி:* **டத்தோஸ்ரீ ஆ.தெய்வீகன்**
***சில மாற்றங்களுடன்***

(2 புள்ளி)

3. கீழ்க்காணும் உரைவீச்சு நமக்குக் கூறவரும் **அறிவுரை** யாது?

**விழித்திடு மனிதா**

**மனிதா!**
**வானத்தைத் தொட**
**கட்டிடங்கள் உயர்ந்துவிட்டன**
**பட்டணத்தில்...**

**வளர நினைத்த மரங்கள்**
**சாய்ந்துவிட்டன**
**காடுகளில்..**

**மாசடையாக் காற்றைப்**
**புழுதியும் தூசும்**
**தன்வசமாக்கிக் கொண்டன**
**சுற்றுச்சூழலில்...**

**இயற்கைப் பெண்**
**அழுகிறாள்.**
**குமுறுகிறாள்....**
**அவள் அழகைச்**
**சீரழிக்கிறானாம் மனிதன்.**

**(ஆக்கம் - சு.ஆனந்தி)**

(2 புள்ளி)

4. கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கில் **வீட்டுக்காரம்மா** கூற்றின் உட்கருத்து யாது?



**பிச்சைக்காரர்** : **அம்மா தாயே... பிச்சை போடுங்க.....**
**நான் வாய் பேச முடியாத ஊமை,**

**வீட்டுக்காரம்மா** : **பக்கத்து வீட்ல போய்க் கேளுப்பா,**
**நான் காது கேட்காத செவிடு.**



(2 புள்ளி)

5. நடனக் கலைஞர் பத்மஸ்ரீ ரம்லி இப்ராஹிமின் **சிறப்புகளுள்** ஏதாகிலும் இரண்டினை எழுதுக.

**ஒடிசி நடனக் கலைஞர் பத்மஸ்ரீ ரம்லி இப்ராஹிம்**



மலேசியாவில், பத்மஸ்ரீ ரம்லி இப்ராஹிம் அவர்கள் ஒடிசி நடனக் கலையில் தலைசிறந்த நடனக் கலைஞராகத் திகழ்ந்து வருகிறார். மதத்தையும் இனத்தையும் கடந்து இந்தியப் பாரம்பரியத்தின்மீது நம்பிக்கைக் கொண்டு தன் மாணவர்களுக்குக் குருவுக்குரிய தகுதியிலிருந்து சிறப்பாக நடனத்தைப் பயிற்றுவித்து வருகிறார். இவர், ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஒடிசி நடனத்தில் மிகுந்த வல்லமை பெற்றவராகத் திகழ்கின்றார். மலேசியாவின் தலைசிறந்த இந்திய பாரம்பரிய நடனக் கலைஞரான டத்தோ ரம்லி இப்ராஹிமிற்கு, இந்திய அரசால் பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய அரசு இதற்கு முன்னரே இவருக்கு 'சங்கீத நாடக அகாடமி' விருதையும் வழங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதே வேளையில், நம் நாட்டில் கலைத்துறைக்குச் சிறப்பாகப் பங்காற்றியதற்காக மலேசிய அரசாங்கம் அவருக்கு டத்தோ விருதினை வழங்கியது. இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்றது குறித்து டத்தோ ரம்லி இப்ராஹிம் கூறுகையில், இவ்விருது அவர் உருவாக்கிய சூத்ரா அறக்கட்டளைக்கு ஓர் ஊக்கமாக இருக்கின்றது என்றார்.

(2 புள்ளி)

5. தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களின் **தமிழ்ப்பணிகளில்** இரண்டினை எழுதுக.

**தமிழவேள் கோ.சாரங்கபாணி**



கோசா என்று அழைக்கப்படும் அமரர் தமிழவேள் கோ.சாரங்கபாணி, சிங்கை மற்றும் மலாயாவில் தமிழும் தமிழரும் நிலைப்பெற்று இருப்பதற்குத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு வரலாற்று நாயகர். தமிழர் திருநாள் கண்ட தமிழவேள் கோ.சாரங்கபாணி அப்போதைய மலாயாவிலும் சிங்கப்பூரிலும் பல வகைகளில் தமிழ்த் தொண்டாற்றினார் என்றால் அது மிகையில்லை. கல்வி, கலை, இன நல்லிணக்கம், தமிழுணர்வு ஆகியவற்றை வளர்த்தவராகவும் சீரிய பத்திரிகையாளராகவும் இவரைக் கணிக்கலாம். இந்திய சமூகத்தில் பெரும்பான்மையான தமிழ்ப்பேசும் மக்கள் பலவீனர்களாக இருந்ததால் அவர்களை ஒற்றுமைப்படுத்தி அவர்களது நிலையை உயர்த்துவதையே முதல் கடமையாகவும் கருதினார். மலாயா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்த கோ.சா., தமிழ்ப்பேரவை அமைய காரணமாக இருந்தார். (மலாயா பல்கலைக்கழகத்தில் தமிழ் அன்னைக்கு ஒதுக்கப்பட்ட அரியாசனத்தில் சமஸ்கிருத மொழியை நுழைய வைக்க முயன்றவர்களுக்கு எதிராக தமிழ் எங்கள் உயிர் என்ற போராட்டத்தை 'தமிழ் முரசு' மூலம் நாடு முழுவதும் நடத்தி வெற்றி கண்டார். அகில் உலக முதல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தி முடித்த பெருமைக்கும் உரியவர் தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்கள்.

(2 புள்ளி)

**கேள்விகள் 7 முதல் 10 வரை**
*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

"அப்பாடா... தேவையில்லாததை எல்லாம் கட்டித் தூக்கிப் போட்டாச்சு" இந்தக் குப்பைக்காரன் ஒரு வாரமா குப்பையை எடுக்காமல் தொட்டி நிறைந்து வழிகிறது. குப்பையைக் கொட்டக்கூட இடமில்லை," எல்லோரது வீட்டிலும் இந்தப் பேச்சுக்கு இடமில்லாமல் இருந்திருக்காது. வீட்டைத் துப்புரவு செய்து கழிவுகளை அப்புறப்படுத்த மட்டுமே நாம் தெரிந்திருக்கிறோம். ஆனால், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு இல்லாமலும் மெத்தனப்போக்குடனும்தான் நாம் இருக்கிறோம். இதன் விளைவாகத்தான், குப்பைகள் பெருகி உலகெங்கிலும் மறுபயனீடு திட்டத்தைப் பல நாடுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. மலேசியாவும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஒரு பொருளை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பயன்படுத்துதல் மறுபயனீடு எனப்படுகின்றது. இயற்கையைப் பாதுகாக்க பத்து ஆண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில் இம்மறுபயனீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது என்று சொல்வது வெற்றிதான். ஆனால், எந்த அளவிற்கு இத்திட்டம் நடைமுறையில் உள்ளது என்று எண்ணிப் பார்க்கையில் சிந்தனைக்கு எட்டியவரை தோல்விதான்.

ஒற்றுமைக்குப் பெயர்போன நாடு மலேசியா என்பதால் என்னவோ குப்பைகளைக்கூட பிரித்துப் போட நமக்கு மனமில்லை போலும்! முன்பே, அரசாங்கத்தின் கட்டளைக்குச் செவிசாய்த்து மறுபனீட்டிற்கு வழிவகுத்திருந்தால் இன்று குப்பைகளால் வரும் தொல்லைகளைக் குறைத்திருக்க முடியும். இதை அறியாத நாம், அனைத்தையும் கழிவுகள் என்று வீசிவிட்டு இயற்கைக்கு ஊறு விளைவிக்கின்றோம். கிள்ளான் பள்ளத்தாக்கில் மட்டும் ஒரு நாளைக்குப் பதினைந்து டன்னுக்கும் அதிகமான குப்பைகள் வீசப்படுகிறதென்றால் ஒரு நாட்டைக் கணக்கெடுத்துப் பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் குப்பையாகத்தான் தெரியும்.

நாளுக்கு நாள் மிரட்டலாகி வரும் இக்குப்பைப் பிரச்சனைக்கு மக்களிடையே ஒரு விழிப்புணர்வைக் கொண்டுவர அரசாங்கமும் தொடர்ந்து பல திட்டங்களை அமல்படுத்தி வருகின்றது. இதன் தொடர் நடவடிக்கையாக, 2015ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து திடக்கழிவுகள் வகைவாரியாகப் பிரித்து வைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டம் கட்டமாக ஆங்காங்கே இதன் நடைமுறை கண்காணிக்கப்படுகிறது. முறையே இத்திட்டத்தைச் செயல்படுத்த கால அவகாசமும் கொடுக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு ஜூன் முதல் தேதியிலிருந்து திடக்கழிவுகளை வகைப்பிரித்து வீசத் தவறுவோருக்குப் பாராபட்சமின்றி தண்டனை வழங்கும் அரசாங்கத்தின் அதிரடி தொடங்கிவிட்டது.

இந்த மறுபயனீடு திட்டத்தில் என்னால் என்ன செய்ய முடியும் என்ற அலட்சியப் போக்கைச் சற்றுத் தூர நிறுத்தி, அனைவரும் சிந்திப்போம். இயற்கையின் தூய்மைக்கேட்டால் பாதிக்கப்படப்போவது நாமே தவிர வேறு யாரோ அல்ல என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டும். இன்னும் சொல்லப் போனால், மறுபயனீட்டால் இப்புவி மீண்டும் உயிர்ப்பெறும் என்பது வெள்ளிடைமலை. இல்லையேல், பூமியும் மரணவாசல் நோக்கிப் பயணிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

*[துளசி பாஸ்கரன்]*
சில மாற்றங்களுடன்

7. மறுபயனீடு என்றால் என்ன?

(2 புள்ளி)

8. (அ) குப்பைகள் பெருகி வருவதற்கான காரணம் யாது?

(2 புள்ளி)

(ஆ) கழிவுகள் வீசப்படும் பிரச்சனைக்கு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த அரசாங்கம் **எத்தகைய திட்டங்களை** அமல்படுத்தி வருகின்றது?

(2 புள்ளி)

9. கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்குச் **சூழலுக்கேற்ற பொருள்** எழுதுக.

இதை அறியாத நாம் அனைத்தையும் கழிவுகள் என்று வீசி எறிந்து இயற்கைக்கு **ஊறு** விளைவிக்கின்றோம்.

(2 புள்ளி)

10. இயற்கை அழியாமல் பாதுகாப்பதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய **ஐந்து நடவடிக்கைகளை** 50 சொற்களில் எழுதுக.

(10 புள்ளி)

**பிரிவு ஆ: கருத்துணர்தல் படைப்பிலக்கியம்**
(30 புள்ளி)

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு கோ*
*விடை எழுதுக.*

இளமையும் இனிமையும் மென்மையம் படிந்திருக்கும் பதினாறு வயது பருவ மங்கை கனகா. அங்கும் இங்கும் அலைபாயும் பெரிய விழிகள். இவளைப் பார்த்தால் யாருக்கும் பிடித்துவிடும்தான். ஆனால் அழகன் மட்டும் ஏன் இசைந்து கொடுக்க மாட்டேன் என்கிறான்.

இடைநிலைப்பள்ளிகளுக்கு அருகில் இருக்கும் எழுதுபொருள் கடையைச் சிறப்பாக நடத்தி வந்தான் அமுதன். பொதுவாகவே. அமுதன் கடையில் மாணவியர் கூட்டத்திற்குக் குறைவிருக்காது. அமுதனின் ஈர்ப்பான தோற்றமும் அவனைப் பார்ப்பதற்கும் அவனுடன் பேசுவதற்குமே பல மாணவியர் வருவர்.

பக்கத்திலுள்ள அரசு அலுவலகத்தில் வேலை பார்க்கும் பாலா, இந்த மாணவியர் கூட்டத்தை வேடிக்கைப் பார்க்க வந்தவன்தான். மதிய உணவு நேரத்தின்போது கடைக்கு அவ்வப்போது வந்துபோய்க் கொண்டிருந்த பாலாவை அமுதன்தான் சிலநேரங்களில் உதவிக்கு அழைப்பாள். கரும்புத் தின்னக் கூலியா? உடனே பாலா நண்பன் சொல்லைத் தலைமீது தாங்கி, தவறாமல் வந்து போவான்.

கொஞ்ச நாளாகக் கனகாவுக்கும் அமுதனுக்கும் இடையில் நடக்கும் மௌனப் போராட்டத்தைப் பாலா அறிந்தே வைத்திருந்தான். இதன் தொடர்பாக, பலமுறை அமுதனிடம் பேசிக்கூட பார்த்துவிட்டான். ஆனால், அமுதனோ இதற்குத் துளியளவுகூட பிடி கொடுக்கவில்லை. இது பாலாவுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

கனகா மட்டும் இந்த விசயத்தில் மிகைநம்பிக்கை கொண்டிருந்தாள் போலும், அமுதன் பாராமுகமாக இருந்தாலும் இவள் அவனை விடுவதாக இல்லை. அழுதன் தனது முடியில் உறுதியாக இருந்தாலும் எறும்பு காரக் கல்லே தேயும்போது தன் அன்பு ஊற ஊற **கரைந்து விடுவான்** என்று நம்பினாளோ என்னவோ கனகா!

அன்று கடைக்கு வந்த பாலா,

"டேய், அந்தப் பிள்ள என்னமோ சொல்ல நினைக்குது போல...!"
“அந்தப் பிள்ளகிட்ட ஒருமுறை பேசித்தான் பாரேண்டா..."
கிசு கிசுத்தான் பாலா.

அதற்கு அமுதன், "எனக்குப் பிடிக்கலடா.." என்றான்.
ஏண்டா பிடிக்கில? பாக்குறதுக்கு நல்லா அழகா லட்சணமாத்தானடா இருக்கா...?" விடாப்பிடியாய் இருந்தான் பாலா,

"அழகும் லட்சணமும் இருந்தா மட்டும் போதாதுடா. பொறுப்பு வேணும். குடும்பத்து மேலே அக்கறை வேணும். படிக்கிற வயசுல ஒழுங்காப் படிக்காம, அப்பா அம்மா படும் கஷ்டத்த கூட நினைச்சுப் பார்க்காமா, அவங்க கொடுக்கிற காசையெல்லாம் கரியாக்கிக்கிட்டு இப்படிக் காதல் கத்திரிக்காய்னு சுயநலமா இருப்பது எனக்குப் பிடிக்கல..." என்று பொரிந்து தள்ளினான் அமுதன்.

மறுநாள், கடைக்கு வந்த பாலாவுக்குக் தன் கண்களைத் தன்னாலேயே நம்ப முடியவில்லை. கனகாவும் அமுதனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நீங்க இல்லேன்னா நான் செத்துப் போயிடுவேன்..! விசும்பினாள் கனகா.

"ஓ அப்படியா..! உங்க அப்பா அம்மா உன்னைப் பெத்து வளர்த்துப் படிக்க வச்சது போதாதா? தேவையில்லாமல் உன் இறுதி செலவையும் அவங்க தல மேல ஏத்தப் போறீயா? உன் பெத்தவங்களுக்கு இது வரைக்கும் நீ என்ன செஞ்சிருக்க? எவ்ளோ சம்பாதிச்சுக் கொடுத்திருக்கற? முதல்ல **அந்தக் கடனையெல்லாம் தீர்த்திட்டு** அவங்க மனச குளிர வை. உளக்கான எதிர்காலம் தானாக அமையும்.

எதிர்காலத்துல என் பிள்ளைங்க படிச்சு எனக்குச் சம்பாதிச்சுக் கொடுக்கலன்னாலும் பரவாயில்ல; அவுங்க படிச்சு நல்லா இருந்தா போதும், என நம்ப அப்பா அம்மா நெனைக்குறாங்க. ஆனா, நீ... கண்டதே காதல், கொண்டதே கோலம் என்ற குருட்டு நம்பிக்கையில், செய்வது எல்லாம் சரின்னு நெனச்சுக்கிட்டு காதல்ல மூழ்கி உன் எதிர்காலத்தை அழிச்சிக்கிட்டிருக்க...! நம்பள பெத்தவங்க படுற கஷ்டத்தையும் நல்ல மனசையும் நெனச்சுப் பார்த்தின்னா... இப்படிச் செய்வியா..? இவ்வளவு காலம் நம்பள கஷ்டப்பட்டுப் பெத்து வளத்த நம்ப அப்பா அம்மாவுக்குத் தெரியாதா? எதை எப்போ செஞ்சு வைக்கனும்னு." கொட்டித் தீர்த்தான் அமுதன்.

ஒருகணம், அவன் கண்களை உற்று நோக்கினாள் கனகா. பிறகு, தன் கண்களைத் துடைத்துக் கொண்டு விருட்டென்று அங்கிருந்து வெளியேறினாள்.

************************************

காலங்கள் உருண்டோடின....!

தன் பள்ளிக்கால நினைவலைகள் கனகாவின் மனத்தில் அலைமோதிய காதலுக்கும் கால நேரம் உண்டு என்பதையும் பெற்றோரின் அர்ப்பணிப்பையும் உணர்த்திய அமுதனை நன்றியுடன் நினைத்துத் தன் இருக்கையில் மேலாளராகப் பெருமிதத்துடன் அமர்ந்தாள் கனகா.

**சு.கமலா**
**இளையோர் கதைகள்**
(சில மாற்றங்களுடன்)

11. அமுதனின் கடையில் மாணவியர் கூட்டத்திற்குக் குறைவிருக்காது. ஏன்?

(2 புள்ளி)

12. (அ) இச்சிறுகதையில் வரும் அமுதனின் **பண்பு நலன்களுள்** இரண்டனை அவை **வெளிப்படும் சம்பவத்தோடு** குறிப்பிடுக.

(4 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் சொற்றொடர்களின் சூழலுக்கு ஏற்ற பொருளை எழுதுக.

(i) **கரைந்து விடுவான்**

(ii) **அந்தக் கடனையெல்லாம் தீர்த்திட்டு**

(4 புள்ளி)

13. (அ) இச்சிறுகதையில் அமுதனின் அறிவுரைக்குப்பின் கனகாவிடம் எத்தகைய **மாற்றங்கள்** நிகழ்ந்திருக்கும் என நீ கருதுகின்றாய்?

(4 புள்ளி)

(ஆ) அமுதன், பெற்றோரைப் பற்றி எத்தகைய எண்ணத்தைக் கொண்டிருந்தான்?

(2 புள்ளி)

14. இச்சிறுகதை மாணவர்களுக்கு உணர்த்தவரும் இரண்டு **படிப்பினைகளை** எழுதுக.

(4 புள்ளி)

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது **சொந்த மொழிநடையில் விளக்கம்** எழுதுக.

**நாளை உனக்கில்லை**

உழைப்பதற்குப் போதுமெனும் உடல்வலிமை யிருந்தும்
ஓடோடிப் பணிசெய்யத் தயக்கந்தான் ஏனோ?
பிழைப்பதற்குப் பணிதேடி வேறுநாட்டார் நுழைந்தே
பேரளவு தொழில்களிலே உழைக்கின்றா ரிங்கே?

தழைப்பதற்கோ உனக்கிங்கே வாய்ப்புக்க ளமைந்தும்
தறுதலைபோல் சுற்றுகின்றாய். பொறுப்பேது மில்லை!
அழைப்பதற்கே ஆள் வருவார் என்றிங்கே நினைத்தால்
அடிப்படையே யில்லாமல் உண்ணண்ணம் தோற்கும்!

- என பெ.மு.இளம்வழுதி

(10 புள்ளி)

**பிரிவு இ: செய்யுளும் மொழியணியும்**
(20 புள்ளி)

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16. கொடுக்கப்பட்டுள்ள **இரட்டைக்கிளவியைப்** பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

**திமுதிமு**

(2 புள்ளி)

17. கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற **பழமொழியை** எழுதுக.

**கவலைமிக்க மனத்தை உடையவரின் உடல் சோர்வடைவதால் ஒரு செயலை முனைப்புடன் செய்ய இயலாது. ஆகவே, மனக்கவலை உடையவர் வலுவிழந்தவராகவே கருதப்படுவர்.**

(2 புள்ளி)

18. கோட்டிடப்பட்ட **செய்யுளடிகளின் பொருளை** எழுதுக.

**ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**
**<u>மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்</u>**
**<u>உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே</u>**

மணிமேகலை

(4 புள்ளி)

19. கீழ்க்காணும் பனுவலில் அடைப்புகள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்**.

'கண் போன போக்கிலே கால் போகலாமா! கால் போன போக்கிலே மனம் பாகலாமா!' வானொலியில் ஒலித்த திரைப்படப்பாடல் ஏனோ என உள்ளத்தை நெருடிச் சென்றது. இப்பாடல் இன்றைய சமுதாய அவலங்களைச் சுட்டிக்காட்டுவதுபோல் இருந்தது. ஒழுக்கமுடையவரின் அறிவுரைகள் ஒருவனைப் பண்படுத்தி நல்வழிகாட்டுவததோடு துணை நிற்கும் என்பர். **(I திருக்குறள்)** ஆனால், நம் மாணவர்கள் இன்று ஒழுக்கமுடையவர்களின் அறிவுரையைக் கேட்காமல் பல சந்தர்ப்பங்களில் தவறிழைத்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

குறிப்பாக, இன்ற இடைநிலைப்பள்ளியில் பயிலும் நம் இன மாணவர்களின் போக்கு வேதனையளிக்கிறது எனலாம். பள்ளிப் பாடங்களில் முழ்கி தேர்வில் வெற்றிக்கனியைப் பறித்துப் பார்போற்றும் வகையில் புகழடைய வேண்டியவர்கள் **(II இணைமொழி)** தவறான பாதையில் கால்பதிக்கின்றனர். பகடிவதையும் வன்முறையும் இன்றைய மாணவர்களின் கலாச்சாரமாக உருவெடுத்துள்ளது.

இதன் விளைவு, பகடிவதை எனும் போர்வையில் நாட்டில் பல்வேறு துயரச் சம்பவங்களும் மரணச் செய்திகளும் நம்மை ஒரு கணம் துயரத்தில் ஆழ்த்தி விடுகின்றன. மேலும், கனவுகளைச் சுமந்து எதிர்காலத்தில் எதையாவது சாதிக்க நினைக்கும் இளையோர்களின் எண்ணங்களும் நிறைவேறாமலேயே போய்விடுகின்றன. **(III மரபுத்தொடர்)**

பாதை தவறும் கால்கள், தவறான பாதையில் தொடரும் பயணங்களாக அமையும் என்பர். இதனைத் தடுப்பார் யார்? மாண்புமிக்க ஒரு குடும்ப அமைப்பும் பண்பு நலமிக்க ஒரு வளர்ப்பு முறையுமே மாணவர்களையும் இளைஞர்களையும் காக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. ஆகவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணிக்க வேண்டும். மெத்தனப் போக்குடன் இருந்துவிடக்கூடாது. இதுதான் பாதை, இதுதான் பயணம் என்று சொல்லி மிகவும் பாதுகாப்புடன் அரவணைத்துச் செல்ல வேண்டும். **(IV உவமைத் தொடர்)**

(12 புள்ளி)

**பிரிவு ஈ: இலக்கணம்**
(20 புள்ளி)
**கேள்விகள் 20 முதல் 22 வரை**

20. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் சொற்குவியயில் **காரணப்பெயர்** கொண்ட சொற்களை மட்டும் அடையாளம் கண்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| **மண்** | **காடு** | **பறவை** | **காற்றாடி** |
| **வானூர்தி** | **புல்** | **நாற்காலி** | **கடல்** |

(4 புள்ளி)

(ஆ) (i) **ஆகுபெயர்** எத்தனை வகைப்படும்?

(ii) அவற்றுள் ஏதாகிலும் மூன்று **வகையினை** எழுதுக.

(4 புள்ளி)

21. கீழ்க்காணும் வாக்கியங்களில் காணப்படும் **இரு பெயரொட்டுப் பண்புத்தொகையை** அடையாளங்கண்டு எழுதுக.

(அ) காய்ந்த சருகுகளுக்கு இடையே சாரைப்பாம்பு ஊர்ந்து சென்றது.

(ஆ) கடந்த தைத்திங்களில் என் அக்காளின் திருமணம் நடைபெற்றது.

(2 புள்ளி

22. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழையை மட்டும்** அடையாங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக.
*[பத்தியை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]*

வாழ்க்கை ஒரு வறம். வாழ்க்கை ஓர் அற்புதம். வாழ்க்கை ஒர் திருவிழா. வாழ்க்கை ஒரு கொண்டாட்டம். அதன் ஒவ்வொரு நொடியையும் நாம் உற்றுநோக்கி வாழ்வதற்குக் கற்று கொள்ள வேண்டும். துயரங்களிலிருந்து இன்ப நார்களை பிரித்தெடுத்துப் பட்டறிவு நெசவை நெய்யத் தெரிந்தவர்களுக்கு அது சுமையாக இருப்பதில்லை. ஆக, கழியும் 10 ஒவ்வொரு நொடியையும் அனுபவிக்காமல் வெறுமனே கடந்துச் செல்லக்கூடாது.

(10 புள்ளி)


தமிழ்மொழி தாள் 2 (6354/2)

# 2018

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
**(30 புள்ளி)**

கீழ்க்காணும் கருத்துப்படத்தைக் கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

1 இப்படம் உணர்த்தும் கருத்து யாது?




(2 புள்ளி)

* Twitter – கீச்சகம் WeChat – அளாவி WhatsApp – புலனம் Facebook - முகநூல்

2 கீழ்க்காணும் நினைவுக்குறிப்பில் அன்புச்செல்வத்தின் எதிர்பார்ப்பு யாது?

**தாத்தா ...**

இன்று உங்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள்,
இந்த ஓராண்டில் உங்கள் கைகளைப்
பிடித்துக்கொண்டு சொல்ல நினைத்ததை
இங்கே நினைவுக்குறிப்புகளாக வடிக்கிறேன்.

தாத்தா, எனக்கு அன்புச்செல்வம் என்று பெயரிட்டதே
தாங்கள்தான் என்பது எனக்குத் தெரியும்.
உங்கள் மறைவிற்குப் பிறகு
வீடு நிறைய செல்வம் இருந்தும் அன்பில்லாமல் தவிக்கிறேன்.

பெற்றோர், தூரத்து உறவினராகி விட்டனர்,
தகவல் ஊடகம், பெற்றோராகிவிட்டது.
கதை சொல்ல ஆளில்லை, கட்டளைக்கு மட்டும் குறைவில்லை.
காலை உணவைக் கரிசனத்துடனும் மதிய உணவை மனதாரவும்
இரவு உணவை இன்முகத்துடனும் அனுபவித்தது கனவாகிவிட்டது.

குடும்ப உறவைச் சின்னத்திரையில் காண்கிறேன்,
அம்மா சமையலை ஆயாவிடம் அனுபவிக்கிறேன்,
மாலையில் என்னுடன் உலா வர யாரும் இல்லை,
என் அறைக்கதவு எனக்கே சிறைக்கதவாகி விட்டது.

இவ்வளவு இழப்புகளை நான் எப்படி ஈடுகட்டுவேன் தாத்தா...

**(அன்புச்செல்வம்)**
சில மாற்றங்களுடன்

(2 புள்ளி)

3 கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கின் வாயிலாக **அண்ணன் மகன்** எப்படிப்பட்டவன் என நீ கருதுகிறாய்?

**முதலாளி** : **உன் அண்ணன் மகன் ரொம்ப விசுவாசி, கம்பெனிக்காக நாயா உழைப்பான் என்று நீ சொன்னத நம்பி அவனுக்கு வேல கொடுத்தது தப்பா போச்சு....**

**தொழிலாளி** : **அப்படியா! ஏன் முதலாளி... என்ன ஆச்சு?**

**முதலாளி** : **என்கிட்டேயே வாலாட்டுறான்...**



(2 புள்ளி)

4 கீழ்க்காணும் கவிதையின்வழி கவிஞர் வெளிப்படுத்தும் முக்கியச் செய்தி யாது?

**மதி நிறைந்த மாணவர்களே...**

**எதிர்கால நட்சத்திரங்களே**
**எழிற்றமிழ் விண்மீன்களே**
**எதிர்காலத்தை முன்வைத்து**
**ஏற்றத்தைக் கண்டவர்களே**

**தமிழ்ப்பள்ளிக்குத் தரமுண்டென**
**தரணிக்குக் காட்டி விட்டீர்**
**தமிழை மதியாதாரை**
**தலைகுனிய வைத்துவிட்டீர்**

**ஆண்டாண்டு தோறும்**
**அதிசயிக்கும் முன்னேற்றம்**
**ஆசிரியர்கள் உழைப்பினாலே**
**அடைந்துவிட்ட பெரும் ஏற்றம்**

**இறுதி மூச்சு இருக்கும்வரை**
**இந்நாட்டில் தமிழிருக்கும்**
**இம்மொழியைக் காப்பதுதான்**
**எம்மினத்தின் கடமையாகும்**

**யாதுமாகி...**
துன் ச. சாமிவேலு
(எடுத்தாளப்பட்டது)

(2 புள்ளி)

5 பேராசிரியர் தனிநாயக அடிகளார் **தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பு** இரண்டனை எழுதுக.



**பேராசிரியர் தனிநாயக அடிகள்**

தனிநாயக அடிகள் என்கிற சேவியர் தனிநாயகம் 1913இல் இலங்கையில் பிறந்தார். ஈழத்துத் தமிழறிஞரான இவர் பல மொழிகளில் சரளமாக உரையாடவும் சொற்பொழிவாற்றவும் வல்லவர். பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்து அங்குள்ள நூலகங்களில் கருத்தாழம் பொதிந்த தமிழ் கையெழுத்துப் பிரதிநூல்கள் மற்றும் அச்சிடப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றி ஆராய்ந்து வெளிக்கொணர்ந்தவர் ஆவார். 1961 முதல் 1968 வரை மலாயாப் பல்கலைக்கழகத்திலுள்ள இந்திய ஆய்வியல் துறையில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றினார். 1964ஆம் ஆண்டில் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க வித்திட்டவர். இந்த நிறுவனமே தொடர்ச்சியாக ஒன்பது உலகளாவிய உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்தியது. இதில், முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் செயலாளராகவும் பொறுப்பேற்று கோலாலம்பூரில் இந்த மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தினார். தமிழைப் பற்றிய ஐரோப்பிய மொழிகளில் வெளிவந்த நூல்களைத் தொகுத்த பெருமையும் இவரையே சாரும். தமிழ்மொழியின் மாண்பை உலகுக்கு உணர்த்திய சான்றோர்களுள் ஒருவராகத் திகழ்ந்த இவர் 1980இல் காலமானார்.

(2 புள்ளி)

6 சைக்கிளோட்ட வீரர் டத்தோ எம்.குமரேசனின் இரண்டு **சாதனைகளை** எழுதுக.



**சைக்கிளோட்ட வீரர் டத்தோ குமரேசன்**

இதுநாள் வரை மலேசியத் தமிழர்களில் சைக்கிளோட்ட போட்டியில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர் டத்தோ எம்.குமரேசன் என்றால் அது மிகையில்லை. எண்பதாம் ஆண்டுகளில் இந்நாட்டில் கிஞ்சிற்றும் அசைக்க முடியாத சைக்கிளோட்ட வீரராகத் திகழ்ந்தார். இவர் உள்ளரங்கம் மற்றும் நெடுஞ்சாலை போட்டிகளிலும் சிறந்து விளங்கினார். இவர் 1985 தொடங்கி புகழ்ப்பெற்ற சீ விளையாட்டுகளில் மட்டும் பத்தொன்பது பதக்கங்களை வென்ற சாதனையாளர். மேலும், ஆசியப் போட்டிகளில் ஐந்து வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார். அதோடு, 1988 சியோல் (கொரியா), 1992 பார்சிலோனா (ஸ்பெயின்) ஆகிய ஒலிம்பிக்கிலும் சிறப்பாகப் பங்கெடுத்தார். ஜெர்மனியிலும் தொழில் ரீதியான சைக்கிள் போட்டிகளில் கலந்து கொண்டு சிறந்த வெற்றிகளைப் பதிவு செய்தார். சைக்கிளோட்டத்தில் டத்தோ குமரேசனின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், 1987ஆம் ஆண்டு நம் நாட்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அந்தத் தங்கமகன் நம் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்தவர் ஆவார்.

(2 புள்ளி)

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

உலகில் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களுக்கும் உணவு என்பது அடிப்படைத் தேவையாகும். நாம் ஆரோக்கியமான வாழ்க்கை வாழத்தான் அன்றாடம் உணவு உண்கிறோம் என்ற சிந்தனை எழுந்தாலே நம்மால் நோய் நொடியற்ற வாழ்க்கை வாழ முடியும். ஆகவே, நமது உணவுமுறைதான் நம் உயிரைப் பாதுகாக்கின்றது; நம் ஆயுளையும் நிர்ணயிக்கின்றது.

தமிழர்களின் உணவுமுறை நீண்ட மரபுடையது. நம் மரபுமுறை உணவுகள், வெறும் பசியைப் போக்குவதாக மட்டுமல்லாமல், நமக்கு ஆற்றல் தருபவையாகவும் அருமருந்தாகவும் விளங்குகின்றன. அவ்வகையில், பழங்காலத்தில் நம் முன்னோரின் உணவுமுறையானது இயற்கையைச் சார்ந்து, சமச்சீர் உணவாக இருந்தது. இந்த இயற்கையைச் சார்ந்த சிறு தானியங்களில் மிகவும் பிரதானமானவை தினை, கம்பு, வரகு, கேழ்வரகு, சாமை, குதிரைவாலி போன்றவையாகும். இவற்றைக் கொண்டு களி, கூழ், பிட்டு, சேவை, அடை, சீடை, ஆப்பம் எனச் சமைத்துச் சாப்பிட்டு வந்தார்கள். இவற்றோடு, இயற்கை முறையில் உரமிட்டு விளைந்த பச்சைக் காய்கறிகளும் கீரை வகைகளான முளைக்கீரை, அரைக்கீரை, பசலைக்கீரை, பொன்னாங்கண்ணி, கரிசலாங்கண்ணி போன்றவற்றையும் சமைத்து உண்டனர். மேலும், கனிவகைகள், மூலிகைப்பொருள்கள் போன்ற உணவு வகைகளின் தன்மை அறிந்து அவற்றை முறையாகப் பயன்படுத்தி வந்தனர். இதனால், உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்று நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தனர்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை நம் முன்னோர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர். உணவுமுறை பழக்கத்தில் எந்த உணவை எப்படி, எவ்வளவு, எப்பொழுது சாப்பிட வேண்டும் என்பதையும் வகுத்து வைத்திருந்தனர். 'பசித்தப் பின் புசி', அதாவது நன்றாகப் பசித்தப் பின்புதான் சாப்பிட வேண்டும்; பசி இல்லாதபோது சாப்பிட வேண்டாம்; பசிக்கும்போதும் சாப்பிடாமல் இருக்க வேண்டாம் என்று எச்சரித்தனர். தொடர்ந்து, எரிச்சல், கோபம், இயலாமை, குழப்பம் போன்ற எதிர்மறை உணர்ச்சிகள் **மேலோங்கும்** போதும் சாப்பிடுவது கூடாது என்றும் கூறினர். அப்படி உண்ண நேரிட்டால், அஃது உணவின் ருசியையும் தன்மையையும் மறக்கச் செய்யுமாம். மேலும், சாப்பிடும் உணவை நன்கு இரசித்து ருசித்து மெல்ல மென்று உண்ண வேண்டும் என்பதையே 'நொறுங்கத் தின்றால் நூறு வயது. வாழலாம்' என அனுபவத்திலும் சொல்லிச் சென்றனர்.

தற்போதைய காலக்கதியின் வேகத்தோடு போட்டிப் போட்டுக் கொண்டு வாழும் மனிதர்களின் மத்தியில், இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை முறையிலும் உணவுப் பழக்கங்களிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. எப்போதும் பரபரப்பு, எதிலும் பரபரப்பு என்றாகிவிட்ட வாழ்க்கைச் சூழலில் உணவு என்பது ஏதோ வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் உண்பதுபோல் ஆகிவிட்டது.

அதிலும் நிகழ்கால உணவுப் பழக்க வழக்கங்களில் இன்றைய இளைய தலைமுறையினருக்கு உடல் நலம் குறித்த அக்கறை வெகுவாகக் குறைந்தே வருகின்றது எனலாம். இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவைகளையும் வகுத்துப் பகுத்து உண்ட நமது முன்னோர் முதுமையிலும் இளமையுடன் வாழ்ந்து வந்தனர். ஆனால், இன்றைய தலைமுறையினரோ துரித உணவுகளையே பெரிதும் விரும்பி உண்கின்றனர். நாவின் ருசிக்கு அடிமையாகி ஆரோக்கியமற்ற இவ்வுணவுப் பழக்கத்தினால் 30 அல்லது 40 வயதிலேயே உடலுக்குப் பலவிதமான கேடுகளை வரவழைத்துக் கொள்கின்றனர். வாழை இலையில் உண்ணும் கலாச்சாரமும் படிப்படியாக நலிந்து நெகிழித்தட்டுகள் (பிளாஸ்டிக்), நுரைப்பம் (பொலிஸ்திரின்) பொட்டலங்கள் என இவற்றைப் பயன்படுத்தும் மோகம் மிகுந்து வருகின்றது.

நம் முன்னோர் போன்று நாமும் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ வேண்டுமென்றால் அவர்கள் பின்பற்றிய உணவு முறையை இக்காலச் சூழலுக்கு ஏற்ப பொருத்தி வாழ நம்மைத் தயார்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

(தமிழர் உணவு முறைகள்)

7 எத்தகையச் சிந்தனை ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது? (2 புள்ளி)

8 (i) தமிழர்களின் பாரம்பரிய உணவுகளின் **மூலப் பொருள்கள்** யாவை? (2 புள்ளி

(ii) நமது முன்னோர்கள் வகுத்த உணவுமுறை பழக்கத்தின் **சிறப்புகளில்** ஏதாகிலும் இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

9 கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

எதிர்மறை உணர்ச்சிகள் **மேலோங்கும்** போதும் சாப்பிடுவது கூடாது

(2 புள்ளி)

10 இளைய தலைமுறையினருக்கு நமது பாரம்பரிய உணவுகள்மீது நாட்டம் ஏற்படுவதற்கு, மேற்கொள்ள வேண்டிய **ஐந்து பரிந்துரைகளை** 50 சொற்களில் எழுதுக,

(10 புள்ளி)

**பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**

**(30 புள்ளி)**

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

“எல்லாத்துக்கும் ஓர் அளவிருக்கு. ரொம்ப மோசமா நடந்துகிறீங்கப்பா..., அன்னிக்கு என்னுடைய கைத்தொலைப்பேசிய எடுத்து எனக்கு வந்த 'வாட்ஸ்அப் எல்லாத்தையும் படிச்சிருக்கிங்க..., என் கூட்டாளிங்ககிட்ட எனக்குக் காதலி யாராவது இருக்காங்களான்னு கேட்டிருக்கிங்க...! என்னப்பா இதெல்லாம்...? என் எல்லா நடவடிக்கைகளையும் ஆராய ஆரம்பிச்சிட்டிங்க..! நான் உங்க பிள்ளப்பா...! எப்படி உங்களை மீறி தப்புச் செய்வேன்? தயவுசெய்து என்னை நம்புங்கப்பா...!”

தம்பியின் குமுறலில் அப்பா உண்மையாகவே நிலைகுலைந்து போனார். ஆழ்ந்த சிந்தனையோடு தன் அறைக்குள்ளே போய்விட்டார்.

* * * * * * *  * * * * * * *  * * * * * * *

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அப்பாவுக்கும் தம்பிக்குமான உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியிருந்தது. அப்பாவின் கட்டளைகளை அறிவிக்கும் தூதுவராக அம்மாவும் தம்பியின் தேவைகளை முன்வைக்கும் தரகராக நானும் மாறிப் போயிருந்தோம். எங்கள் வீடு அமைதிப் பூங்காவாகியது. அந்த அமைதிக்கு மணிச்செல்வன் என்ற தம்பியின் பெயரில் வந்த கடிதம் குண்டு வைத்தது. அன்று, தம்பிக்கு உபகாரச் சம்பளத்தோடு தனியார் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கடிதம் வந்திருந்தது. தம்பி எதை எதிர்பார்த்தானோ அது நடந்தே விட்டது. சாடை மாடையாய்ப் பேசிக் கொண்டிருந்த அப்பா அன்று நேரடியாகவே களத்தில் இறங்கியது, தம்பியின் வயிற்றில் **புளியைக் கரைத்துவிட்டது**.

“ஏன்டா... யாரைக் கேட்டு நீ பொறியியல் துறைக்கு எழுதிப் போட்ட...? மருத்துவத்துறைக்கு எழுதிப்போடச் சொல்லுன்னு உங்கம்மாகிட்ட சொல்லியிருந்தேனே..., உன் அறிவுக்கு அது எட்டலயா...?” அப்பாவின் குரல் உச்சத்தில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

"இல்லப்பா..., எனக்கு மருத்துவத்துறையில் நாட்டம் இல்ல..., மருத்துவராகவும் பிடிக்கல... மருத்துவப் படிப்பு அவ்வளவு எளிமையா இருக்காது. நிறைய செலவாகும்; கடுமையா படிக்கணும்; அதுக்கு ஆர்வமும் இருக்கணும்; அது எனக்கு இல்லப்பா..." தம்பி குழைந்து குழைந்து பேசினான்.

"ஏன்டா...! எல்லாத்தையும் நீயே முடிவு செய்வியா? உன் எதிர்காலத்தை முடிவு செய்ய எனக்கும் உரிமை இல்லையா? என் பிள்ளைகளில் ஒருவராது *டாக்டரா* ஆகனமுன்னு எனக்கும் ஆசை இருக்காதா?"

நாளைக்குப் பங்சாருல இருக்கிற ஒரு *'ஏஜெண்டை'* பார்க்கப் போறோம்.

இரஷ்யாவா? இந்தோனேசியாவா? எந்த நாட்டில் படிக்கப் போற என்பதை மட்டும் நீ முடிவு செய்..."

எவ்வளவு செலவாகும்னு சொல்லு.... நான் என் தலையை அடமானம் வெச்சாவது படிக்க வைக்கிறேன்..." என்று கூறிவிட்டு வெளியேறினார்.

அப்பாவின் குரலில் ஆதங்கமும் கொதிப்பும் ஆர்ப்பரித்து நின்றன.

தம்பி மணிச்செல்வனோ வாடிய முகத்துடன் தன் அறைக்குள் சென்றான்.

மறுநாள்..,

எங்குத் தேடியும் தம்பியைக் காணவில்லை. அவன் அறையின் மேசைமீது ஒரு கடிதம் மட்டும் எங்களை அதிர்வோடு அழைத்தது. கடிதத்தை நான் உரக்க வாசிக்கின்றேன்.

*அன்புள்ள அப்பாவுக்கு...,*

*என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் எதிர்பார்ப்பையும் முடிவையும் புறக்கணித்துவிட்டுப் போகும் தைரியம் எனக்கு எப்படி வந்தது என்றே விளங்கவில்லை. உங்களுக்கு என் மீது அடங்காத கோபம் இருக்கும். அது நியாயமானதுதான். உங்கள் ஆசையை என் மீது திணித்ததாக நான் கொஞ்சமும் எண்ணவில்லை. அப்படியே இருந்தாலும் ஏதும் இல்லை. சிறுவயது முதலே எனது எல்லா தேவைகளையும் பூர்த்திச் செய்த தாங்கள் எனது எதிர்காலம் குறித்து ஆசைப்படுவதில் தப்பில்லைதான். ஆனால், என்னால்தான் உங்களின் ஆசையை நிறைவேற்றி வைக்க முடியவில்லை. அதற்காக உண்மையாகவே வருந்துகிறேன். மருத்துவர், வழக்கறிஞர். விமானி என்று வேலை செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பதெல்லாம் இன்று மலையேறிவிட்டது அப்பா; காலம் மாறிவிட்டது. எனக்கும் வளமான வாழ்க்கை காத்திருக்கிறது. எத்தகையப் போராட்டமாக இருந்தாலும் அதைச் சமாளிக்கும் திறனை என்னுள் விதைத்துள்ளீர்கள். கவலை வேண்டாம். என்னை நம்புங்கள்...! அடுத்தப் பருவ விடுப்பில் கண்டிப்பாக வீட்டுக்கு வருகிறேன்... உங்கள் மகனை மன்னியுங்கள் அப்பா...!*

*இப்படிக்கு,*

**மணிச்செல்வன்**

கடிதத்தைப் படித்து முடித்து அப்பாவைப் பார்க்கிறேன்; அவரின் விழி ஓரங்களில் கண்ணீர் ஓரங்கட்டி நிற்கிறது. அப்பா முழுவதுமாய் உடைந்து போயிருக்கிறார் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. அம்மாவைப் பார்க்கிறார் அப்பா.

"ஏம்மா...! பையன் எந்தப் பல்கலைக்கழகத்திற்குப் போயிருக்கிறான்? பையன் கையில செலவுக்கு ஒரு காசும் இருக்காதே...! நாளைக்குப் பையனைப் போய்ப் பார்த்துட்டு வரலாமா?" அப்பாவின் குரல் நெகிழ்ந்து போயிருந்தது. அந்த நெகிழ்வில் தம்பியின் முடிவை அப்பா அங்கீகரித்திருப்பதை என்னால் மெல்ல உணர முடிந்தது.

**மு.கோபாலன்@தமிழரசு**
***விரிசல் சுவர்கள்***
சில மாற்றங்களுடன்

11 அப்பாவின் இரண்டு **பண்புநலன்களை** எழுதுக.

(2 புள்ளி)

12 (அ) மணிச்செல்வன் அப்பாவிடம் கோபமாகப் பேசியதற்கான **காரணங்கள்** யாவை?

(4 புள்ளி)

(ஆ) அப்பா, மணிச்செல்வனின் நடவடிக்கைகளை ஆராய்ந்ததன் **நோக்கங்களுள்** இரண்டனைக் குறிப்பிடுக.

(4 புள்ளி)

13

**புளியைக் கரைத்துவிட்டது**

என்னும் சொற்றொடர் உணர்த்தும் **சூழலுக்கு ஏற்ற பொருள்** யாது?

(2 புள்ளி)

14 (அ) அப்பாவின் முடிவுக்கு எதிராக மணிச்செல்வன் எடுத்த முடிவு சரியானதா? விளக்குக.

(4 புள்ளி)

(ஆ) இச்சிறுகதையின்வழி எழுத்தாளர் பெற்றோர்களுக்கு உணர்த்தும் **கருத்துகள்** இரண்டனை எழுதுக.

(4 புள்ளி)

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது **சொந்த மொழிநடையில் விளக்கம்** எழுதுக.

**செய்திடுங்கள்!**

பிறமொழிக் கலப்படப் பேச்சைக் கைவிடுங்கள்
பிழை இன்றி தமிழையே பேசிப் பழகுங்கள்
அறநூல் திருக்குறளைப் படித்திடச் செய்யுங்கள்
அறிவுள்ள பிள்ளையாக்கி அவையின்முன் வையுங்கள்!
பெண்ணுக்கு முழுமையாய்க் கல்வியை அளியுங்கள்
பிள்ளைக்குள்ள உரிமை பெண்ணுக்கும் தாருங்கள்
பண்ணில் சிறந்த தமிழ்ப் பண்ணையே பாடுங்கள்
பகுத்தறிவு நிறைந்த பெற்றோராய் வாழுங்கள்!

**- 'கலைமாமணி' கவிஞர் ந.மா. முத்துக்கூத்தன்**

(10 புள்ளி)

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**
**(20 புள்ளி)**
**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16 கொடுக்கப்பட்டுள்ள மரபுத்தொடரைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**கரைத்துக் குடித்தல்**

(2 புள்ளி)

17 கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற திருக்குறளை எழுதுக.

**ஊக்கம் உடையவர்கள்தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம் இல்லாதவர்கள் எவ்வகை செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள்.**

(2 புள்ளி

18 கோடிடப்பட்ட செய்யுளடிகளின் பொருளை எழுதுக.

**<u>என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்</u>**
**<u>வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;</u>**
**கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு**
**நடுங்குதுயர் எய்தி, நாப்புலர வாடித்,**
**தந்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;**
**- சிலப்பதிகாரம்**

(4 புள்ளி)

19 கீழ்க்காணும் பகுதியில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

இன்று பெரும்பாலோர் சதா பேசுவதை மிக எளிமையான வேலை எனக் கருதுகின்றனர். அதனால்தான், பலர் மேடையில் பேசிவிட்டு நாட்டுக்குத் தொண்டு செய்துவிட்டதாக எண்ணி அமைதி அடைகிறார்கள் என்கிறார் டாக்டர் மு.வரதராசனார். சதா பேசும் இவர்கள் கடைத்தெருக்களில் கருத்துத் தெளிவின்றி எதையாவது பேசிக்கொண்டிருப்பதில் கொஞ்சங்கூட சலிப்பு அடைவதில்லை. **(I இரட்டைக்கிளவி)**

இதில் மிகுந்த வேதனைக்குரிய விசயம் என்னவெனில், வெட்டிப்பேச்சுப் பேசி பொன்னான நேரத்தை வீணடிக்கும் பலர், நல்ல நேரம் வீணாகுவதை எண்ணி கொஞ்சங்கூட வருந்துவதே இல்லை; பொருட்படுத்துவதுமில்லை. இப்படிப்பட்டவர்களைச் சந்திக்கும்போது இவர்களின் குறைகளைச் சுட்டிக் காட்டி அவர்களைக் கண்டித்துக் கூறி நல்வழிப்படுத்துதல் நம் ஒவ்வொருவரின் கடமை என்பதையும் நாம் உணராமலேயே இருக்கிறோம். **(I மரபுத்தொடர்)**

சிறுவயது முதலே காலத்தை மதிக்கும் பண்பை ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளிடத்தில் வளர்க்க தவறிவிடுகின்றனர். இதனால், பள்ளிப்பருவத்தில் பலர், பள்ளியைப் பொழுதுபோக்கு மையமாகவும் நண்பர்களைச் சந்திக்கும் தளமாகவும்தான் கருதுகின்றனர். படிப்பதைவிட நண்பர்களுடன் அரட்டையடித்துப் பொழுதைக் கழிப்பதையே விரும்புகின்றனர். பெரும்பாலோர் உரிய காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளை மறந்துவிட்டு பொன்னான காலத்தை வீணே கழிக்கின்றனர். அதனை எண்ணி வருந்திப் பயனில்லை என்பதையும் உணராமலேயே இருக்கின்றனர். **(III பழமொழி)**

ஆனால், பெற்றோர்களோ பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணிப் பல கனவுகளுடன் நேர காலம் கருதாமல் உழைக்கின்றனர். இத்தகைய பெற்றோரின் தியாகத்தையும் எதிர்பார்ப்புகளையும் பிள்ளைகள் நினைத்துப் பார்க்கத் தவறி விடுகின்றனர். மேலும், தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்வதிலிருந்தும் பின்வாங்கி விடுகின்றனர். இத்தகைய பிள்ளைகளின் பெற்றோர் உழைப்பும் அர்ப்பணிப்பும் பயனற்றுப் போகும் என்பது மட்டும் திண்ணம். **(IV உவமைத்தொடர்)**

(12 புள்ளி)

**பிரிவு ஈ : இலக்கணம்**
**(20 புள்ளி )**

**கேள்விகள் 20 முதல் 22 வரை**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் சொற்கள் எவ்வகை **குற்றியலுகரம்** என்பதை எழுதுக.

(i) தோடு
(ii) சங்கு

[2 புள்ளி)

(ஆ) **மெய் எழுத்து** எத்தனை வகைப்படும்? அவற்றை எழுதுக.

(4 புள்ளி)

21 (அ) கீழ்க்காணும் வாக்கியங்களில் **விழைவு வாக்கியத்தைத்** தெரிவு செய்க.

A பன்னாட்டுக் கருத்தரங்கைக் கல்வி அமைச்சர் திறந்து வைத்தார்.
B நூல்நிலையத்தில் அமைதியைக் கடைப்பிடியுங்கள்.
C ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

(2 புள்ளி)

(ஆ) **நான்காம் வேற்றுமை உருபை** ஏற்றுவரும் வாக்கியம் ஒன்றனை எழுதுக.
(2 புள்ளி)

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (பத்தியை மீண்டும் எழுத வேண்டாம், நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்)

அன்புள்ள அம்மா,

எதிர்காலச் செல்வ வளத்தைவிட மான்புகள்தான் மிக முக்கியம் என்று சொல்லித் தந்தீர்கள். கடினமான முடிவுகளுள் எவை மிகச் சரியானவை என்று பகுத்தாயும் திறனையும் என்னுள் வளர்த்தீர்கள். பலமான நம்பிக்கைகளால் சிகரத்தையே அசைக்க முடியும் என்றும் போதித்தீர்கள். ஏழைகளுக்கு கருணை காட்டுவது அவசியம் என்ற மனிதநேயத்தையும் விதைத்தீர்கள். புகல்மாலைகளைக் காட்டிலும் கண்ணியம்தான் உயர்ந்தது என்ற பக்குவத்தை என்னுள் கொண்டு வந்தீர்கள். இதற்கெல்லாம் நீங்களே ஒரு உதாரணமாகவும் இருந்துப் போதித்தீர்களே அம்மா!, உங்களை நான் மிகவும் நேசிக்கிறேன்.

உங்கள் அன்பு மகள்,
கவின்முல்லை

(10 புள்ளி)

தமிழ்மொழி தாள் 2 (6354/2)

**2017**

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
**[30 புள்ளி]**

கீழ்க்காணும் கருத்துப்படத்தைக் கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

**நகர்வது கடிகார முள் அல்ல!**
**உமது வாழ்க்கை!**



1 இப்படம் உணர்த்தும் கருத்து யாது?

(2 புள்ளி)

2 கீழ்க்காணும் பனுவல் உணர்த்தும் முக்கிய செய்தி யாது?

**என் அருமைத் தம்பி,**

- திரும்பிப் பார்; என்னைப் பார்; உன் இளமுகம் நோக்கிக் கேட்கிறேன். நீ யார்? உன் மூதாதையர் யார்? சற்றே சிந்தித்துப் பார்; உன் வரலாற்றைக் கேள்.

- பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சாவகத்திலிருந்து (ஜாவா) கடாரம் (கெடா) வந்தடைந்து, வணிகத்துடன் ஆட்சி அமைத்தவனும் உன் முந்தையனே!

- இந்தியாவிலிருந்து இங்குத் தருவிக்கப்பட்ட உன் முன்னோர்கள் இடுப்பொடிய உழைத்து, பெருங்காடுகளை அழித்து, தோட்டங்கள் அமைத்து, சாலைகள், தொடர்வண்டிப் பாதைகள் உருவாக்கி, தன் உடல், பொருள், ஆவி அனைத்தும் ஈந்து உருவாக்கிய நாடுதான் இன்றைய மலேசியா.

- உன் முன்னோர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இங்கு வாழ்ந்தனர். நீ அவர்கள் வழிவந்தவன். நீ சஞ்சிக் கூலியின் பரம்பரை அல்லன். இந்நாட்டின் பெருமைமிகு குடிமகன். நாமிருக்கும் நாடு நமதென்று அறி. இஃது உனக்கும் உரியதென்று உணர்.

(நன்றி : மயில் மாத இதழ்)
எடுத்தாளப்பட்டது

(2 புள்ளி)

3 கீழ்க்காணும் உரைவீச்சு உணர்த்தும் படிப்பினை யாது?

**பாரி வள்ளல் போலத்தான்...**

**பாதையோரம்
கொழுத்திய
வெயிலில்
ஏழைப்பாதம்
கொதிக்கவே...**

**துடித்தது மனம்
கொடுத்தது கை
தன்கால் விலையுயர்ந்த
செருப்பை ..!
பெரிது
மனமே...
செருப்பல்ல!**



(நன்றி : இணையம்)

(2 புள்ளி)

4 கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கில் குமுதனின் கூற்று எதை உணர்த்துகிறது?

**குமுதன்** : **வாழ்க்கையில் நான் ரொம்ப அடிபட்டவன் டாக்டர்...**

**மருத்துவர்** : **அப்படியா....! இதுவரை என்னிடம் ஒருமுறைகூட கட்டுப் போட்டுக்க வந்ததே இல்லையே?**



(2 புள்ளி)

5 கீழ்க்காணும் பகுதி வாயிலாக உமக்கு ஏற்படும் **விழிப்புணர்வு** யாது?

**தானம்...**

இரத்ததானம் என்பது ஒருவர் தம் இரத்தத்தைப் பிறருக்குப் பயன்படும் வகையில் தயாள குணத்துடன் தானமாக வழங்குவதாகும். பொதுவாக, ஆரோக்கியமான ஒரு மனிதனின் உடலில் 5 முதல் 6 லிட்டர் இரத்தம் உள்ளது. இரத்ததானம் செய்வோரிடமிருந்து ஒரு நேரத்தில் 450 மில்லிலிட்டர் இரத்தமே எடுக்கப்படுகிறது. அவ்வாறு எடுக்கப்பட்ட இரத்தம் இரண்டு வாரங்களுக்குள் நாம் உண்ணும் உணவின் மூலம் மீண்டும் உற்பத்தியாகிவிடும். ஆக, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நாம் இரத்ததானம் செய்யலாம். இதனால், நம் உடலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதுமட்டுமல்ல, நம் உடலில் புது இரத்தம் உற்பத்தியாகி, உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருகிறது. அறுவைச் சிகிச்சையின்போதும் விபத்தின்போதும் அல்லது ஏதாவது ஒரு வழியில் ஒருவருக்கு ஏற்படும் இரத்த இழப்பை ஈடு செய்து அவருடைய உயிரைக் காக்கும் பொருட்டு இரத்ததானம் தேவைப்படுகிறது. சிலர் தன்னார்வத்துடன் இரத்ததானம் செய்ய முன் வருகின்றனர். சிலர் சமூக சேவை அமைப்புகளின் வழிகாட்டுதலில் இரத்ததானம் செய்து வருகின்றனர்.

(2 புள்ளி)

6 முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் சிறப்புகளுள் **இரண்டனை** எழுதுக.

**முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்**



தமிழுக்காக தனது வாழ்நாள் முழுக்கப் பாடுபட்டவர் 'முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள். தமது எழுத்தால், பேச்சால், ஆற்றலால் தமிழுக்குப் பெருமை சேர்த்துத் தமிழக வரலாற்றில் தனியிடம் பெற்றவர். நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட கி.ஆ.பெ. அவர்கள், பெரியார் தொடங்கிய 'குடியரசு', 'விடுதலை' ஆகிய பத்திரிகைகளில் துணையாசிரியராகப் பணிபுரிந்தார். 1937ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இந்தித் திணிப்புக்கு எதிராகத் தமிழர்களைத் தட்டி எழுப்புவதில் முக்கியப் பங்கு வகித்தார். தமிழ்நாட்டுக்கும் மொழிக்கும் தொண்டாற்ற 'தமிழர் நாடு' என்ற பத்திரிகையை நடத்தினார். தமிழ்நாட்டில் எழுத்தும் பேச்சும் கைவரப் பெற்றுச் சிறந்து விளங்கியவருள் கி.ஆ.பெ.விசுவநாதமும் ஒருவர். வெண்கலக்குரலில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் உயர்ந்த நிகழ்ச்சிக்கு நிகரானவை. சொல்ல வந்த கருத்தை நேரடியாக மனத்தில் பதியும்படி சொல்லும் ஆற்றல் உடையவர். அவர் வெளிப்படுத்தும் கருத்து எப்பொழுதுமே கட்டுக்கோப்புடன் விளங்கும். 'தமிழ்ச்செல்வம்', 'தமிழ் மருந்துகள்', 'மும்மணிகள்', 'திருக்குறள் புதைபொருள்' உள்பட 25 நூல்கள் எழுதியுள்ளார். இப்பெருமகனார் 96 வயதுவரை பெருவாழ்வு வாழ்ந்து, 19ம் திகதி டிசம்பர் 1994ல் சென்னையில் மறைந்தார்.

(2 புள்ளி)

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

சல்லிக்கட்டு தமிழர் விளையாட்டுகளில் மிகப்பழமை வாய்ந்த ஒரு வீரவிளையாட்டு ஆகும். பண்டைய இலக்கியங்களில் இதுவே ஏறுதழுவுதல் என்றும் அழைக்கப்பட்டது. தமிழகத்தின் சில பகுதிகளில் இவ்விளையாட்டு சல்லிக்கட்டு என்றும் எருதுகட்டு, மஞ்சுவிரட்டு என்ற பெயர்களிலும் விளங்குகிறது. இதில் காளைகள் மட்டுமே பங்குபெறுகின்றன.

தமிழகத்தில், குறிப்பாக நாட்டுப்புறத்தில் உழவுத் தொழில்புரியும் மக்கள் விரும்பி விளையாடும் விளையாட்டு இது. அறுவடை முடிந்தபின் உழவர்களிடம் கைநிறையப் பணமிருக்கும்; போதிய ஓய்வும் இருக்கும். எனவே, இக்காலத்தில்தான் அவர்கள் நாடகங்கள், தெருக்கூத்து, மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, கும்மி, கோலாட்டம், பாவைக்கூத்து எனப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். இச்சமயத்தில்தான் சல்லிக்கட்டுப் போன்ற வீர விளையாட்டும் இடம்பெறும். கதிர் அறுக்கப்பட்டபின், வயல்வெளியில் காளைகளை ஓடவிட்டு, விரட்டிப்பிடித்து விளையாடும் அளவுக்குப் போதிய வெற்றிடம் இருப்பதால் இவ்விளையாட்டு விளையாட இக்காலக்கட்டம் மிகுந்த ஏற்ற காலமாக அமைகிறது.

இந்தச் சல்லிக்கட்டு விளையாட்டில் பங்குபெறும் காளைகளை இளம்பருவம் முதல் கருதி வளர்ப்பார்கள். இக்காளைகளுக்கு அரிசி, பருத்தி விதை, கீரை போன்ற ஊட்டமிகு உணவுகளையே ஊட்டி ஊக்கமாகப் பராமரிப்பார்கள். இதனால், இந்தக் காளைகள் உடலாலும் இயல்பாலும் மிகுந்த திமிர்ப்பும் வீறும் கொண்டவையாக வளரும். மேலும், இளமையிலேயே சிறு துணித்துண்டுகளை அவற்றின் முன்புறம் அசைத்து மருட்சியூட்டியும் பல வகைகளில் சினமூட்டியும் பழக்கி விளையாடுவார்கள்.

சல்லிக்கட்டு விளையாட்டுக்கு முன்னர் காளைகளைக் குளிப்பாட்டி, உணவூட்டி, அழகுபடுத்துவார்கள். மேலும், வண்ணக்குழம்பு பூசிக் கழுத்தில் புளியமிளாறு (புளியமரத்தின் இளங்கிளை) கொண்டு செய்த வளையத்தை அணிவிப்பார்கள். கழுத்திலும் கால்களிலும் சலங்கைகள் கட்டுவார்கள். கொம்பில் காசுமாலை அணிவிப்பார்கள்; சில வேளை, விலையுயர்ந்த பரிசுப்பொருள்களைத் துணியில் முடிந்து கொம்பில் கட்டிவிடுவதும் உண்டு. இந்தக் காசுமாலை, பரிசுமுடிச்சு போன்ற பொருள்கள் காளையை அடக்கும் வீரருக்குச் சொந்தமாகும்.

இவ்விளையாட்டுத் தொடங்குமுன், காளைகள் சிறப்புத் தொழுவத்தில் அடைக்கப்பட்டிருக்கும்; விளையாட்டுத் தொடங்கியதும் அதனை அங்கிருந்து வெளியேற்றுவார்கள். அது தொழுவத்தின் வாசலைத் தாண்டியதும் அதன் ஓட்டத்தைத் தடுத்து, அதனை அணைய அல்லது தழுவ வீரர்கள் முயல்வார்கள். இந்த அணைதல் அல்லது தழுவுதல்தான் 'ஏறுதழுவுதல்' என்று இலக்கியங்களில் குறிக்கப்படுகிறது.

காளையை அடக்க முயல்பவர்கள் கொம்புகளையே பிடிக்க முனைவார்கள். திமில் பெரிதாக இருப்பின் அதனைப் பிடிப்பார்கள். ஓட்டத்தைத் தடுத்ததும், காளை வெகுண்டு முட்டுவதற்காகத் தலையை உயர்த்தும், கொம்பை அல்லது திமிலைப் பிடித்துவிட்டாலும் அது முரட்டுத்தனமாகத் தலையை அசைத்து அவர்களை உலுப்பிவிடும்; இயலாவிட்டால் தாவிப்பாயும். இவ்வாறு பல உலுப்பல்களுக்கும் தாவுதல்களுக்கும் **தாக்குப்பிடித்து** மீண்டும் மீண்டும் முயல்பவர்களே இறுதியில் காளையைச் சோர்வுறச் செய்து அதனை அடக்க முடியும். இறுதியில், காளையை அடக்கியவர்கள் வீரர்களாகக் கொண்டாடப்படுவார்கள்; பரிசுகளும் பெறுவார்கள்.

தமிழரின் வீரவிளையாட்டு காளையை அடக்குவதேயன்றிக் கொல்வதன்று. ஆனால், சில மேலை நாடுகளில் இதுபோல் நடக்கும் விளையாட்டுகளில், காளையை அடக்குவது நோக்கமன்று. மாறாக, அம்பு, ஈட்டி அல்லது அரிவாள் கொண்டு காளையைக் கொல்பவரே வீரராகக் கருதப்படுவர். தமிழர்கள் வெறுங்கையால் எதிர்கொள்ளும் காளையை மேலை நாட்டவர் கொலைக்கருவியால் எதிர்கொள்கின்றனர். ஆனால், தமிழரின் சல்லிக்கட்டு விளையாட்டு ஒருபோதும் காளையைக் கொல்வதோ காயப்படுத்துவதோ இல்லை. பண்டைய தமிழரின் வீரம், அறம் தவறாததும் அவர்தம் பண்பாட்டைச் சார்ந்ததும் ஆகும்.

(உங்கள் குரல் - சனவரி 2005]

7 சல்லிக்கட்டு விளையாட்டு எப்போது நடைபெறும்?

(2 புள்ளி)

8 (i) சல்லிக்கட்டுக் காளைகள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றன?

[2 புள்ளி)

(ii) சல்லிக்கட்டு அறம் சார்ந்த விளையாட்டு என்பதற்கான சான்றுகள் யாது?

(2 புள்ளி)

9 வாக்கியத்தில் கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

இவ்வாறு பல உலுப்பல்களுக்கும் தாவுதல்களுக்கும் **தாக்குப்பிடித்து** மீண்டும் மீண்டும் முயல்பவர்களே இறுதியில் காளையைச் சோர்வுறச் செய்து அடக்க முடியும்.

(2 புள்ளி)

10 தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் தொடர்ந்து நிலைத்திருக்க மேற்கொள்ள வேண்டிய **ஐந்து நடவடிக்கைகளை** 50 சொற்களில் எழுதுக.

(10 புள்ளி)

**பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**

**(30 புள்ளி)**

*கேள்விகள் 11 முதல் 14 வரை கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

அலுவலகம் வந்த பின்னும் மனம் வேலையில் ஒட்ட மறுத்தது. ச்சே... குழந்தையின் பிறந்தநாளைக் கூட நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லையே...! நல்ல வேளை... வேலைக்குப் புறப்படும்போதே என் மனைவி பூந்தென்றல் நினைவுப்படுத்தினாள். என் மேல் எனக்கே கோபமாக வந்தது.

தேன்முல்லை... எவ்வளவு அழகான பெயர். சொல்லும் போதே மனத்தோடு நாவும் சேர்ந்து இனிக்கிறது. ஆனால், அந்த அழகான பெயரை எத்தனை முறை என் நா உச்சரித்துள்ளது? அவளை அப்படி அழைத்துக் கொஞ்சியதாகவும் அதிகம் நினைவில்லை. குழந்தையை மொத்தமாய் என் மனைவி பூந்தென்றலிடம் விட்டு விட்டேன். அலுவலகப் பணி என்னை விழுங்கியதில் குழந்தையுடன் பிணைக்கப்பட்ட சங்கிலி மெல்ல அறுந்து கொண்டிருக்கிறது...

போன மாதம் ஒரு நாள், தேன்முல்லை வேகமாய் ஓடி வந்து கால்களைக் கட்டிக் கொண்டாள். பாலர் பள்ளியில் அவள் வரைந்த ஓர் ஓவியத்தை எடுத்துக் காட்டியபோது **அவள் முகம் விளக்கேற்றி வைத்ததுபோல் வெளிச்சமிட்டது.** குச்சி குச்சியாய் மனிதர்கள் புன்னகை பூத்தபடி நின்றிருந்தனர். ஒரு குச்சி மனிதனின் முகத்தில் எலி வால் மீசை வரைந்து, கண்ணாடி இருந்தது. அது நானாம்... சொல்லி விட்டுச் சிரித்துக் கொண்டாள். நெற்றியில் பெரியதாய்ப் பொட்டு வைத்திருந்த உருவம் அம்மா எனவும் இரட்டைச் சடை போட்டுள்ள குட்டை உருவம் அவள் எனவும் சொல்லி வாய் நிறைய சிரிப்பைச் சிந்தியபோது...

“அடடே... எவ்வளவு அழகா இருக்கு!”
"என் செல்லம் நல்லா படம் வரையுதே!”
“என் செல்லம் கெட்டிக்காரி!”

இதில் ஏதாவது ஒன்றைச் சொல்லியிருந்தால் குழந்தை எவ்வளவு மகிழ்ந்திருப்பாள்! உலகத்திலேயே தான் வரைந்த ஓவியமும் அந்தக் குச்சி மனிதர்களும்தாம் அழகானவர்கள் எனச் சொல்லியிருந்தால் மனசெல்லாம் மல்லிகையாய் முகிழ்ந்திருப்பாள். ஆனால், நான் என்ன செய்தேன்...?

“அப்பா அசதியா இருக்கேன்... அம்மாகிட்டே போ...ம்மா!” என்றேன்.

நிச்சயம் அந்தக் கணப்பொழுதில் அவளோடு அவள் வரைந்த குச்சி மனிதர்களும் உதிரிகளாக உடைந்து போயிருப்பார்கள். இப்போதுகூட குழந்தையின் அறையில் ஒட்டப்பட்டிருக்கும் அந்த ஓவியத்தைக் காணும் போதெல்லாம் ஏதோ ஒருவித உணர்வு மனத்தைப் போட்டுப் பிசையும்.

தொலைபேசி சிணுங்கியது. என் நினைவலையும் கலைந்தது, *'ரிசீவரை'* வரை எடுத்தேன். அடுத்த முனையில் மேலாளர் பேசினார்.

*"மிஸ்டர்* கணேசன்...! சீனாவுக்கு அனுப்ப வேண்டிய *'ஆர்டர் ரெடி'* ஆச்சா? நாளைக்குக் காலையில் அனுப்ப வேண்டியிருக்கு. இன்னைக்கே முடிச்சிடுங்க."

*"ஒகே சார்!* தவறாம இன்னிக்கே முடிச்சிடறேன்!"

எல்லாவற்றையும் செய்து முடிக்க மணி ஒன்பதுக்கும் மேலாகிவிட்டது. குழந்தையின் பிறந்தநாள் நினைவுக்கு வந்தது. வெறுங்கையோடவா போவது? போகும் வழியில் ஒரு கரடி பொம்மையை வாங்கிக் கொண்டேன். நிச்சயம் மகள் தேன்முல்லை இதை எதிர்பார்த்திருக்கமாட்டாள் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். வீடு நிசப்தத்தில் மூழ்கிக் கிடந்தது. சுவர் விளக்கிலிருந்து மஞ்சள் ஒளி கசிந்து கொண்டிருந்தது. பூந்தென்றல் உறங்காமல் இருந்தாள்.

அவளை எதிர்கொள்ளவே என்னவோ போலிருந்தது. ஏதாவது கேட்பாள்; என் மேல் கோபம் கொள்வாள் என எதிர்ப்பார்த்தேன். அவள் எதுவும் கேட்கவில்லை. குற்ற உணர்ச்சி கம்பளிப்பூச்சியைப்போல் உடலெங்கும் நெளிந்து கொண்டிருந்தது.

*"ஆபிஸ்ல* அவசரமான வேலை..."

"எல்லாம் காலையில் பேசிக்கலாம், சாப்பிட்டுப் படுங்க..." மெதுவாய்ச் சொன்னாள் மனைவி பூந்தென்றல்.

மேசையில் தட்டை எடுத்து வைத்தாள். ஏனோ எனக்குப் பசிக்கவில்லை. தேன்முல்லையின் அறைக்குள் நுழைந்தேன். சாந்தம் ததும்பிய முகத்தோடு உறங்கிக் கொண்டிருந்தாள். கரடி பொம்மையை அவள் பக்கத்தில் வைத்து விட்டு அவள் நெற்றியில் முத்தமிட்டேன். அறையில் ஒட்டியிருந்த ஓவியம் கண்ணில் விழுந்தது. அன்று தேன்முல்லை காட்டிய அதே குச்சி மனிதர்கள் ஓவியம். சிறிய மாற்றங்களுடன்... எனது பற்கள் நீண்டிருந்தன. தலையில் இரண்டு கொம்புகள் முளைத்திருந்தன.

"குழந்தை அழுதாளா..?"

"இல்ல... பழகிடுச்சு அவளுக்கு!"

இருகன்னத்திலும் அறைந்தது போலிருந்தது எனக்கு.

**மகேந்திரன்**
**குழலினிது... யாழினிது**
[எடுத்தாளப்பட்டது)

11 கணேசனுக்குத் தன்மீதே கோபம் ஏற்பட்டதற்குக் காரணம் யாது?

(2 புள்ளி)

12 (அ) இச்சிறுகதையில் கணேசனின் பண்புநலன்களுள் **இரண்டனை** அவை வெளிப்படுத்தும் சம்பவத்தோடு குறிப்பிடுக.

(4 புள்ளி)

(ஆ) தேன்முல்லையின் எதிர்பார்ப்புகள் என்னவாக இருக்கும்?

(4 புள்ளி)

13 **அவள் முகம் விளக்கேற்றி வைத்ததுபோல் வெளிச்சமிட்டது** என்னும் தொடர் உணர்த்தும் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது?

(2 புள்ளி)

14 (அ) இச்சிறுகதை சமுதாயத்திற்கு உணர்த்தவரும் **இரண்டு** செய்திகளைக் குறிப்பிடுக.

(4 புள்ளி)

(ஆ) இச்சிறுகதை வாயிலாக உமக்கு ஏற்பட்ட உணர்வுகள் **இரண்டனை** விளக்கி எழுதுக.

(4 புள்ளி)

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது **சொந்த மொழிநடையில் விளக்கம்** எழுதுக.

**நாளைய தலைவன்!**

தம்பி! நீதான் நாளைய தலைவன்!
வெம்பிய கனிபோல் வீணா காதே!
நம்பிக்கை வை, நீ! நாட்டை நடத்துவாய்!
பள்ளிப் படிப்பினில் மனத்தைப் பதியவை!
அள்ளி அள்ளிஉண்; ஆர்வமொடு, கல்!
கல்வி தருபவர் கல்வித் தந்தை!

செல்வம் என்பது கல்விச் செல்வமே!
பொருள் நலம் புல்லியர் கைகளில் இருக்கும்!
தேயாப் பொருளே கல்விச் செழும்பொருள்!
ஓயாது தேடு! மேம்படு உலகில்!
செம்புது வெள்ளமாய் உலகினில் பாய் நீ!
நம்புவாய் தம்பி, நீ நாளைய தலைவன்!

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

(10 புள்ளி)

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**
**[20 புள்ளி)**

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16 கொடுக்கப்பட்டுள்ள **உவமைத்தொடரைப்** பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**குன்றின் மேலிட்ட விளக்கு போல**

(2 புள்ளி)

17 கொடுக்கப்பட்டுள்ள **திருக்குறளுக்கு** ஏற்ற பொருளை எழுதுக.

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு (783)**

(2 புள்ளி)

18 கோடிடப்பட்டுள்ள **செய்யுளடிகளின்** பொருளை எழுதுக.

**சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்**
**தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - <u>மாதர்</u>**
**<u>அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்</u>**
**<u>ஒரு கூட்டில் வாழ உலகு</u>**
-நளவெண்பா

(4 புள்ளி)

19 கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

சுதந்திரம் பெற்ற தென்னாப்பிரிக்காவின் முதல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல்சன் மண்டேலா அந்நாட்டுத் 'தெப்பு' பூர்வக்குடியினர் சமூகத்தில் 1918ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் பிறந்தார். அவரின் தகப்பனார் தன் மகனைக் கல்வியில் கெட்டிக்காரராகவும் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கும்படியாகவும் உருவாக்கினார். 1927ஆம் ஆண்டு மண்டேலாவின் தகப்பனார் காலமானதும் அவர் வழிகாட்டுதல் இன்றி தவித்தார். **(I உவமைத்தொடர்)**

நெல்சன் மண்டேலா, தென்னாப்பிரிக்காவின் சுதந்திரப் போராட்டத்திற்குத் தம் பங்களிப்பைச் செய்ய தம்மைத் தயார்படுத்திக் கொள்ள கல்வியைத் தொடர்ந்தார். போர்ட் ஹெர் கலைக்கல்லூரியில் இளங்கலைப் பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். அங்கு அவர் பல கலைகளைக் கற்று அறிவில் சிறந்தவராகவும் சீரிய சிந்தனையாளராகவும் திகழ்ந்தார். **(II பழமொழி)**

சுதந்திரப் போராட்ட உணர்வு மேலோங்கி இருந்த மண்டேலா கல்லூரிப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கல்லூரியை விட்டு நீக்கப்பட்டார். கல்லூரி நீக்கம் அவரது கல்வியைத் தொடர்வதற்குப் பெரும் தடையாக அமைந்தது. **(III மரபுத்தொடர்)** இத்தகையப் போராட்டங்களுக்கு மத்தியில் நெல்சன் மண்டேலா 1942ஆம் ஆண்டு தமது இளங்கலைக் கல்வியை முடித்துச் சட்டக்கல்வியைத் தொடர்ந்தார். இதற்கிடையில், சுதந்திரப் போராட்டத்திற்காக 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலைக்குப் பின்னரும் அவரது சுதந்திரப் போராட்டம் ஓயவில்லை. இது, தென்னாப்பிரிக்க மக்களுக்கு அவர் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தியது.

தென்னாப்பிரிக்காவின் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவதற்கு இவரே பொருத்தமானவர் எனக் கருதி அப்பொறுப்பை அவரிடமே ஒப்படைத்தனர். **(IV திருக்குறள்)** இவரின் தலைமைத்துவத்தின்கீழ் மே திங்கள் 10ஆம் நாள் 1994ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவுக்குச் சுதந்திரம் கிடைத்தது. போராட்டத்துக்குத் தனது வாழ்நாளையே அர்ப்பணித்த நெல்சன் மண்டேலாவை உலக நாடுகள் பலவும் உயரிய விருதுகளை வழங்கிக் கௌரவித்தன. அந்த வகையில் சுமார் 250க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ள மண்டேலா 5 டிசம்பர் 2013இல் அன்று தனது 95ஆம் அகவையில் காலமானார்.

(12 புள்ளி)

**பிரிவு ஈ : இலக்கணம்**
**(20 புள்ளி )**
**கேள்விகள் 20 முதல் 22 வரை 20**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) **பிரித்து எழுதுக.**

i) தண்ணீர்
ii) திருவோடு (2 புள்ளி)

(ஆ) **சேர்த்து எழுதுக.**

i) பத்து + மூன்று
ii) வடக்கு + கிழக்கு
iii) எட்டு + தொகை

(3 புள்ளி)

(இ) **எச்சம்** எத்தனை வகைப்படும்? அவற்றை எழுதுக. (3 புள்ளி)

21 கொடுக்கப்பட்டுள்ள அயற்கூற்று வாக்கியத்தை **நேர்க்கூற்று வாக்கியமாக** மாற்றி எழுதுக.

**கவிஞர் கரு.திருவரசுவின் நூல் வெளியீட்டு விழாவிற்குத் திரண்டு வருமாறு ஆசிரியர் மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.**

(2 புள்ளி)

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு **அவற்றைச் சரிப்படுத்தி எழுதுக.** [பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்; நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்)

இரண்டு மரவெட்டிகள் ஓர் காட்டிற்குச் சென்றனர். மாலையில் இருவரும் சந்திக்கையில் ஒருவனிடம் மட்டும் அதிகமான விறகுகள் இருந்தன. மேலும், அவன் களைப்படையாமலும் இருந்தான். மற்றொருவன் ஆச்சரியத்தால் அவனால் மட்டும் இஃது எப்படி சாத்தியமானது என்று அவனிடமே கேட்டுவிட்டான். அதற்கு நண்பன், "சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு இடைவிடாமல் வெட்டிக் கொண்டே இருந்தேன், " என்றான்.

மறுநாள், அவனும் அதேபோல் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு இடைவிடாமல் மரம் வெட்டியும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்ட முடியவில்லை. மறுநாள், நண்பனின் நடவடிக்கையை ஒலிந்திருந்து பார்க்கத் திட்டமிட்டுத் தன் நண்பனைப் பின் தொடர்ந்து சென்றுப் பார்த்தான். அவன் நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டிவிட்டு ஓய்வாக அமர்ந்துகொண்டே தனது கோடரியை தீட்டிக் கொண்டிருந்தான்.


(10 புள்ளி)

தமிழ்மொழி தாள் 2 (6354/2)

**2016**

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
(30 புள்ளி

கீழ்க்காணும் கருத்துப்படத்தைக் கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.




1 இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது?

(2 புள்ளி)

கீழ்க்காணும் அறிவிப்பைக் கூர்ந்து வாசித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

**இலக்கியத்தைக் கற்போம் !**
**பண்பாட்டைக் காப்போம் !**

முன்னர் இலக்கியம் படித்தவர்களே
பின்னர் இலக்கியம் படைப்பதில் சிறந்து விளங்குகிறார்கள்!

இலக்கியம் படித்தவர்களே கருத்தாழமிக்க பேச்சாளர்களாகவும்
நாடறிந்த நாவலர்களாகவும் விளங்குகிறார்கள்!

இலக்கியம் படைப்பவர்களையே எழுத்தாளர்களாகவும்
கவிஞர்களாகவும் ஏடும் நாடும் இனமும் உலகும்
கொண்டாடுகின்றன

இலக்கியவாதிகளை அரசு மதித்து சிறப்பிக்கிறது!
அறிஞர்களை அனைத்துலகும் கொண்டாடுகிறது!

எனவே,
தமிழ் ஆசிரியர்களே! தமிழ் இலக்கியம் பயிற்றுவியுங்கள்!
மாண்புடைய மாணவர்களே! தவறாமல் இலக்கியம் பயிலுங்கள்!

பெற்றோர்களே, பிள்ளைகளை இலக்கியம் பயிலச் செய்யுங்கள்!
உலகெலாம் போற்றும் உயர்புகழ் பெற
எஸ்.பி.எம் தேர்வில் தவறாமல் தமிழ் இலக்கியம் எடுப்பதை
உறுதி செய்யுங்கள்!

இலக்கிய உணர்வோடு,
தலைவர்
திரு.கவியமுதன் – 0123456789
மலேசிய செந்தமிழ்க் கழகம்

2 இந்த அறிவிப்பின் **நோக்கம்** என்ன?

(2 புள்ளி)

கீழ்க்காணும் புதுக்கவிதையை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

## திறன்பேசி

**காலையில் கண்விழித்ததும் முதல் தரிசனம்
இரவில் கண்ணயர்வதும் உமது சந்திப்பிற்குப்
பிறகுதான்...**

**குடும்ப உறவில் ஓர் இடைவெளியை
ஏற்படுத்தியது நீ தான்...
ஊர்முழுக்க எங்குச் சென்றாலும்
உமது சமிக்ஞைதான்...**

**முன்பு சிலர் உம்மை கைவசப்படுத்தினர்...
இன்றோ பெரும்பாலோரை நீ
கைவசப்படுத்தி உள்ளாய்...**

**ஒரு காலத்தில் விலையில்
எட்டாக் கனி நீ...
இன்றோ பாமரர் கையிலும்
கிட்டும் கனி நீ...
உமது வளர்ச்சியிலும் அசுர வேகம்...
உலகத்தைச் சுருக்கிக் கைக்குள்
அடக்கி விட்டாய்...
கல்விமான்களின் ஏட்டுக்கல்விக்கு
விடைகொடுத்து விட்டாய்...**

**உமது அறிவியல் உறவு ஏடுவரைதான்
இரத்தப்பாச தொடர்புதான் காடுவரை...
எதற்கும் உமது உறவு எங்களிடமிருந்து
ஓரடி தள்ளியே இருக்கட்டுமே...!**

தமிழ்த்தேனீ

3 இந்தப் புதுக்கவிதை உணர்த்தவரும் கருத்து யாது?

(2 புள்ளி)

4 கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கில் காணப்படும் நபர் **எத்தகைய** தன்மையுடையவர்?



மருத்துவர் : ஐயா.... இன்று தொடங்கி ஒவ்வொரு இரவும் நீங்க கண்டிப்பா ஆட்டாரொட்டி, தோசை மட்டும்தான் சாப்பிடனும்.

நபர் : நல்லது டாக்டர். நீங்க சொன்ன உணவெல்லாம்... சாப்பாட்டுக்கு முன்பா? பின்பா?

(2 புள்ளி)

5 கீழ்க்காணும் பகுதியை வாசித்து, எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்களின் **இரண்டு** சிறப்புகளை எழுதுக.

**பாடும் நிலா எஸ்.பி.பி**



இந்தியத் திரைப்பட இசைப்பாடகர்களுள் பாடும் நிலா என்று இரசிகர்களால் அன்போடும் சிறப்பித்தும் அழைக்கப்படுபவர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் ஆவார். எஸ்.பி.பி. என்ற மூன்றெழுத்துகளால் அறியப்படும் இவர் 1946ஆம் ஆண்டு பிறந்தார். 1966ஆம் ஆண்டு முதல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி எனப் பன்மொழிகளில் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியதற்காக *கின்னஸ்* உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். எம்.ஜி.ஆர், சிவாஜி தொடங்கி, இன்றைய இளம் கதாநாயகர்கள் வரைக்கும் இவர் பல பாடல்களைப் பாடி வருகின்றார். எம்.ஜி.ஆருக்காக இவர் பாடிய 'ஆயிரம் நிலவே வா' என்ற பாடல், அவரைச் சிகரத்திற்குக் கொண்டு சென்றது.

திரைப்படப் பாடகராக மட்டுமல்லாமல் இசையமைப்பாளர், தயாரிப்பாளர், நடிகர் எனப் பன்முக அடையாளம் கொண்டவர். இவர் சிறந்த பின்னணிப்பாடகராக ஆறு முறை தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். இவரின் கலைச்சேவையைப் பாராட்டி இந்திய அரசு, இவருக்கு 2001 ஆம் ஆண்டில் பத்மஶ்ரீ விருதும் 2011ஆம் ஆண்டில் பத்மபூஷன் விருதும் வழங்கிக் கௌரவித்தது.

(2 புள்ளி)

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்து, 'சிலந்தி வீரன்' ஆறுமுகம் அவர்களின் **இரண்டு** சாதனைகளை எழுதுக.

**மலேசியச் சிலந்தி வீரன்...!**



70ஆம் 80ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் கோல்காவலர் *ஸ்பைடர்மேன்* டத்தோ ரெ.ஆறுமுகம் எனும் பெயரை உச்சரிக்காத மலேசியர்களே இல்லை. தம்முடைய 18ஆவது வயதில் முதன்முதலாக சிலாங்கூர் காற்பந்து சங்கத்தைப் பிரதிநிதித்துப் *பர்ன்லி* கோப்பைப் போட்டியில் அவர் கலந்துகொண்டது முதல், பல தேசிய போட்டிகளில் பங்கு பெற்றுப் புகழின் உச்சத்தை அடைந்தார். தென் கொரியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணக் காற்பந்து போட்டியில் மலேசியாவைப் பிரதிநிதித்தார். மேலும், கோல்காவலர் டத்தோ ரெ.ஆறுமுகம் 1980ஆம் ஆண்டு மாஸ்கோ ஒலிம்பிக்கில் மலேசியா தேர்வு பெறுவதற்கும் காரணகர்த்தாவாகத் திகழ்ந்தார்.

196 அனைத்துலக விளையாட்டுகளில் கலந்து கொண்டு சாதனை படைத்த 'சிலந்தி வீரன்' டத்தோ ரெ.ஆறுமுகம் 1986ஆம் ஆண்டு ஓய்வு பெற்றாலும் இளைஞர்களை ஒன்று திரட்டி *'ஸ்டார்பிரைட் எஸ்.சி* எனும் காற்பந்து குழுவை உருவாக்கி இளைஞர்களைத் தொழில் ரீதியான விளையாட்டாளர்களாக உருமாற்றிய பெருமை இவரையே சாரும். 1988ஆம் ஆண்டு சாலை விபத்தொன்றில் அகால மரணமடைந்த 'சிலந்தி வீரன்' டத்தோ ரெ.ஆறுமுகத்தின் மறைவு, மலேசிய இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த காற்பந்தாட்ட இரசிகர்களுக்கே பேரிழப்பாகும்.

நன்றி : இணையம்

(2 புள்ளி)

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை காண்க.*

1 உடலைப் பாதுகாக்க நினைக்கும் மனிதன் உண்ணும் உணவை அளவோடு உண்ண வேண்டும் என்பது தொன்று தொட்டு தமிழர்கள் காத்து வந்த மரபு. உணவில் கட்டுப்பாடின்றி போனால், நோயின்றி உடலைப் பாதுகாக்கும் நோக்கம் நிறைவேறாது. இதையே, “உணவே மருந்து, மருந்தே உணவு' என்று சித்த மருத்துவம் தத்துவமாய்க் கூறுகிறது.

‘மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்’ *குறள் 942*

என திருவள்ளுவரும் தமது குறள் வாயிலாக வழிமொழிகிறார். முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிய பிறகு, தக்க அளவு உணவை உட்கொண்டால் உடம்பிற்கு மருந்து என்று ஒன்று வேண்டியதில்லை என்பது திருவள்ளுவரின் கருத்து. இதுவே, தமிழரின் உணவு உண்ணும் முறையாக சித்தமருத்துவம் நமக்கு வலியுறுத்தி வருகிறது.

2 இவ்வாறு, சித்த மருத்துவம் மனித வாழ்வின் ஆரோக்கியமான வாழ்வியல் முறைக்கு **வித்திடுகின்றது**. இந்நாட்டில் சித்த மருத்துவம் சிறுபான்மை தமிழருக்கு மட்டுமே தெரிந்த மருத்துவக்கலையாக விளங்குகின்றது. 'ஆயுர் வேதம்” பற்றித் தெரிந்த தமிழர்களுக்குச் சித்தமருத்துவத்தின் பெருமை தெரியாமல் போனது வருத்தத்துக்கு உரிய ஒன்றாகும்.

3 உலகில் முதன் முதலில் தாவரங்கள் தோன்றின. அதன் பிறகே அவற்றை ஆதாரமாகக் கொண்டு மற்ற உயிரினங்களும் தோன்றின. மனிதர்கள் இயற்கை உணவை உண்பதில் ஏற்பட்ட சில முறைகேடுகள் நோய்கள் ஏற்படக் காரணமாயின. இதற்கெல்லாம் எளிமையான முறையில் மருத்துவத் தீர்வைத் தந்தது சித்தமருத்துவம் என்றால் மிகையில்லை.

4 பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நோய்கள் எப்படி உண்டாகின்றன; அவற்றைக் குணப்படுத்துவது எப்படி; அவற்றைத் தடுப்பது எப்படி என ஒரு சிலர் சிந்தித்தனர். பல ஆய்வுகள் செய்து நோய்களைக் கட்டுப்படுத்தியும் தடுத்தும் சாதனை படைத்தனர்; அந்தத் துறையில் சித்தியும் பெற்றனர். இவர்களையே பிற்காலத்தில் சித்தர்கள் என அழைத்தனர். இவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளைத் தமிழ்மொழியில் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்தனர். இந்தப் படைப்புகளே சித்த மருத்துவ நூல்களாக விளங்கின.

5 தமிழ் நாட்டில் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்து வரும் பதினெண் சித்தர்களாலும் அவர்கள் வழிவந்த சீடர்களாலும் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் ஏராளம். பிற்காலத்தில் கரையானாலும் தீயினாலும் வெள்ளத்தாலும் வஞ்சகர்களின் சூழ்ச்சியாலும் இவற்றிற்கு அழிவு ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக, ஆடிப் பெருக்கன்று பழைய நூல்களையும் ஓலைச்சுவடிகளையும் ஆற்றில்

விட்டால் பீடை ஒழியும், புண்ணியம் கிடைக்கும் என உபதேசம் செய்ததால் பெரும்பாலான பாமர மக்கள் நிறைய ஓலைச்சுவடிகளை ஆற்றில் விட்டுத் தலை முழுகினர். போனது போக மீதம் உள்ளவற்றில் பல சுவடிகள் புத்தக வடிவில் வெளிவந்தன. மேலும், ஏராளமானவை தஞ்சையில் தமிழக அரசால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சித்த வைத்திய தொழில் செய்பவர்கள் பலர் தங்கள் இல்லங்களிலும் இவற்றைப் பாதுகாத்து வருகின்றனர்.

6 இன்றும், சித்த மருத்துவம் அரிய வீரியமுள்ள மருந்துகளால் பல நோய்களுக்குத் தீர்வைத் தருகிறது. ஆகவே, இலைமறைகாயாக உள்ள சித்த மருத்துவக்கலையை மீண்டும் மேலோங்கச் செய்வது தமிழினத்தின் கடப்பாடாகும்.

- **மலேசிய நண்பன்**
(எடுத்தாளப்பட்டது)

7 சித்த மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவம் யாது?

(2 புள்ளி)

8 (i) சித்தமருத்துவத்தின் சிறப்பைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

(ii) சித்தமருத்துவத்தின் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்த செயல்கள் எவை?

(2 புள்ளி)

9 கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

மனிதவாழ்வின் ஆரோக்கியமான வாழ்வியல் முறைக்கு **வித்திடுகின்றது**. (15ஆவது வரி)

(2 புள்ளி)

10 இன்றைய மக்கள் சித்த மருத்துவத்தை விட நவீன மருத்துவத்திற்கே அதிக முக்கியத்துவம் தருகின்றனர். இதற்கான **காரணங்களை** 50 சொற்களில் எழுதுக.

(10 புள்ளி)

**பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**
**[30 புள்ளி]**

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

அம்மாவின் குரல் தொடர்ந்து என் காதுகளுக்கு எட்டாதபடி இருக்க எகத்தாலமாய்த் தலையணையை என் காதுகளோடு பொத்தியபடி படுத்துக் கொண்டிருந்தேன். படீர்..... என என் முதுகில் அம்மாவின் கை, பலத்தைக் காட்டியது. “டேய் எழுந்திரிடா...நேரமாகுது” என அம்மா அதட்டினாள்.

“என்னம்மா நீங்க? தூங்கிட்டு இருக்கறவன போய் அடிக்கிறீங்க..” என்றேன். “இன்னிக்குப் புதன்கிழமைனு உனக்குத் தெரியும்ல... எழுந்திரி... மணி ஏழாகப் போகுது” என அம்மா என்னைத் துரிதப்படுத்தினாள்.

இந்தப் புதன்கிழமை வந்தாலே இப்படித்தான். வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் அப்பாவை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். அன்றைய தினம் அப்பாவுக்கு மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்கான பரிசோதனை நடைபெறும். அம்மாவுக்கு விடைகொடுத்து அப்பாவும் நானும் மோட்டார் வண்டியில் மருத்துவமனைக்குச் சென்றோம்.

மருத்துவமனையில், தாதி அழைத்தவுடன் அப்பா எழுந்து சென்றபோது நானும் உடன் சென்றேன். அப்பாவுக்குப் பரிசோதனைகள் தொடங்கின. சர்க்கரை அளவை அளவிடுவதற்காகத் தாதி அப்பாவின் கையில் ஊசியைச் செலுத்தி இரத்தம் எடுத்தபோது அவர் பேசாமல் இருந்தார். ஆனால், அவர் கையில் இரத்தம் சற்று கசிவதைக் கண்டதும் என் மனதில் ஏதோ ஒன்று கசிவது போன்று ஓர் உணர்வு ஏற்பட்டு மறைந்தது. எல்லாச் சோதனைகளையும் முடித்துக் கொண்டதும் தாதி அப்பாவை *டாக்டர்* அறைக்குச் செல்லும்படி கூறினாள்.

“வாங்க *மிஸ்டர்* சாமி... உங்க *ரிப்போர்ட்* எல்லாம் பார்த்துட்டேன்.... இனிப்பு அளவு கட்டுப்பாட்டுலதான் இருக்கு. சாதாரண அளவுதான் இது. இப்படியே *மெயிண்டெய்ன்* பண்ணுங்க, அதான் நல்லது. முடிஞ்சா ராத்திரில சோறு வேணாங்க... உங்க இரத்தக்கொதிப்பு அளவு அதிகமா இருக்கு... ஏன் ஒழுங்கா தூங்கறது இல்லையா? இல்ல வேல கூடயா?” எனப் பேசியபடி அப்பாவை நோக்கினார் மருத்துவர்.

"ஆமா *டாக்டர்*...வேல இடத்துல *ஓவர்டைம்* கொஞ்சம் அதிகமா செய்றேன். அதான் ராத்திரி வீடு திரும்ப *லேட்டு*, படுக்கிறதும் *லேட்டு...* தூக்கம் கம்மிதான் *டாக்டர்*” என்றார் அப்பா.

“இதோ பாருங்க *மிஸ்டர்* சாமி... வேல அவசியம்தான்... நான் இல்லேனு சொல்லலே... ஆனா, நீங்க உடல் நலத்துலே அக்கற இல்லாம போனா பின்ன எப்படிங்க வேல செய்ய முடியும்?" என மருத்துவரின் கேள்வி அப்பாவுக்குத் திரும்பியது.

"நீங்க சொல்றது சரிதான் *டாக்டர்,* ஆனா, மகன் அடுத்த மாசம் தொடர்ந்து படிக்க, பல்கலைக்கழகம் போறான். அவனுக்குச் செலவு கொஞ்சம் அதிகமாக இருக்குங்க *டாக்டர்*. அதான் இந்த *ஓவர்டைம்லாம்”* எனக் கூறிய அப்பாவை எனது கண்கள் சற்று கலங்கிய நிலையில் கூர்ந்து நோக்கின.

“யாரு... இவரா?” என மருத்துவர் வினவ அவரை நோக்கிச் சிரிப்பை மட்டும் பதிலாகத் தந்தேன்.

"பாருங்கையா... உங்க அப்பா உங்களுக்காக எவளோ கஷ்டப்படுறாங்க, அதெல்லாம் நினைச்சுப் பார்த்துப் படிச்சுப் பெத்தவங்களுக்கு நல்ல பேர் வாங்கிக் கொடுங்க” என *டாக்டர்* கூறிய அறிவுரையால் பெத்தவங்களை நெனைச்சு என் மனம் சற்றே கசிந்தது.

"சரிங்க *டாக்டர்...* அப்ப நாங்க கிளம்புறோம்” என அப்பா விடைபெற்றுக் கொள்ள “அடுத்த வாரமும் இதே புதன்கிழமை மறக்காம *செக்காப்புக்கு* வந்துருங்க, அதோட கொடுக்குற மருந்த விடாம சாப்பிடுங்க” என மருத்துவர் அப்பாவிற்கு நினைவூட்டினார்.

மனசுக்குள் ஏற்பட்ட ஏதோ ஒரு மாற்றம் என் முகபாவத்தையும் மாற்றியிருந்தது. இம்முறை நான் முன்தொடர்ந்து செல்ல அப்பா என்னைப் பின்தொடர்ந்து வந்தார். அப்போது அப்பாவின் அழைக்கும் குரல் என் காலடியைக் கட்டியது.

“டேய்... மயக்கம் வர மாதிரி இருக்குடா” என்றார்.

"என்ன தாங்கிப் பிடிச்சுக்குங்க அப்பா” என்றபடி அவரது கையை என் தோள்பட்டையில் போட்டுக்கொண்டு அப்பாவைத் தாங்கிப் பிடித்துச் சற்று ஓய்விற்குப்பின் நடந்தேன். மரத்துப்போய்க் கிடந்த அப்பாவின் கை என் கையைப் பற்றிக் கொண்டபோது அதில் இதுநாள் வரை என் கண்ணுக்குத் தெரியாமலிருந்த மென்மையான அன்பும் பாசமும் ஒளிந்து கொண்டிருப்பதை நான் உணர்ந்தேன். அப்பாவைப் பத்திரமாக மோட்டார்வண்டியில் அமர வைத்து வண்டியை ஓட்டிச் சென்றேன்.

**கங்காதுரை கணேசன்**
வேண்டாத நாள்
(இளையோர் சிறுகதை-எடுத்தாளப்பட்டது)

11 மகனுக்குப் புதன்கிழமை என்றாலே பிடிக்காமல் போனதற்கான காரணம் யாது?
(2 புள்ளி)

12 (அ) வேலை செய்யும் இடத்தில் அப்பா எதற்காக *ஓவர்டைம்* கொஞ்சம் அதிகமாக செய்கிறார்?
(3 புள்ளி)

(ஆ) இச்சிறுகதையில் வரும் அப்பாவின் பண்பு நலன்களுள் **இரண்டனை** அவை **வெளிப்படும்** சம்பவத்தோடு குறிப்பிடுக.
(4 புள்ளி)

13 (அ) **என் காலடியைக் கட்டியது** என்னும் சொற்றொடர் உணர்த்தும் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது?
(2 புள்ளி)

(ஆ) இச்சிறுகதையில் மகனின் மனமாறுதலுக்கான **காரணங்கள்** என்னவாக இருந்திருக்கும்?
(4 புள்ளி)

14 இச்சிறுகதையின் வாயிலாக சமுதாயத்துக்கு உணர்த்தப்படும் **இரண்டு** படிப்பினைகளை எழுதுக.
(5 புள்ளி)

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலை வாசித்து, உமது **சொந்த மொழிநடையில் விளக்கம்** எழுதுக.

**தன்னம்பிக்கை!**

உள்ளம் என்றும் எப்போதும் உடைந்து போகக் கூடாது
என்ன இந்த வாழ்க்கையென்ற எண்ணம் தோன்றக்கூடாது
எந்த மனிதன் நெஞ்சுக்குள் காயம் இல்லை சொல்லுங்கள்
காலப்போக்கில் காயமெல்லாம் மறைந்து போகும் மாயங்கள்

உளி தாங்கும் கற்கள்தானே மண்மீது சிலையாகும்
வலிதாங்கும் உள்ளம்தானே நிஜமான சுகம் காணும்
யாருக்கில்லை போராட்டம் கண்ணில் என்ன நீரோட்டம்
ஒரு கனவு கண்டால் அதை தினம் முயன்றால்
ஒரு நாளில் நிஜமாகும்

*- கவிஞர் பா.விஜய்*

(10 புள்ளி)

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**
**(20 புள்ளி)**

**(கேள்விகள் 16 முதல் 19 வரை)**

16 கொடுக்கப்பட்டுள்ள **இரட்டைக்கிளவியைப்** பொருள்விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**நசநச**

(2 புள்ளி)

17 கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற **பழமொழியை** எழுதுக.

**சிறந்த பண்புடையவரோடு சேரும் ஒருவர் அப்பண்பாளரின் தன்மைகளைப் பெற்று விளங்குவர்.**

(2 புள்ளி)

18 கோடிடப்பட்ட செய்யுளடிகளின் பொருளை எழுதுக.

**<u>குயிலினம் வதுவை செய்ய,</u>**
**<u>கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை</u>**
**<u>அயில்விழி மகளிர் ஆடும்</u>**
**அரங்கினுக்கு அழகு செய்ய**
**பயில்சிறை அரச அன்னம்**
**பன்மலர் பள்ளி நின்றும்**
**துயிலெழ, தும்பி காலைச்**
**செவ்வழி முரல்வ சோலை**
***- கம்ப இராமாயணம்***

(4 புள்ளி)

19 கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

பண்பாடு என்பது பண்பட்ட மனதைக் குறிக்கும். தமிழ்நாட்டின் நில அமைப்பு, வரலாறு, அம்மண்ணில் தோன்றிய அறிஞர்கள், அவர்கள் ஆக்கித் தந்த அறிவு நூல்கள், நிலவிய சமயங்கள், பிறநாட்டறிஞரின் தொடர்புகள், பரம்பரைப் பண்புகள் காரணமாகத் தமிழ்நாட்டு மக்கள் தனிப்பட்ட பண்பினைப் பெற்றுள்ளனர். ஆதிகாலத்திலிருந்து வளர்த்தெடுக்கப்பட்ட இப்பண்புகளே தமிழர்களின் பண்பாடாக நெடுங்காலமாய்ப் பேணப்பட்டு வருகின்றன. **(I மரபுத்தொடர்)**

தான் வாழ்வதைவிட உலகத்து உயிர்கள் இன்பமாக வாழ எண்ணுவதே தமிழ்ப்பண்பாடாக இருந்தது. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்னும் வள்ளலாரின் வரிகள் பிற உயிர்களையும் பயிர்களையும் கண்டு வாடியது தமிழர் உள்ளம் என்பதையே காட்டுகிறது. எல்லா உயிர்களிடத்திலும் இரக்கமும் அன்பும் அருளும் நிறைந்த வாழ்க்கையே தமிழர்களின் வாழ்க்கை முறையாக அமைந்துள்ளது. **(I பழமொழி)**

தமிழரின் இரத்தத்தோடு கலந்துள்ள பரம்பரைப் பண்பானது விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதாகும். தன் வீடு நாடிவரும் விருந்தினரை வரவேற்று உபசரித்து விருந்தளிப்பதை ஒவ்வொரு தமிழனும் தன் பிறவிப் பண்பாகக் கருதினான். வீட்டிற்கு வந்துள்ள விருந்தினரை இன்முகத்துடன் உள்ளம் மகிழ்ச்சிப் பொங்க வரவேற்க வேண்டுமென தமிழ்மறை முனிவர் கூறுகிறார். **(III இணைமொழி)**

நாகரிகம் பெற்ற தமிழரின் உயர் பண்புகளுள் ஒன்று ஒழுக்கமாகும். விலங்குகளும் பறவைகளும் ஒழுக்கத்தை எண்ணிப்பார்ப்பதில்லை. ஆறறிவு படைத்த மக்கள் மட்டுமே எண்ணுகின்றனர். ஒழுக்கம் ஒரு மனிதனைச் சிறந்து விளங்கச் செய்கின்றது. **(IV திருக்குறள்)**

**(உங்கள் குரல் 2010)**
(எடுத்தாளப்பட்டது)

(12 புள்ளி)

## பிரிவு ஈ : இலக்கணம்
## (20 புள்ளி)

**கேள்விகள் 20 முதல் 22 வரை**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் சொற்குவியலில் **இன எழுத்துகள்** கொண்ட சொற்களை அடையாளம் கண்டு எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| மந்திரம் | பயணம் | நல்வரவு | மன்றம் | காவியம் |
| தங்கை | வணக்கம் | கனிவு | மண்டபம் | |

(4 புள்ளி)

(ஆ) போலி எத்தனை வகைப்படும்? அதன் **வகைகளை** எழுதுக.

(4 புள்ளி)

21 கீழ்க்காண்பனவற்றுள் **குன்றிய வினை** வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A நிடதநாட்டு மன்னன் நளன் தமயந்தியை மணமுடித்தான்.
B கும்பகர்ணன் ஆறு மாதத்திற்கு அயர்ந்து உறங்கினான்.
C திருமண மண்டபத்தில் தோரணம் கட்டியிருந்தனர்.

(2 புள்ளி)

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக.
[பத்தியை மீண்டும் **எழுத வேண்டாம்**. நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்)

கல்வியில் சிறப்படைந்தால் நாம் எந்தத் துறையிலும் மேண்மை அடையலாம். இந்த கருத்தை நாம் மனதில் ஆழப் பதியவைக்க வேண்டும். மாணவர்கள் பள்ளியிலும் வீட்டிலும் கருத்தூன்றிக் கற்க வேண்டும். எத்தகைய சந்தேகமாக இருந்தாலும் அதற்கான தீர்வைத் தெரிந்துக் கொள்வதில் ஆர்வம் கொள்ள வேண்டும். இந்தப் பலக்கம் தொடருமானால் அவர்களால் சிறந்த அடைவு நிலையை பெற முடியும்.


(10 புள்ளி)

தமிழ்மொழி தாள் 2 (6354/2)

**2015**

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
**(30 புள்ளி)**

கீழ்க்காணும் கருத்துப்படங்களைக் கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.




1 இப்படங்கள் உணர்த்தும் **கருத்து** யாது?

(2 புள்ளி)

கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.



தூரநோக்கையும் நேர்மையையும் அணிகலனாய்க் கொண்டிருந்தவர் டத்தோ பத்மநாபன். இந்த நாடு அவருக்குப் பெரிதும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

**- துன் டாக்டர் மகாதீர் முகம்மது**
மலேசிய முன்னாள் பிரதமர்

அரசியல்வாதியாக மட்டுமல்லாமல் இனத்தின் இதயத் துடிப்பை உணர்ந்த சமூகவாதியாகவும் அவர் இயங்கிய காரணத்தால்தான் மக்கள் மனத்தில் நிரந்தர இடத்தைப் பிடித்தார். ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாய் வாழ்ந்தவர் டத்தோ பத்மநாபன்.

**- டத்தோ ஸ்ரீ உத்தாமா ச.சாமிவேலு முன்னாள்**
பொதுப்பணித்துறை அமைச்சர்

பணிசார்ந்த அறிவையும் நுணுக்கங்களையும் பெருந்தன்மையோடு என்னோடு பகிர்ந்து கொண்டவர். அவர் நான் பணிபுரிந்த அமைச்சில் எனக்குத் துணையமைச்சர்தாம் என்றாலும் முழு அமைச்சரான எனக்கு நிறைய கற்றுக் கொடுத்திருக்கிறார். எந்தத் தகவலையும் அறிவுபூர்வமாக ஆலோசித்துத் துல்லியமாக வழங்கியவர்.

**- டத்தோ ரிச்சர்ட் ஹோ -**
முன்னாள் தொழிலாளர் அமைச்சர்

ரோஜாக்கள் இடையில்
முட்கள் இருக்கும்!
ஆனால்,
முட்கள் கூட்டத்தில்
சிரித்த ரோஜா நீ!

**- தமிழவேள் ஆதி.குமணன்**
முன்னாள் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்

2 டத்தோ பத்மநாபனின் சிறப்புகளுள் **இரண்டனை** எழுதுக.

(2 புள்ளி)

கீழ்க்காணும் உரைவீச்சை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

**வேப்பமரம்...**

நீர் ஊற்றி
நான் வளர்த்த
நிழல் கொடுத்த வேப்ப மரம்!

சூரியனின் வெப்பத்தைச்
சுகமாக்கிக் கொடுத்த மரம்
வீடு நோக்கி வரும் காற்றை
வேடு கட்டித் தந்த மரம்

குருவிக்கும் பழம் கொடுக்கும்
கூடுகட்ட இடம் கொடுக்கும்

நேசமா நான் நெனச்சமரம்
நேத்து புயலில் விழுந்திடுச்சே!
விழுந்த மரம் எழுந்துவந்து
வீட்டுக் கதவா ஆகிடுச்சே!

அதுபோக அத்தனையும்
அடுப்புக்கு விறகாகி
வீட்டுக்கு உதவிடுச்சே!
விசுவாசம் காத்திடுச்சே

**- கைநாட்டுக்கவிதைகள்**
(மருது அழகுராஜா)
(எடுத்தாளப்பட்டது)

3 இந்த உரைவீச்சு உணர்த்தும் **படிப்பினை** யாது?

(2 புள்ளி)

கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.



200 ஆண்டுகளுக்கு முன்பு ராபர்ட் கால்டுவெல், தமிழ்நாட்டில் இடையன்குடி என்னும் ஊரில் தங்கித் தமிழ்ப்பணி ஆற்றிவந்தார். அவர், இலத்தின், கிரேக்கம், ஹீப்ரு, ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மேலைநாட்டு மொழிகளோடு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற தென்னக மொழிகளிலும் போற்றத்தக்க புலமை பெற்றிருந்தார். அதன் பயனாக, ஆங்கில மொழியில் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூல் உலகெங்கும் மிகுந்த புகழ் ஈட்டித்தந்தது. இந்த நூலே தமிழ்மொழியின் மொழியியல் ஆய்வுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது.

இவர், தென்னக மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்வது தமிழே என உலகுக்கு ஆணித்தரமாக உணர்த்தி மொழியியல் ஆராய்ச்சியில் நமக்கு வழிகாட்டிய தமிழ்மொழியறிஞர் ஆவார். இவரது ஒப்பிலக்கணப் பணியைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக்கழகமும் *ராயல் ஆசியாட்டிக் சொசைட்டியும்* அவருக்கு இலக்கிய வேந்தர், வேத விற்பன்னர் ஆகிய பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தன.

4 ராபர்ட் கால்டுவெல் தமிழுக்குச் செய்த **தொண்டு** என்ன?

(2 புள்ளி)

5 கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கு உணர்த்தும் கருத்து யாது?



மணி: என் மனைவி திருக்குறள் மாதிரி!

முத்து: எப்படி?

மணி: ரெண்டு அடியிலே எல்லாத்தையும் புரியவச்சுடுவா...!

(2 புள்ளி)

கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.

**நகைச்சுவைக்கே இலக்கணம் வகுத்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்**



நகைச்சுவைக்குப் பெயர்பெற்ற கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், நகைச்சுவை பற்றிக் கூறியதாவது:

"ஆறறிவு பெற்றுள்ள மனிதனுக்கு இயற்கை வழங்கிய செல்வம் சிரிப்பு. சிரிப்பால் எதிரியையும் நம் வசப்படுத்தமுடியும். நகைச்சுவை உணர்வு நமது துன்பத்தையும் பிறர் துன்பத்தையும் நீக்கி உற்சாகப்படுத்தும்; உடல் நோய்க்கும் கூட அரும்மருந்தாய்ப் பயன்படும்; உடலின் நாடி நரம்புகளில் புத்துணர்ச்சியை ஊட்டும். அதனால், நகைச்சுவையைப் பொருத்தமாக, நாசுக்காகச் சூழல் அறிந்து பக்குவமாகப் பயன்படுத்த வேண்டும். வார்த்தை ஜாலங்களாலும் சமயோசித தன்மையாலும் அறிவுக்கு வேலை கொடுத்து நளினமாகப் பேணுவதே நகைச்சுவை, இவையே உடல் நலத்திற்கும் மனநலத்திற்கும் உதவியாக இருக்கும். அதைவிடுத்து, நகைச்சுவை எப்போதும் நையாண்டி என்கிற கசப்பாக, உவர்ப்பாக, புளிப்பாக இருக்கக்கூடாது. உடலளவில் பேறு குறைந்தவர்களைச் சுட்டிக்காட்டிக் கேலி செய்வதும் சக மனிதனை இழித்தும் பழித்தும் பேசிச் சுவை காண்பதுவும் தகாது. அது நையாண்டியைவிடக் கேவலமான செயலாகும்."

6 கலைவாணர் குறிப்பிடும் நகைச்சுவையின் தனித்தன்மை யாது?

(2 புள்ளி)

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை காண்க.*

1 தற்காலத்தில் நிலவும் பொருளாதார மாற்றத்தால் குடும்பத் தலைவனுடைய வருமானம் மட்டும் குடும்பத்தை நடத்திச் செல்லப் போதுமானதாக இல்லை. குடும்பத் தலைவியும் பொருள் ஈட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாள். இத்தகைய குடும்பங்களில் பெற்றோரை, குறிப்பாக நோயால் துன்புறும் பெற்றோரைக் கவனித்தல் என்பது முடியாத காரியமாக மாறிவருகிறது. பணக்காரர்களின் வீட்டில் மட்டுமே தீராத நோயினால் துயருறும் பெற்றோர்களைக் கவனிக்கச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்ய இயலும். ஆனால், நடுத்தர, ஏழைக் குடும்பங்களில்...!

2 முதுமையில், பெற்றோர் மகிழ்ச்சியுடனும் பணிச்சுமை இல்லாமல் வாழ வேண்டும் என்பது எல்லாப் பிள்ளைகளின் ஆசையும் எண்ணமும் கூட. வீட்டு வேலைகளைச் செய்தல், சமைத்தல், குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற பணிகளை அவர்கள்மீது சுமத்தக்கூடாது. அவை முதியோர்களின் கடமை எனக் குடும்ப உறுப்பினர்கள் எண்ணிச் செயல்படக்கூடாது. காலமெல்லாம் உழைத்தல் என்பது என்ன நியாயம்? அவர்களுக்கும் ஓய்வு எடுப்பதற்குரிய பொருத்தமான, அமைதியான இடம் வேண்டாமா? இதற்காகத்தானோ, முதியோர் இல்லங்கள் இப்போது ஆங்காங்கே முளைக்கத் தொடங்கியுள்ளன?

3 சமுதாயத்தில் முதியோர் இல்லம் பற்றிய எண்ணங்கள் தாழ்ந்த **மதிப்பீடுகளைத்** தருபவைகளாகவே உள்ளன. பல்வேறு முதியோர் இல்லங்கள் நாடு முழுவதும் பரவியுள்ளன. நமது நிலைக்கேற்றவாறும் வருமானத்திற்கு ஏற்றவாறும் முதியோர் இல்லங்களில் இரவு பகல் எப்போதும் உதவியாளர்கள் இருப்பதால் அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் தவறாமல் கிடைக்கின்றன.

4 நோய்வாய்ப்பட்டவர்களுக்கென வயது வித்தியாசம் இல்லாமல் பராமரிக்கும் இல்லங்களும் இருக்கவே செய்கின்றன. வயதான முதியவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இல்லங்கள் நாளடைவில் வயது வித்தியாசம் இல்லாமல் தீராத நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குடும்பத்தினரால் சரிவரப் பராமரிக்க முடியாத நிலையில் உள்ளவர்களுக்கும் இடமளித்துள்ளன. நல்ல மரக்கறி உணவு, இயற்கைச் சூழலில் காற்றோட்டமான இடவசதி, நல்ல தண்ணீர், மருத்துவ வசதி, அன்பான தனிப்பட்ட அனுசரிப்புக் கொடுத்து மகிழ்ச்சியாகக் கவனித்துக் கொள்கிற நிலையங்களும் உள்ளன.

5 பொதுவாக, மக்கள் மனத்தில் முதியோர் இல்லம் பற்றிய தவறான எண்ணங்கள் மாற வேண்டும். பெண்களுக்கோ ஆண்களுக்கோ தம் துணையுடன் வாழும் காலங்களில் பிறருடைய உதவியும் பராமரிப்பும் தேவையில்லை. இவர்களுள் ஒருவர் இல்லாமல் போய்விட்டாலும் மற்றொருவரால் குறிப்பிட்ட வயது வரை தனியாக வாழ்ந்துவிட முடியும். மாறாகத் தனிமையில் வாழ்பவர்கள் அதுவும் நோயினால் துன்புறுபவர்கள், பிறரால் கவனிக்கமுடியாத சூழலில் உள்ளவர்கள் ஆகியோருக்கு முதியோர் இல்லமே சரியான தேர்வாக இருக்கும். அதைவிடுத்துப் பெற்றோரை ஆதரவின்றித் தவிக்கவிடுவது பாவமல்லவா? சிறுவயது முதல் நம்மை வளர்க்கப்

பெற்றோர் பட்ட துன்பங்களை நினைவில் வைத்தே அவர்களைக் கைவிடாமல் கண்ணை இமை காப்பதுபோலப் பராமரிக்க வேண்டும் என்பது நமது கடமையானாலும் கால மாற்றம், சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு செயல்படுவதே அறிவுபூர்வமாகும்.

6 முறையான கவனிப்பு, சத்துள்ள ஆரோக்கியமான உணவு, பாதுகாப்பு இவற்றை வழங்குவதுதானே வயதான பெற்றோருக்கு அவர்தம் மக்கள் செய்யும் தலையாயப் பணி. அதனைக் குறைவில்லாமல் வழங்கும் முதியோர் இல்லம் அவசியமே என்பதில் எத்தனை பேருக்கு உடன்பாடு இருக்கும் என்பதே இன்றைய கேள்வி.

**- அமுதசுரபி**
(எடுத்தாளப்பட்டது)

7 இன்றைய சூழலில் பெற்றோரைப் பராமரிப்பதில் குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கும் இரண்டு சவால்கள் யாவை?

(2 புள்ளி)

8 i) கட்டுரையாசிரியர் முதியோர் இல்லத்தை ஆதரிக்கிறார். ஏன்?

(2 புள்ளி)

ii) 6ஆவது பத்தியில் ஆசிரியரின் எதிர்ப்பார்ப்பு யாது?

(2 புள்ளி)

9 கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

சமுதாயத்தில் முதியோர் இல்லம் பற்றிய எண்ணங்கள் தாழ்ந்த **மதிப்பீடுகளைத்** தருபவைகளாகவே உள்ளன. (16ஆவது வரி)

(2 புள்ளி)

10. பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதனால் குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கக்கூடிய **இழப்புகளை** 50 சொற்களில் எழுதுக.

(10 புள்ளி)

**பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**
[30 புள்ளி)

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

*"ஆலெங்! மச்சாம் மானா...?"* என சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கும் முன்பே....

*"சாமி...! லூ ஓராங் செலாலு கச்சாவ். கசி சிக்கிட், மாவ் லெபே. கசி லகி மிந்தா பாஞ்ஞா லகி...!"* வாடிக்கையாளர்களின் காதில் விழும்படி உரக்கச் சத்தமிட்டுவிட்டு வேலையைத் தொடர்ந்தான் ஆ லெங், சாமியின் உள்ளம் கொதித்தது. தன்னைத் திட்டியதோடல்லாமல் தன் இனத்தையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக வசைபாடியது என்னவோ செய்தது. அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிட விரும்பவில்லை.

*"ஆ லெங்! ஆப்பா சாயா சுடா சக்காப்! லூ மாரா இனி மச்சாம்!"* என்றான் சாமி.

"ஆ சுடாலா...! காலாவ் லூ தடா சுக்கா, ஸ்காராங் ஜுகா லூ போலே பெரெந்தி கெர்ஜா..."

பத்து வருடங்களுக்கு மேலாக ஆ லெங் மோட்டோர்ஸுக்கு மாடாய் உழைக்கும் சாமி சம்பள உயர்வு கேட்டதற்காக அதன் முதலாளி அளித்த பதில் அவனை அப்படியே உலுக்கிவிட்டது. கோபத்தால் சாமியின் முகம் சிவந்து போயிற்று, செய்த வேலையை அப்படியே போட்டுவிட்டுப் பக்கத்திலுள்ள காப்பிக் கடையை நோக்கி நடந்தான்.

ஆ லெங் சாமியை எத்தனையோ தடவை இப்படி விரட்டியிருக்கிறான். கோபித்துக்கொண்டு போனாலும் மறுநாளோ இரண்டு நாளைக்குப் பின்னரோ வேலைக்குத் திரும்பி விடுவான். ஆ லெங்குக்கும் சாமியை விட்டால் வேறு கதியில்லை.

"ஓய் சாமி...! காலாவ் புக்கான் சாயா, சியாப்பா மாவ் காசி லூ கிர்ஜா? நன்தி, அனாக் பினி லூ மத்திலோ...!" என நையாண்டி செய்வதும் வாடிக்கையாகி இருந்தது.

புது இடத்தில் வேலைக்குச் சேர்ந்தாலும் என்ன கொட்டியா கொடுத்திடுவானுங்க...! என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டு தன் ரத்தத்தை வேர்வையாக்கி உழைத்துக் கொண்டிருந்தான் சாமி..!

அன்று இரவு சாமி வீட்டுக்கு வந்தபோது அவன் மனநிலை சரியில்லை என்பதை அவன் மனைவி கண்டுகொண்டாள். "நான் சொல்றேனுன்னு தப்பா எடுத்துக்காதீங்க! உங்க முதலாளி நல்லா ஏமாத்துறான்னு என் மனசிலே படுதுங்க!"

"அதுக்காக ஆ லெங் உதவியில்லாம நான் என்னதான் செய்ய முடியும் சொல்லு?"

“என்ன பேசுறீங்க? **பூனை கண்ணை மூடிட்டடபூலோகம் இருண்டாடபோயிடும்?”** என்று தன் மனைவி கூறியதில் உண்மை இருப்பது அவனுக்குப் புலப்பட்டது.

*ஆ லெங் மோட்டோஸுக்குக் கார்கள்* பழுதுபார்க்க வருவது சாமியால்தான். அவன்தான் பழுதுபார்க்க வேண்டும் என்று காத்திருக்கும் வாடிக்கையாளர்களே அதிகம். அப்படி இருந்தும் அவனுக்குக் குறைவான சம்பளமே ஆ லெங் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சாமி ஆ லெங்கிடம்தான் வேலை கற்றுக் கொண்டான். வேலையைக் கற்றுக் கொள்வதற்கு அவன் பட்டபாடு... நினைக்கவே மனம் வேதனைப்பட்டது. எஞ்சின் வேலைகளைக் கற்றுக்கொடுக்க ஆ லெங் அக்கறை காட்டவே இல்லை. வேலை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அவன் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு எந்தவகை *கார்களையும்* பழுது பார்ப்பதில் கரைகண்டவன் ஆனாலும், ஆ லெங் இன்னும் அவனை ஓட ஓட விரட்டிக்கொண்டுதானிருந்தான்.

மறுநாள் சாப்பாட்டு நேரத்தின் போது *ஷரிகாட் லியோங்கிற்குச்* சென்றான் சாமி. அதன் முதலாளி லியோங் - முன்பு *ஆ லெங் மோட்டோஸில்* தொழிலைக் கற்றுக் கொண்டவன்தான். வேலைக்குச் சேர்ந்த இரண்டே ஆண்டுகளில் சொந்த காலில் நிற்கத் தொடங்கிவிட்டான், அவனுக்குக் கமுக்கமாக உதவியவன் ஆ லெங்தான் என்பது சாமிக்குப் பிறகுதான் தெரியவந்தது.

*“சாமி! காலாவ் லூ மாவ், பொலே கிர்ஜா சாயா பூஞ்ஞா டெக்காட், காஜிபூன் பொலே காசி லெபே சிக்கிட்...!”* என்றான் லியோங்,

தன்னிடமே பல வேலை நுணுக்கங்களைப் பழகிக் கொண்ட லியோங் தனக்கே வேலை தருவதாகக் கூறியது சாமியால் ஜீரணிக்கவே முடியவில்லை . அடுத்தடுத்த நாள் வேலை நேரம் போக எங்கெங்கோ அலைந்தான்; யார் யாரையோ சென்று பார்த்தான். மாதக் கடைசியில் சம்பளம் வாங்கியவுடன் தான் வேலையை விட்டு நின்று கொள்வதாகச் சாமி ஆ லெங்கிடம் கூறினான். ஆ லெங் அவனைப் பார்த்து ஒரு தினுசாகச் சிரித்தான்.

*“மானா மாவ் கிர்ஜா லகி...?”* சாமியை ஏற இறங்கப் பார்த்தான் ஆ லெங்.

*“சாயா மாவ் கெர்ஜா செண்டீரிலா ஆ லெங்!”*

*“லூ கீலாக்கா... ஓராங் இண்டியா புஞ்ஞா டெக்காட் சியாப்பா மாவ் காசி கெரேத்தா..?”* இளக்காரமாகவும் ஏளனமாகவும் சிரித்தான் ஆ லெங், ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு அங்கிருந்து வெளியேறினான் சாமி.

மறுவாரமே 'சாமி *மோட்டோர்ஸ்'* திறப்பு விழா கண்டது. சாமியின் நண்பர்களும் உறவினர்களும் முதல் வாடிக்கையாளரானார்கள். சாமி *மோட்டோர்ஸில்* முதல் வாரம் நடந்த தொழிலே அவனுக்கு நம்பிக்கையைத் தந்தது. ஆ லெங்கிடம் இருந்தபோது அவனைத் தேடி வந்த வாடிக்கையாளர்கள் சாமி *மோட்டோரஸைத்* தேடி வர ஆரம்பித்தனர். ஆறாவது நாள் காலையிலேயே முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு கடைக்கு வந்தான் முன்னாள் முதலாளி ஆ லெங்.

*"ஓய் சாமி...! ஆப்பா லூ சுடா புவாட் இனி மச்சாம்? சிக்கிட் சிக்கிட் லூ மாரா? சுடாலா சாமி? காஜி புஞ்ஞா பசாய் ஜாங்ஙான் தாக்கூட். ஏசோக் லூ போலே மாரி கெர்ஜா டெக்காட் சாயா... சாயா தோலோங் காமு...!"* என்று முதுகைத் தட்டிக் கொடுத்தான்; முதலைக் கண்ணீர் வடித்தான்.

*"தாப்பா...லா ஆ லெங்...! டூவா தீகா ஹாரி இனி சாயா லேபே செனாங் ஹாத்தி."*

*"இனிமாச்சாம்கா... காலாவ் காமு சூசா நன்தி ஜாங்ஙான் சாரி சாயா...சாமி...!"*

*"சோரி ஆ லெங்....! காலாவ் லூ அடா சூசா, லூ போலே ஜும்பா சாயா பிலா பிலா மாசா...! சாயா போலெ தோலோங் காமு,"* பொட்டில் அடித்தாற்போல சொன்னான் சாமி.

***- வ.முனியன்***
(விழிப்பு)
(எடுத்தாளப்பட்டது)

11 ஆலெங்கைப் பற்றி அறியக்கூடியது யாது? (2 புள்ளி)

12 அ) சாமி ஆலெங்மீது கோபங்கொள்ளக் காரணம் என்ன? (2 புள்ளி)

ஆ) லியோங் கொடுத்த வாய்ப்பைச் சாமி நிராகரிக்கக் காரணம் என்னவாக இருக்கலாம்? (4 புள்ளி)

13 கொடுக்கப்பட்டுள்ள கூற்றில் தடிப்பாக்கப்பட்டுள்ள தொடர் சூழலுக்கு ஏற்ப உணர்த்தும் பொருள் யாது?

"என்ன பேசுறீங்க...? **பூனை கண்ணை மூடிட்டா பூலோகம் இருண்டா போயிடும்?"**

(3 புள்ளி)

14 அ) இச்சிறுகதையில் சாமி எடுத்த முடிவு சரியா? நியாயப்படுத்துக. (4 புள்ளி)

ஆ) இச்சிறுகதை உமக்குள் ஏற்படுத்திய தாக்கம் யாது? (5 புள்ளி)

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது **சொந்த மொழிநடையில் விளக்கம்** எழுதுக.

### தமிழ் சோறு போடுமா?

சோறு போடும் வீட்டைத் தேடும்
சொறி நாய்கள் கூட்டமா?
சொரணை யுள்ள தமிழனுக்குச்
சோறு ஒன்றே நாட்டமா?
சோறு போடுமா தமிழ்
என்று தமிழன் கேட்பதா?
சோறு ஒன்றே தமிழனுக்கு
வீறு தரும் ஊட்டமா?
சோறு போட்டால் மொழிமறந்து
இனம் மறந்து ஓட்டமா?
சோற்றுக் கேதான் சொரணையற்று
எடுத்த திந்தப் பிண்டமா?
சோறு ஒன்றே சொர்க்கமென்று
சொல்ல வெட்க மில்லையா?
சுயமானம் விட்டுத் தேடும்
சுகபோகம் வாழ்வா சொல்லையா!

- கவிஞர் வே.மகேந்திரன், ஈப்போ

(10 புள்ளி)

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**

**(20 புள்ளி)**

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16 கொடுக்கப்பட்டுள்ள **மரபுத்தொடரைப்** பொருள்விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**தண்ணீர் காட்டுதல்**

(2 புள்ளி)

17 கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளுக்கேற்ற **பொருளை** எழுதுக.

**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு (784)**

(2 புள்ளி)

18 கொடுக்கப்பட்டுள்ள மணிமேகலை **செய்யுளடிகளின் பொருளை** எழுதுக.

**குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
……………………………………………
……………………………………………

(4 புள்ளி)

19 கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

இது கடிதம் அல்ல. கண்ணீர்! வாழ்க்கையில் வழி தவறியபின் திருந்தி வாழப் புறப்பட்டு மீண்டும் விதியின் கோரவிளையாட்டில் சிக்கிக் கொண்ட என் கண்ணீர் இது. சிறைக் கம்பிகளின் பின்னால் காலம் கடந்து நான் பெற்ற 'ஞானம்' இது; ஆயினும் பயனில்லை. **(I பழமொழி)**

அன்புசால் இளைஞர்களே! ஒரு கைதியான என்னுடைய கண்ணீர் கடிதம் இது. வாழ்வா? சாவா? என்கிற விளிம்பில் நின்று கொண்டு சிறைக் கம்பிகளின் ஊடாக உங்களைப் பார்க்கின்றேன். மேடு பள்ளங்களும் கரடு முரடுகளும் நிறைந்த ஒரு பயணப் பாதை; வாழ்க்கையின் உண்மையான நுணுக்கங்களை அறியாததால் ஏற்பட்ட விளைவு. **(II மரபுத்தொடர்)**

எனக்கு மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ கிடைக்கலாம். ஆனால் நான் உங்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்வது ஒன்றுதான். இளைஞர்களே! வன்முறையில் ஈடுபட்டு வாழ்கையைச் சீரழித்துக் கொள்ள வேண்டாம். எனக்கு முறையான வழிகாட்டல் இல்லாமையால் என் வாழ்க்கை திசைமாறிப் போனது. **(III உவமைத்தொடர்)**

இளைஞர்களே! தவறிய பாதையிலிருந்து திருந்துங்கள்; திரும்புங்கள்! திரும்பிய பாதையில் தொடர்ந்து மன உறுதியுடன் நடை போடுங்கள். பாதை தவறுமுன் அறிஞர்களின் அறிவுரைகளையும் ஆசிரியர்களின் வழிகாட்டலையும் ஒருமுறை பின்னோக்கிப் பாருங்கள். உண்மை புலப்படும். **(IV திருக்குறள்)**

- இதயம் (ஜூன் 2011)
(எடுத்தாளப்பட்டது)

(12 புள்ளி)

**பிரிவு ஈ : இலக்கணம்**
**(20 புள்ளி )**

**கேள்விகள் 20 முதல் 22 வரை**

20 (அ) கீழ்க்காணும் சொல்லின் **காலம், திணை, எண், இடம், பால்** ஆகியவற்றை எழுதுக.

**வருவோம்**

(5 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் சொற்றொடரைப் பிரித்து எழுதுக.

**அவையடக்கம்**

(2 புள்ளி)

21 (அ) கொடுக்கப்பட்டுள்ள செயப்பாட்டுவினை வாக்கியத்தைச் **செய்வினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

தமிழறிஞர்கள் பலரும் கலந்துகொண்ட செம்மொழி மாநாட்டுக் கருத்தரங்கம் அறிவியல் மேதை அப்துல் கலாம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

(2 புள்ளி)

(ஆ) கீழ்க்காண்பனவற்றுள் எது **விழைவு வாக்கியம்?**

A சங்க இலக்கிய நூல்களுள் பத்துப்பாட்டு குறிப்பிடத்தக்கது.
B நிராயுதபாணியான உன்னைக் கொல்வது தர்மமல்ல; அதனால் இன்றுபோய் நாளை வா..
C ஆஹா! என்னே அழகு! இப்படிப்பட்ட அழகை இதுநாள்வரை நான் பார்த்ததேயில்லையே!

(1 புள்ளி)

22 கீழ்க்காணும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள **பிழையை** அடையாளங்கண்டு அதைச் **சரிபடுத்தி** எழுதுக.

i) வள்ளலார், ஏழை எளியவர்களுக்கு இரங்கும்படிக் கேட்டுக் கொண்டார்.
ii) நேற்றுத் திரையரங்கில் பார்த்தப் படம் மிகவும் கருத்துள்ள படமாகும்.
iii) திருக்குறள் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலைக் கொண்டதா!
iv) சாம்பார் சாதத்தோடு தயிரும் ஊறுக்காயும் சேர்த்துப் பிசைந்து சாப்பிட்டான்.
v) ‘மன்னாக் கேள்! நீதி தவறிய உமது ஆட்சி நிலைக்காது,’ நிலைக்காது.


(10 புள்ளி)

தமிழ்மொழி தாள் 2 (6354/2)

**2014**

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
[30 புள்ளி )

கீழ்க்காணும் கருத்துப்படம் வலியுறுத்தும் **செய்தி** யாது?.




(நன்றி: செம்பருத்தி)
– எடுத்தாளப்பட்டது)

(2 புள்ளி)

2 கீழ்க்காணும் கடிதம் உணர்த்தவரும் **இரண்டு** கருத்துகளை எழுதுக.



அன்புள்ள மகனே! நலமா ?.............

அன்று உன் விரல்பிடித்து நடக்கச் செய்த அதே
ஸ்பரிசத்தோடே"
இன்று பேனா பிடித்து எழுதுகிறேன்!

இந்தக் கடிதத்தை உன் மகனுக்குத் தெரியாமல்
படி...
நீயும் பிற்காலத்தில் இப்படி எழுதாமலிருக்க!

உன்னைச் சபிப்பதோ
என் துயரங்களைச் சொல்வதோ
இந்தக் கடிதத்தின் நோக்கமல்ல

உன் தாய் என்றுகூட பாராபட்சம் பார்க்காமல்
என் கடைசி ஆசையைத் தெரிவிப்பதே!
நான் இறந்தபிறகு கொல்லியைத்
தலையில் வைக்காதே வயிற்றில் வை!
என் உடலிலே முதலில் எரியப்போகும் உறுப்பு
உன்னைச் சுமந்த
இந்தக் கருப்பையாகத்தான் இருக்க வேண்டும்!

ஏனென்றால்,

நீ பால் வார்க்கக் கொடுத்து வைக்காத வயிறு
தீ வைக்கவாவது கொடுத்து வைக்கட்டும்!

மகனே! பெத்தமனம் பித்து என்பதற்குச் சான்றாய்
என் கடைசி வரி...
உன் வீட்டு உணவுதான் எனக்கில்லை
என்றாகிவிட்டது!
ஒருவேளை நீ இந்தக் கடிதத்திற்குப்
பதில் போட்டால்
அஞ்சல் தலையை எச்சிலால் அல்ல!
ஒரே ஒரு சோற்றுப் பருக்கையால் ஒட்டி அனுப்பு!

இப்படிக்கு,

**வயதான ஒரு குழந்தை!**
அநாதை இல்லத்திலிருந்து

(2 புள்ளி)

3 கீழ்க்காணும் பகுதியின்வழி பஞ்ச் குணாளனின் **இரண்டு சாதனைகளை** எழுதுக,

பூப்பந்து உலகின் சகாப்தம்
டத்தோ பஞ்ச் குணாளன்



விளையாட்டுத் துறையில் மலேசியாவின் பெயரை உலக நாடுகளில் ஓங்கச் செய்தவர்களுள் மறைந்த பஞ்ச் குணாளன் இன்றளவும் போற்றப்படும் மனிதராக வாழ்கிறார். சிப்பாங்கில் 1944ஆம் ஆண்டு பிறந்த இவர், ஆசிய பூப்பந்துப் போட்டியிலும், தோமஸ் கிண்ணப் போட்டியிலும் மலேசியா என்ற நாடு உலக வரைபடத்தில் இருப்பதை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர். 1970ஆம் ஆண்டுகளில் மலேசியா, பூப்பந்து விளையாட்டில் திறமை குறைந்திருந்த சமயத்தில், விடிவெள்ளியாகத் தோன்றி தமது நண்பர் இங் பூன் பீ என்பவருடன் சேர்ந்து தங்களின் விளையாட்டு எதிரிகளான இந்தோனேசியாவின் விளையாட்டாளர்களை மண்ணைக் கௌவச் செய்தார். காமன்வெல்த் பூப்பந்துப் போட்டி, ஆசிய இளையோர் பூப்பந்துப் போட்டி, அமெரிக்கப் பொதுப் பூப்பந்து இரட்டையர் போட்டி, டென்மார்க்குப் பொதுப் பூப்பந்துப் போட்டி, கனடா இரட்டையர் போட்டி ஆகிய போட்டிகளில் பங்கேற்றுத் தங்கம் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்த்தார். அதோடு, 1992ஆம் ஆண்டு நாட்டின் பூப்பந்துக் குழுவுக்கு இவர் தலைமையேற்றபோதுதான் தோமஸ் கிண்ணத்தை நம் நாடு வென்றது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், பிரிட்டிஷ் ராணியிடமிருந்து ஒலிம்பிக் தீபத்தைப் பெற்ற மலேசியர் என்ற பெருமை இவருக்கு உண்டு. அதோடு, மலேசிய அரசு இவரின் திருவுருவம் பதித்த 5 ரிங்கிட் தபால் தலையையும் வெளியிட்டுச் சிறப்பித்திருக்கிறது.

(2 புள்ளி)

4 கீழ்க்காணும் உரைவீச்சு, இளைஞர்களுக்குக் கூறவரும் **அறிவுரை** யாது?

*ஒற்றைக் காலில்*
*நின்றுதான்*
*ஒளி கொடுக்கிறது*
*மெழுகுவர்த்தி!*
*இளைஞனே!*
*இரண்டு காலிருந்தும்*
*இன்னும்*
*இருளில் கிடப்பதேன்?*



**- கே.எல். இந்திரா**

(2 புள்ளி)

5 கீழ்க்காணும் துணுக்கில் விவசாயி **கூறவருவது** யாது?



அதிகாரி : வங்கியில் கடன் கேட்டுத் தினம் தினம் வந்து தொந்தரவு செய்யிறயே! இது உனக்கே நல்லாருக்கா?

விவசாயி : ஒரு தரம் கடன் கொடுங்க சாமி...! அதுக்கப்புறம் நான் ஏன் இந்தப் பக்கம் தல வச்சுப் படுக்கிறேன்!

(2 புள்ளி)

6 கீழ்க்காணும் கூற்றில் இசைஞானி இளையராஜாவின் **இரண்டு எதிர்ப்பார்ப்புகளை** எழுதுக.

## இசை என்னும் நெருப்பில் தண்ணீர் தெளிக்கிறார்கள்!



இன்று புதிய படங்களுக்கு இசையமைக்கக் கேட்டுவரும் யாரும் புது மாதிரியான இசை வேண்டும் என வருவதில்லை. வெளிநாட்டுப் படங்களைப் பார்த்துவிட்டு அந்த மாதிரி வேண்டும், இந்த மாதிரி வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். புதிய சிந்தனை உள்ளவர்கள் யார் இருக்கிறார்கள்? இசை நெருப்பில் தண்ணீர் தெளிக்கத்தான் ஆள் இருக்கிறார்களே தவிர, அதைத் தூண்டிவிட ஆள் இல்லை. தேவையில்லாத சத்தங்களைத் தவிர்க்க வேண்டும் என என் மகன்களான யுவன் ஷங்கர் ராஜா, கார்த்திக் ராஜா உட்பட அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நம் தமிழ் இசை எங்கோ சென்றிருக்க வேண்டும். தமிழிசையின் மகத்துவத்தையும் மேன்மையையும் முழுதும் அறியாதவர்களாக இருக்கின்றோம். கண் முன்னே பொக்கிஷங்கள் இருக்கும்போது அதைப் பயன்படுத்தத் தெரியாதவர்களாக இருக்கிறோம். பாலாறும் தேனாறும் பக்கத்தில் ஓடும்போது மட்டமான இரசனையைத்தான் இன்றைய இரசிகர்கள் நாடுகிறார்கள்.

(2 புள்ளி)

**கேள்விகள் 7 முதல் 10 வரை**
*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை காண்க.*

1 மொழியும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களும் ஓரினத்தை வளர்க்கும் அடிப்படைக் கூறுகளாகும். தொன்மை வாய்ந்த தமிழனத்திற்கு இவ்விரு கூறுகளும் இரு கண்களைப் போன்றவை. இத்தகைய தமிழினத்தில் பிறந்த தமிழ்ப் பெண்களான நாம் எப்படி வாழ்கிறோம்? தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கும் நல்ல தமிழ்ப்பெண்களாய் வாழ்கிறோமா?

2 உடை அணிவது, உணவுப் பழக்கம் முதலிய வாழ்க்கை நெறிகளில் தமிழ்ப்பெண்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்னும் வரையறை உண்டு. ஆனால், இன்றைய நிலையில் இவ்வரையறையைத் தமிழ்ப்பெண்கள் சிலர் கடைப்பிடிப்பதில்லை என்பது மட்டுமல்லாமல் வரையறைகளும் மீறப்படுகின்றன என்பதுதான் உண்மை. இவர்கள் சுயமாகச் சம்பாதிக்கின்றோம் என்ற நினைப்பில் தங்களின் வாழ்க்கையின் வழியையே மாற்றிக்கொள்வதில் முனைப்பாயிருக்கின்றனர்.

3 உடை அணிவதிலும் இன்றைய பெண்கள் தங்கள் பண்பாட்டைச் சீரழிக்கின்றனர். நமது பண்பாட்டு உடையான சேலையை அணியும் பெண்களுள் பெரும்பாலானோர், உடை என்பது உடலை மறைக்கத்தான் என்பதை மறந்துவிடுகின்றனர். தமிழ்ப் பெண்களும் அவர்களின் பண்பாட்டு உடைகளும் இப்படித்தான் போலும் என மற்ற இனத்தவர்கள் **இழிவாகக்** கருதும்படி நடந்து கொள்கின்றனர். தமிழ்ப்பெண்களுள் பெரும்பாலானோர் கோயில், திருமணம் போன்ற பல்வேறு பொது நிகழ்ச்சிகளுக்குச் சேலை அல்லாத பிற உடைகளையே அணிந்து செல்வதைக் கண்கூடாக நாம் காணமுடிகிறது.

4 திரைப்படங்களின் தாக்கத்தினால் இந்நிலைமை மேலும் மோசம் அடைந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை. திரைப்படங்களின் பெயரிலேயே பெரும்பாலான சேலைகளும் விற்பனையில் இருக்கின்றன. அதிலும், நடிகைகள் அணியும் உடைகளே இன்று தமிழ்ப்பெண்கள் பெரும்பாலானோரின் உடைகளாகி விட்டன. திரைப்படங்களில் நடிக்கும் நடிகைகள் பணத்துக்காக எப்படியும் உடுத்துவார்கள். ஆனால், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நெறிமுறைகள் கொண்ட தமிழ்ப்பெண்கள் இவர்களைப் பின்பற்றி அருவருக்கத்தக்க வகையில் ஆடைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

5 சடைபோடுதல், பூச்சூடுதல், மஞ்சள் பூசுதல், பொட்டு வைத்தல் போன்றவை தமிழ்ப்பெண்களுக்கே உரிய தனி அடையாளங்களாகும். தேவையில்லாமல் இவற்றைச் சிதைத்து விளம்பரங்களுக்கு அடிமையாகி முகத்திற்கு வெண்ணிறச் சாயங்களைப் பூசும் நிலை அதிகம் உருவாகிக்கொண்டு வருகிறது. இது நமது அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகளையே சின்னாபின்னமாக்கிவிடும் என்பதை உணர வேண்டும்.

6 பெற்றோர்கள் தமிழ்ப்பெண்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதில்லை என்னும் குற்றச்சாட்டைப் போக்கும் வகையில் இன்று பெரும்பாலான குடும்பங்களில் ஆண்களைப்போல் பெண்களையும் உயர்கல்வி வரை படிக்க வைக்கின்றனர்; சுதந்திரமாகச் செயல்பட விடுகின்றனர். இந்தச் சுதந்திரத்தைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்வதோடு தாங்கள் பிறந்த இனப்பெருமையையும் குடும்பப் பெருமையையும் கட்டிக் காக்கும் வண்ணம் தமிழ்ப்பெண்கள் அரணாக விளங்க வேண்டும்; பண்பாட்டுச் சீரழிவுகளில் சிக்கிச் சிதையாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

- நல்ல தமிழ்ப் பெண்களாய் வாழ்வோம்
**(வீர.பூங்குழலி)** [எடுத்தாளப்பட்டது]

7 தமிழ்ப்பெண்களின் பண்பாட்டு அடையாளம் **இரண்டனைக்** குறிப்பிடுக?

(2 புள்ளி)

8 i) தமிழ்ப்பெண்களிடையே ஏற்படும் பண்பாட்டுச் சீரழிவுக்கான காரணங்கள் யாவை?

(2 புள்ளி)

ii) 4 ஆவது பத்தியின் வாயிலாக ஆசிரியர் கூறவரும் கருத்து யாது?

(2 புள்ளி)

9 கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் தருக.

> தமிழ்ப் பெண்களும் அவர்களின் பண்பாட்டு உடைகளும்
> இப்படித்தான் போலும் என மற்ற இனத்தவர்கள் **இழிவாகக்**
> கருதும்படி நடந்து கொள்கின்றனர். (15ஆவது வரி)

(2 புள்ளி)

10 தமிழ்ப்பெண்களின் பண்பாட்டுச் சீரழிவுகள் தொடர்ந்தால் சமுதாயத்திற்கு ஏற்படும் **விளைவுகளை** 50 சொற்களில் எழுதுக.

(10 புள்ளி)

**பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**

[30 புள்ளி)

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

அவளுடைய அப்பா கருப்பனுக்கு மட்டும், 'பொம்பளப் புள்ள படிச்சு என்னத்தக் கிழிக்கப்போகுது' என்ற நினைப்பு.

முத்தம்மா வெகு நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள். சரியாகப் பத்து மணிக்குத் தோட்டத்து மின்சார விளக்குத் துண்டிக்கப்பட்டுவிட்டது. அரிக்கன் விளக்கு வெளிச்சத்தில் படிக்க வேண்டிய சூழ்நிலை. இந்தத் தானா மேரா தோட்டத்தில்தான் முத்தம்மா பிறந்து வளர்ந்தாள். சஞ்சியில் வந்த அவளது பாட்டனோடு இவள் மூன்றாவது தலைமுறை.

*********************************

"இன்னும் ரெண்டே வருஷம்மா .... எப்படியும் எஸ்.டி.பி.எம். எழுதிடுவேன். அப்பாகிட்ட சொல்லிப் படிக்க அனுப்பச் சொல்லுங்கம்மா...!"

"உங்கப்பங்கிட்ட சொல்லி நடக்கப்போறது ஒன்னுமில்ல. எவ்வளவு செலவாகும்னு சொல்லுடி..!" என்றாள் முத்தம்மாவின் அம்மா காமாட்சி.

"பரிட்சைக் காசு மட்டும் இருநூறும்மா. மத்தது மாசம் இருபது முப்பது வரும்மா...!"

"என்னது இருநூறா..! அவ்வளோ காசுக்கு நான் எங்கேடி போவேன்? சரி... யாருகிட்டயாவது கடன உடன பட்டு ஏற்பாடு பண்றேன்...! நீ படிப்ப மட்டும் கவனி...!"

**********************************

ஆண்டுச் சக்கரம் சுழன்றது. முத்தம்மா எஸ்.டி.பி.எம். தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்றுப் பல்கலைக்கழக நுழைவுக்கான கடிதமும் பெற்றாள்.

"ஏம்மா அழுவுறீங்க...?"

"இல்லடி, கஞ்சி குடிச்சிக்கிட்டே இம்புட்டுத் தூரம் திறமையா படிச்சுட்டே! எல்லாரும் என்னென்னவோ சொல்றாங்க. உம் மவ டாக்டராகப் போறா, லாயராகப் போறான்னு...! எங்கள் மறந்துடமாட்டியே தாயி...!"

"இன்னும் நாலே வருஷம். படிப்பு முடிச்சிட்டு வந்து உங்கள் ராணி மாதிரி வைச்சிக் காப்பாத்துவேன்மா...!"

**********************************

பல்கலைக்கழகத்தில் பல உயர்ந்த எண்ணங்களோடும் இலட்சியங்களோடும் காலடி எடுத்து வைத்த முத்தம்மாவுக்குச் சாட்டையடியாக அமைந்தது அறிமுக வாரம். கூட்டிலிருந்து விடுபட்ட பறவைகளாகச் சிறகடித்துப் பறந்தனர் பல்கலைக்கழக மாணவர்கள், புதுமையாகவும் புரியாததாகவும் இருந்தது முதல் வாரம். 'அறிமுகப்படலம்'

எனும் பெயரில் சீனியர் மாணவர்களின் குருட்டுத்தனமான சேட்டைகளும் அட்டகாசங்களும் பொறுக்க முடியவில்லை. அன்று மாலை...

“ஏய்! உன் பேருதான் முத்தம்மாவா?” இது முதலாமவனின் ஆர்வ வினா.

“முத்தம்...ம்...ம்...மா ... வெரி சுவீட் நேம், இன்னொருவனின் நையாண்டி கலந்த பேச்சு.

"என்ன முறைக்கிறே! என்னமோ நீ மட்டுந்தான் படிக்க வந்தது நெனப்பா! எங்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டேங்கிற...!"

"நிறுத்துங்க...! இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாயில்ல? உலகம் வெளியேதான் இருண்டு கிடக்குன்னு நினைச்சேன். **இப்பதான் தெரியுது அது உள்ளேயும் இருண்டுதான் கிடக்குது**. தன்னம்பிக்கையோடு வாழ்ந்த இனம் தரங்கெட்டுப் போக உங்களப்போல உள்ளவங்கதான் காரணம். ஒவ்வோர் இனமும் தன்னை வளப்படுத்திக் கொள்ள எவ்வளவோ செய்யுறாங்க. உள்ளே படிக்க வந்துட்டோம்கிறதால நீங்க தலைகொழுத்துத் திரியுறீங்க. ஒன்னு மட்டும் உண்மை ! உங்கள மாதிரி உள்ளவங்க இருக்கிறவரை இந்தச் சமூகம் திருந்தவே போறதில்ல....!”

அதற்கப்புறம் துணிந்து அவளிடம் எவரும் எதிர் நிற்க முடியவில்லை. அப்படியே நான்காண்டுகளையும் தனக்கென ஒரு பாதை அமைத்துக் கொண்டு தானுண்டு தன் படிப்பு உண்டு என்று படிப்பை முடித்தாள் முத்தம்மா. பல்கலைக்கழகம் ஒரு பட்டதாரியை மட்டுமல்ல, பட்டறிவும் சமுதாயப் பற்றும் கொண்ட ஒரு தமிழ்ப் பெண்ணையும் வளர்த்து விட்டதில் பூரித்து நின்றது.

பட்டமளிப்பு விழாவன்று பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கையால் வாங்கிய சட்டத்துறையின் உயர்தர முதல்நிலைப் பட்டத்தோடு மேடையிலிருந்து கம்பீரமாக இறங்கி வந்தாள் முத்தம்மா.

"மாரியாத்தா...! நான் வேண்டிக்கிட்டபடியே என் கனவ நனவாக்கிட்ட தாயே...!” என்று காமாட்சி தான் வணங்கும் தெய்வத்தை மனத்தில் நினைத்து உருகினாள்; பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"வணக்கம் குமாரி முத்தம்மா! நாங்க மலேசிய வானொலியைச் சேர்ந்தவங்க. சட்டத்துறையின் முதல்நிலை மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்களுக்கு எங்களின் வாழ்த்துகள்! பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் இந்திய மாணவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்...?"

முத்தம்மா தன் தாயைப் பார்த்தாள். நிமிர்ந்து நின்ற தன் தந்தையையும் பார்த்தாள். தன்னைச் சூழந்துநின்ற ஜூனியர் மாணவர்களைப் பார்த்தாள், கணீரெனப் பேசினாள். அவளது குரல் வான்வெளியில் பரவி நின்றது.

***சி.தியாகராஜன்***
(பேரவைக் கதைகள் 3)
(எடுத்தாளப்பட்டது)

11 கருப்பனைப் பற்றி அறியக்கூடியது யாது?

(2 புள்ளி)

12 அ) முத்தம்மா ஆழ்ந்த யோசனையில் இருப்பதற்குக் காரணம் என்ன?

(2 புள்ளி)

ஆ) பல்கலைக்கழக மாணவர்கள் அநாகரிகமாக நடந்து கொள்ள எவை காரணங்களாக இருக்கக்கூடும்?

(4 புள்ளி)

13 கீழ்க்காணும் தொடர் உணர்த்தும் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது?

**இப்பதான் தெரியுது அது உள்ளேயும் இருண்டுதான் கிடக்குது.**

(3 புள்ளி)

14 அ) இச்சிறுகதை சமுதாயத்துக்கு உணர்த்தவரும் **இரண்டு** செய்திகளைக் குறிப்பிடுக?

(4 புள்ளி)

ஆ) இச்சிறுகதையில் முத்தம்மா என்கிற பாத்திரம் உமக்குள் **ஏற்படுத்திய தாக்கத்தை** விவரித்து எழுதுக.

(5 புள்ளி)

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது சொந்த மொழிநடையில் விளக்கம் எழுதுக.

### *தூக்கம்!*

தூங்காதே தம்பி தூங்காதே - நீ
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!
நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்! - சிலர்
அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்துவிட்டு
அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக் கொண்டார்
விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் – உன்போல்
குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்

*- பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்*

(10 புள்ளி)

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**

**(20 புள்ளி)**

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16 கொடுக்கப்பட்டுள்ள **உவமைத்தொடரைப்** பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

| **மாலுமி இல்லாத கப்பல் போல** |
|---|

(2 புள்ளி)

17 கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கேற்ற **திருக்குறளை** எழுதுக.

| உலகப் போக்கு எப்படி இருக்கின்றதோ அந்த உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அதைக் கடைப்பிடித்து அவ்வாறு நடப்பதே அறிவாகும். |
|---|

(2 புள்ளி)

18 கொடுக்கப்பட்டுள்ள செய்யுளின் விளக்கம் எழுதுக.

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் – மின்னிறத்துச்
செய்யத்தாள் வெள்ளைச் சிறையன்னம்
செங்கமலப் பொய்கைவாய்ப் போவதே போன்று
**- நளவெண்பா**

(4 புள்ளி)

19 *கீழ்க்காணும் பகுதியில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப்* ***பொருத்தமான*** *மொழியணிகளை எழுதுக,* ***பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.***

வாழ்க்கை என்பது வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ஜீவ நதி போன்றது. தடைகள் எவ்வளவு வந்தாலும் நதிகள் எப்போதுமே முன்னோக்கிச் சென்று கொண்டிருக்குமே தவிர, பின் வாங்கித் திரும்புவதில்லை . அது கடலுடன் கலக்கும் தனது பணியை நிறைவேற்றியே தீருகிறது. அதன் இலட்சியம், நோக்கம் தோற்பது இல்லை; வெற்றியடையும் வரை உறுதியில் தளர்வதும் இல்லை; அதுவரை ஓய்வதும் இல்லை. **(I மரபுத்தொடர்)**

நதியைப் போன்றே மனித வாழ்க்கையும் மகிழ்ச்சியும் துயரமும் நிறைந்தது. நன்மை நடக்கும்போது மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடையும் மனிதன், துன்பமுறும்போது மட்டும் துவண்டு விடுவது ஏன்? இன்பத்தைக் கொண்டாடுவது போலவே துன்பத்தையும் தாங்கிக்கொள்ள வேண்டும். தவிர, துயரம் என்பது நிரந்தரமானது அல்ல; தற்காலிகமானதுதான். **(II இணைமொழி)**

தோல்வியைக் கண்டு மனிதன் துவள வேண்டிய தேவையே இல்லை. ஊக்கத்துக்கு நிகரான செல்வம் உலகில் உண்டா? உயர்வதற்கு ஊக்கம் மட்டுமே போதுமானது. ஊக்கத்தை உடைமையாகக் கொண்டவர்கள் தோல்விகளைச் சவாலாக ஏற்றுக்கொள்வர். அவர்களுக்குத் தோல்விகள் வெற்றியை நோக்கிச் செல்ல உதவும் தடைக்கற்கள் அல்ல; அவை முன்னேற்றத்துக்குக் கொண்டு செல்லும் படிக்கட்டுகள். **(III திருக்குறள்)**

இருப்பினும், குறிக்கோளும் சரியான வழிகாட்டலும் இருந்தால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்; இறுதியில் வெற்றியின் சிகரத்தை எட்டவும் முடியும். அதற்குத் திட்டமிட்ட முயற்சியும் திடமான எண்ணமும் கடுமையான உழைப்பும் தொடர்ந்து இருக்க வேண்டும். அப்படி இருந்தால் வெற்றி என்னும் கனியைச் சுலபமாகப் பறிக்க முடியும். **(IV பழமொழி)**

(12 புள்ளி)

**பிரிவு ஈ : இலக்கணம்**

**(20 புள்ளி)**

**கேள்விகள் 20 முதல் 22 வரை 20**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) **சேர்த்து எழுதுக:**

கண் + இமை
எட்டு + எட்டு

(2 புள்ளி)

(ஆ) **இடம்** எத்தனை வகைப்படும்? அவற்றைப் பட்டியலிடுக. (4 புள்ளி)

21 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) கீழ்க்காணும் நேர்க்கூற்று வாக்கியத்தை **அயற்கூற்று வாக்கியமாக** மாற்றி எழுதுக.

| |
|---|
| ஆசிரியர், "மாணவர்களே, நாளை பள்ளிச் சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்த வாருங்கள்," என்றார். |

(2 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் செயப்பாட்டு வினை வாக்கியத்தைச் **செய்வினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

| |
|---|
| இலக்கியக் குரிசில் மா. இராமையா அவர்களால் நம் மண்ணின் மணம் கமழும் சிறந்த பல சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன. |

(2 புள்ளி)

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

| |
|---|
| தமிழர்கள், வீரமிக்கவர்களாக இருந்ததோடல்லாமல் தான் வளர்க்கும் விலங்குகளுக்கும் வீறம் இருக்கிறது என்பதைக்காட்ட அவற்றை மோதவிட்டு வேடிக்கை பார்த்தனர். பன்டைத் தமிழர்களிடம் இருந்த இந்த உணர்வு சில ஊர்களில் இன்றும் இருப்பதை காணமுடிகிறது. இதற்காக, அவர்கள் ஆடு, கோழி முதலான விலங்குகளைப் போரிடப் பளக்கி வைத்திருக்கின்றனர். |

(10 புள்ளி)


தமிழ்மொழி தாள் 2 (6354/2)

**2013**

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**

**(30 புள்ளிகள்)**

1 கொடுக்கப்பட்டுள்ள படம் உணர்த்தும் **இரண்டு** கருத்துகளை எழுதுக,




(2 புள்ளி)

3 கீழ்க்காணும் கடிதம் உணர்த்தவரும் **இரண்டு கருத்துகளை** எழுதுக?

அன்பு மகனுக்கு அப்பா எழுதுவது,



நலமாக இருக்கிறாயா? மகனே, நீ என்னைக் கொண்டு வந்து சேர்த்த இந்த முதியோர் இல்லம் வசதியாகத்தான் இருக்கிறது. பொறுப்பாய் என்னை இங்கு ஒப்படைத்துவிட்டுச் சலனமின்றி நீ வெளியேறியபோது முன்பு நானும் இதுபோல் உன்னை முதலாம் வகுப்பறையில் விட்டு விட்டு, என் முதுகுக்குப் பின்னால் நீ கதறக் கதற அழ, என் கண்ணீரை மறைத்தபடி நான் புறப்பட்ட காட்சி ஞாபகத்தில் எழுகிறது.

முதல் தரமிக்க இந்த இல்லத்தைத் தேடித் திரிந்து நீ தேர்ந்தெடுத்ததை அறிகையில்...! அன்று உனக்காக நானும் பொருத்தமான பள்ளி எதுவென்று தேடி அலைந்ததை எண்ணிப் பார்க்கிறேன். இதுவரையில் ஒரு முறையேனும் என் முகம் பார்க்க நீ வராமல் போனாலும் என் பராமரிப்புச் செலவுக்கான மாதத் தொகையை மறக்காமல் அனுப்பி வைப்பதற்காக மனம் மகிழ்ச்சியடைகிறது மகனே!

நீ விடுதியில் தங்கிப் படித்த காலத்தில் உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலிருந்தாலும் படிப்பை நினைத்து உன்னைச் சந்திக்க மறுத்ததன் பலன்தானோ இது!

இப்படிக்கு,
உன் அன்பு மறவா

அப்பா

(2 புள்ளி)

3 கீழ்க்காணும் நகைச்சுவைத்துணுக்கில் **மணி கூறவரும்** செய்தி யாது?




(2 புள்ளி)

4 கீழ்க்காணும் உரைவீச்சில் பிச்சைக்காரனின் செயல் எதனைக் காட்டுகிறது?

*பிச்சை ...!*

காற்சட்டையில்
எல்லாப் பைகளிலும்
கையைவிட்டுத்
துழாவினேன்
நெடுநேரமாய்!
துருவித் துருவித்
தேடியதில்
கையில்
தட்டுப்பட்டது
பத்து சென் நாணயம்

நாணத்தோடு
விலகினான்
பிச்சைக்காரன்!



**-வி.மணிமாறன்**

(2 புள்ளி)

5 கீழ்க்காணும் பகுதியை வாசித்து, பெருஞ்சித்திரனார் தமிழுக்கு ஆற்றிய **இரண்டு பங்களிப்பை** எழுதுக.



## பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இராசமாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பாவலரேறு பெருஞ்சித்திரனார் 1933இல் பிறந்தார். புதுவையில் அஞ்சல் துறையில் பணியாற்றியபோது பாவேந்தர் பாரதிதாசனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் ஆகியோரின் தனித்தமிழ்க் கருத்துகள் பரவப் பெருங்காரணமாக விளங்கினார். தென் மொழி, தமிழ் நிலம் என்னும் தனித்தமிழ் இதழையும் தமிழ்ச்சிட்டு என்னும் சிறுவர் இதழையும் நடத்தினார்.

திருக்குறள் உரையும் வேறுபல நூல்களும் எழுதி வெளியிட்ட இவர் தனித்தமிழ் உணர்வு வேரூன்றவும் நிலைக்கவும் அயராமல் பாடுபட்டார். தமிழகத்தில் மட்டுமின்றித் தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் சென்று தமிழுணர்வு ஊட்டி பாவலரேறு 1995இல் மறைந்தார்.

(2 புள்ளி)

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்து, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் **இரண்டு** சிறப்புகளை எழுதுக.

## மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்



பாட்டிலே கோட்டை கட்டியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்பார்கள், 1930ஆம் ஆண்டில் பிறந்து தமது 29ஆவது வயதிலேயே இவர் மறைந்து விட்டாலும் தமிழர் வியக்கும் வண்ணம் அற்புதமான பாடல்களை எழுதியவர். பள்ளிப்படிப்பை முழுமையாகக் கற்காவிட்டாலும் கருவிலே திருவமைந்த பட்டுக்கோட்டையார் சிறந்த தமிழறிஞராகத் திகழ்ந்தார். மக்கள் கவிஞராகப் போற்றப்பட்ட இவர், சீரிய சிந்தனையாளர் மட்டுமல்லர், சிறந்த மேடைப்பேச்சாளரும் தமிழ்த்திரைப்பட உலகில் தன்னெழுச்சிப் பாடலாசிரியரும் ஆவார்.

பாரதியாருக்குப் பிறகு பண்டிதத் தமிழைப் பாமர மக்களும் அறியும் வண்ணம் எளிய முறையில் இனிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடுவதில் முன்னணி வகித்தார். பொதுவுடைமைச் சிந்தனையாளரான பட்டுக்கோட்டையார் எழுதிய 'தூங்காதே தம்பி தூங்காதே', 'திருடாதே! பாப்பா திருடாதே!', 'ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி' போன்ற பாடல்வரிகளின் மூலம் தன்மான உணர்ச்சியைத் தமிழர்களின் நரம்போடு பின்னிவளரச் செய்தவர். இவரைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு இவருடைய பாடல்களை நாட்டுடைமையாக ஆக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(2 புள்ளி)

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

1 அண்மைய காலமாகத் தமிழ்ப் பள்ளியின் மேம்பாட்டின்பால் சமூகம் காட்டும் அக்கறையாலும் பல்வேறு ஊக்குவிப்புகளாலும் தமிழ்ப்பள்ளிகளில் எல்லா நிலைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருவதை நன்கு உணர முடிகின்றது. குறிப்பாகக் கற்றல் கற்பித்தல் சூழல்களில் நிகழ்ந்துவரும் வளமிக்க மாற்றங்கள் மாணவர்களின் அடைவுநிலைகளை மேம்படுத்தி வருகிறது. மொழிப்பற்றும் இனமான உணர்வும் ஈக உணர்வும் மிக்க ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் பள்ளியின் நலனுக்காக அயராது பாடுபடுவதைக் கண்கூடாகக் காண முடிகிறது. இவையனைத்தும் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வதற்கு வழிவகுத்துள்ளன என்றால் மறுப்பதற்கில்லை.

2 இந்நாட்டில் தமிழ்மொழியும் தமிழ்ப் பண்பாடும் நிலைப்பதோடு தழைத்தோங்க வேண்டுமெனில் தமிழ்ப்பள்ளிகள் சிறந்து விளங்க வேண்டுவது அவசியமாகும். இப்பொழுதும் தமிழ்ப்பள்ளிகள் அதைத்தான் செய்துவருகின்றன என்றால் மிகையாகாது. எதிர்காலத்திலும் தமிழ்ப்பள்ளிகள் கல்வி மையங்களாக மட்டுமன்றித் தமிழர்களின் சமய, கலை, பண்பாட்டு மையங்களாகவும் திகழ வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உள்ளதென்பதை நாம் உணரவேண்டும். இதற்கேற்ற வகையில் இப்பள்ளிகள் **பரிணமிக்க** வேண்டுவது காலத்தின் கட்டாயமாகும். அவ்வாறு இல்லையெனில் மொரிசியஸ், ரியூனியன், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களின் முகவரி தொலைந்தது போன்று இந்நாட்டில் ஏற்பட்டுவிடும்; ஏற்படாது என்று இறுமாப்புடன் இருந்துவிடுவது தவறாகும்.

3 நாம் எதிர்பார்ப்பதுபோல் தமிழ்ப்பள்ளிகள் விளங்க வேண்டுமெனில் அவை எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் எண்ணிக்கையில் அதிகம். தமிழ்ப்பள்ளி என்பது தமிழ்ச் சமூகத்தின் உரிமைப் பொருளாகும். அந்த உன்னதப் பொருளை வளமடையச் செய்து பேணிக்காப்பது சமூகத்தின் கையிலேயே உள்ளது. சீனச் சமூகத்தைப் போன்று இனமான உணர்வுமிக்கவர்களாக நாம் திகழ வேண்டும்; சுய காலில் நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும், தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்காகத் தமிழ்ச் சமூகம் பிறரை நம்பியிராமல் தன் சொந்த ஆற்றலால் அதனை மேன்மையடையச் செய்வதே சாலச்சிறந்ததாகும்.

4 நாட்டின் மக்கள் தொகையில் 7.5 விழுக்காட்டினராக மட்டுமேயுள்ள இந்தியர்கள் வாக்குவலிமைக் குறைவால் அரசின் கருணைக்கு ஏங்கி நிற்க நேர்கிறது. இந்நிலையை ஈடுகட்ட அரசு சார்பற்ற அமைப்புகளும், தொழிலதிபர்களும், செல்வர்களும் பெரும்பங்காற்றுவது அவசியம். எதிர்காலத்தில் தோட்டப்புறப் பள்ளிகள் எண்ணிக்கையில் குறைந்தாலும் நகர்ப்புறத் தமிழ்ப்பள்ளிகள் பல்லாயிரம் மாணவர் பயிலும் பெரும் பள்ளிகளாகத் திகழும் நிலை உருவாகக்கூடும். இந்நிலையை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும்.

5 பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புவதோடு தங்கள் கடமை முடிந்ததென எண்ணாமல் பள்ளியுடன் அணுக்கமான உறவை

வைத்துக்கொள்வது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் பெருநன்மை விளைக்கும். ஈக உணர்வோடு உழைக்கும் ஆசிரியர்களின் சேவைகளுக்கு மதிப்பளித்துப் பாராட்டுவது அவசியம்.

6 மேன்மையுற்ற ஓர் இனத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களே. உலகமயச் சவால்களை எதிர்கொள்ளும் அதேவேளை மொழிப்பற்றும் பொருள்வளமும் மிக்க மலேசியத் தமிழர்களை உருவாக்குவது தமிழ்ப்பள்ளியாசிரியர்களின் கடமையாகும். தமிழ்க்கல்வியில் நம்பிக்கை வைத்துத் தங்கள் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரின் நம்பிக்கை வீணாகாமல் பார்த்துக் கொள்வதும் தமிழ்ப்பள்ளியாசிரியர்களின் கடமையாகும். அவர்கள், தங்கள் கடமையை உணர்ந்து அறவழியில் செயற்பட்டால் அதுவே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதப்படும்.

***- சோ.சுப்பிரமணி***
(மலேசியாவில் தமிழ்க்கல்வி)
(எடுத்தாளப்பட்டது)

7 தமிழ்ப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வதற்கான காரணங்கள் யாவை?

(2 புள்ளி)

8 25 - 26ஆம் வரியில் தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்காகத் தமிழ்ச் சமூகம் தம் சொந்த ஆற்றலால் அதனை மேன்மையடையச் செய்வதே சிறப்பு என்று ஆசிரியர் குறிப்பிடுவது ஏன்?

(4 புள்ளி)

9 கீழ்க்காணும் வாக்கியத்தில் கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் தருக,

இதற்கேற்ற வகையில் இப்பள்ளிகள் **பரிணமிக்க** வேண்டுவது காலத்தின் கட்டாயமாகும். (16ஆம் வரி)

(2 புள்ளி)

10 நம் நாட்டில் தமிழ்ப்பள்ளிகள் நிலைத்திருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய **பரிந்துரைகளை** 50 சொற்களுக்குள் எழுதுக.

(10 புள்ளி)

**பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**
**(30 புள்ளிகள்)**

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கட்டபட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

1 *'டுக்காச்சித்தாஞா டி.மாலும்கான் ...'*

2 கடிதத்தின் அந்த வரிகள் கோபாலின் வெகுநாளையக் கனவுகளுக்குக் கல்லறை கட்டிக் கொண்டிருந்தன.

3 பல இடங்களில் வேலைக்கு நேர்முகப் பேட்டிக்கு அழைக்காமலேயே பதில்கள் வரும். ஏதோ ஒருசில இடங்களில் மட்டும் நேர்முகப் பேட்டிக்கு அழைப்பு வரும். பேட்டிக்குப் போய்ப் பார்த்தால், ஒரே ஒரு காலி இடத்திற்கு முப்பது நாற்பது பேர் அழைக்கப்பட்டிருப்பதும், அவர்களில் தான் ஒருவன் மட்டுமே தமிழனாக இருப்பதும் நம்பிக்கையை ஆட்டங்காணச் செய்துவிடும். இருந்தாலும், நேர்முகப்பேட்டி முடிந்து வெளிவரும்போது வேலை கிடைத்தாலும் கிடைத்துவிடும் என்ற நப்பாசை துளிர்விடும்.

4 ஒவ்வொரு முறையும் அரசாங்க முத்திரையிட்ட கடிதத்தைப் பிரித்தவுடன் *டுக்கச்சித்தா* எனும் அந்த வார்த்தை கண்களை நனைத்துவிடும். அவனது மௌனத்தைக் கண்டே அப்பா ஊகித்துக் கொண்டு வந்துசாப்பிடுப்பா... இது இல்லைன்னா இன்னொன்று, அதுக்காக ஏன் கவலைப்படறே," என்று ஆறுதலாகக் கூறுவார். அப்பாவின் ஆறுதலில் மறுபடியும் நம்பிக்கையோடு நாளிதழைப் புரட்டுவான். சில நாளில் முடிவைத் தாங்கிவரும் கடிதம் அனைத்து எண்ணங்களையும் அழித்துவிடும்.

5 ஒருநாள் காலையில் நாளிதழில் பார்த்த *ஆபீஸ் பியூன்** வேலை ஒன்றிற்கு எழுதி வைத்த மனுவை எடுத்துக்கொண்டு அஞ்சலகத்தை நோக்கி நடந்தான். **இந்த வேலை கூடவா** கிடைக்காமல் போய்விடும்? என்று எண்ணிக் கொண்டவனாய்க் கடிதத்தை அஞ்சலில் சேர்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான்.

6 அஞ்சலகத்திலிருந்து திருப்பியபோது நண்பன் *லிம்* எதிர்ப்பட்டான். இருவரும் தங்களின் வகுப்புத் தோழர்கள் சிலரைப்பற்றிப் பேசியபடியே நடந்தனர். வகுப்புக்கு எப்போதும் காலம் தாழ்த்தியே வரும் *சியூ கிம் சாய்* வெளிநாட்டுக்குப் படிக்கப் போய்விட்டானாம். கடைசி மேசையில் உட்கார்ந்து கொண்டு அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் *அமாட் மூசா* பினாங்கில் *கஸ்டம்ஸ்* இலாகாவில் வேலை செய்கிறானாம், *அமீனா* அரசாங்க மருத்துவமனையில் *கிளார்க்* வேலை செய்கிறாளாம், *எஸ்.பி.எம்,* தேர்வில் இரண்டே இரண்டு பாடங்களில் *கிரேடிட்* பெற்ற அவர்களுக்கு அரசாங்க வேலை கிடைத்துவிட்டது, எனக்கு ஆறு பாடங்களில் *கிரேடிட்* இருந்தும் எந்தவோர் அரசாங்க வேலையும் கிடைக்கமாட்டேன் என்கிறது. **என்ன அநியாயம் இது!** மனம் வெதும்பியது கோபாலுக்கு.

7 இருவரும் அருகிலிருக்கும் *ஐஸ்* கடையில் கரும்புச் சாறு குடித்தபோது, பக்கத்திலிருந்த இயந்திரத்தில் கரும்பு அரைபட்டுச் சக்கையாக வெளியில் வந்துவிழுவது கோபாலின் மனத்திற்கு எதையோ சொல்லிக் கொண்டிருந்தது.

8 வீட்டை அடைந்தபோது அந்தக் கரும்பின் சாறுபோல இனிமையான முடிவு ஒன்று அவனுள் விரவியிருந்தது. நாற்காலியில் சாய்ந்தபடி *காப்பி* உறிஞ்சிக் கொண்டிருந்த அப்பாவிடம் தன் முடிவைக் கூறினான் கோபால். அவனது முடிவைக் கேட்டுச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார் அவர்.

9 “கோபாலு...! என்னப்பா சொல்ற...? இவ்வளோ படிச்சிட்டுப் போயும் போயும் *ஐஸ்* விக்கப் போறீயா? ஏதாவது அரசாங்க வேலை பார்த்தாதானே நமக்குப் பெருமையாக இருக்கும். கோழி மேய்ச் சாலும் கும்பினியிலே மேய்க்கணும்னு பெரியவங்க சொல்லுவாங்கப்பா "அம்மா வள்ளியம்மாவால் மகனது முடிவை ஜீரணிக்க முடியாமல் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள்.

10 “சரிப்பா ..! வியாபாரத்திற்கு வேண்டிய *லைசென்ஸ்,* தள்ளுவண்டி, கரும்பரைக்கிற *மிசினுன்னு* அனைத்து வேலைகளையும் நான் செய்திடுறேன். உன் மனசுக்குச் சரின்னு பட்டதைச் செய். சொந்த தொழில் செஞ்சவங்க என்ன கெட்டா போயிட்டாங்க! சீனனுங்க சொந்தமா தொழில் செஞ்சி பொழைக்கல...! நீ துணிஞ்சி இறங்குப்பா, நான் இருக்கேன் உனக்குத் துணையா...!” அப்பா பச்சைக் கொடி காட்டினார்.

11 மருத்துவமனையின் நுழைவாசலின் மரத்தடியில் கோபால் இப்போது *லைச்சி, சோயா*பால், ஆரஞ்சு ஆகியவற்றைத் தனித்தனியாகத் தள்ளுவண்டியில் வைத்து விற்கிறான். முதல் நாளே கணிசமான அளவு வியாபாரம் நடந்தது கோபாலுக்கு மனத்தெம்பை அளித்தது, நாளுக்கு நாள் அதிகமானோர் வருகிறார்கள். தாதியரும் பிற மருத்துவப் பணியாளர்களும் குளிர்பானங்களைக் குடித்துவிட்டு நெகிழிப்** பைகளில் வாங்கிச் செல்கிறார்கள். நாளொன்றுக்கு அறுபது எழுபது வெள்ளிக்கு மேல் வியாபாரம் நடக்கிறது. வீட்டில் கல்லாக்கட்டும்போது அம்மாகூட முணுமுணுக்காமல் அருகில் வந்து பார்க்கிறார்.

12 அன்று சாயுங்காலம் வண்டியைத் தள்ளிக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது அம்மா ஒரு கடிதத்தை நீட்டினார், *'உருசான் கெராஜாஆன்'* முத்திரையைப் பார்த்தவுடனே இடையில் *ஆபீஸ் பியூன்* வேலை நேர்முகத்தேர்வுக்குப் போய்வந்தது நினைவுக்கு வந்தது.

13 முன்புபோல இப்போது அவனது நெஞ்சு படபடக்கவில்லை. "என்ன... *டுக்காசித்தான்னு* இருக்கும்" என்று எண்ணிச் சாதாரணமாகப் பிரித்தான், அவனது கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. *'சுக்காசித்தாஞா'* என்ற வார்த்தையை உற்றுப்பார்த்தான். ஒன்றாம் தேதியிலே வேலையில் வந்து சேரும்படி, கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

14 அந்த வேலைக்கான சம்பளம், கண்டவருக்கெல்லாம் கும்பிடு போட்டுக் கைக்கட்டி நின்று சேவகம் செய்ய வேண்டியநிலை, வியாபாரத்தில் தற்போதைய வருமானம், இதில் காணும் அடிமையற்ற சுதந்திர நிலை ஆகியவை அவனது கண் முன்னே காட்சிகளாய் விரிந்தன.

ஒரு முடிவுக்கு வந்தவனாய், *'டெங்கான் டுக்காசித்தாஞா டிமக்லும்கான்'* எனத் தொடங்கி அந்த வேலையை ஏற்றுக்கொள்ள தான் விரும்பவில்லை என எழுதி முடித்தான்.

**- எம்.ஏ.இளஞ்செல்வன்**
**(டுக்காசித்தா :1983)**
(எடுத்தாளப்பட்டது)

** அலுவலகப் பையன்*
*** பிளாஸ்டிக்*

11 வியாபாரம் செய்ய கோபால் எடுத்த முடிவு தன் அம்மாவுக்கு மனநிறைவு அளிக்கவில்லை, ஏன்? (3 புள்ளி)

12 (i) **என்ன அநியாயம் இது** (28ஆவது வரி) என்னும் கூற்றில் வெளிப்படும் கருத்துகள் யாவை?
(3 புள்ளி)

(ii) 10ஆவது பத்தியில் கோபாலின் அப்பாவைப் பற்றி அறிவது என்ன?
(3 புள்ளி)

13 (i) இக்கதையில் எம்.ஏ.இளஞ்செல்வன் சமுதாயத்துக்குக் கூறவரும் செய்திகள் யாவை? (5 புள்ளி)

(ii) இச்சிறுகதையில் கோபால் எடுத்த முடிவைப்பற்றி உமது கருத்தென்ன?
(4 புள்ளி)

14 **இந்த வேலை கூடவா** என்னும் சொற்றொடர் உணர்த்தும் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது?
(2 புள்ளி)

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலை வாசித்து, உமது **சொந்த மொழிநடையில் விளக்கம்** எழுதுக.

**உனக்கும் கீழே உள்ளவர் கோடி.!**

வாழ்க்கையென்றால் ஆயிரமிருக்கும்,
வாசல்தோறும் வேதனையிருக்கும்;
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை;
எதையும் தாங்கும் இதயமிருந்தால்
இறுதி வரைக்கும் அமைதியிருக்கும்!
உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு.

*- கவியரசு கண்ணதாசன்*

(10 புள்ளி)

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**
**(20 புள்ளிகள்)**

16 கொடுக்கப்பட்டுள்ள **இரட்டைக்கிளவியைப்** பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்தும் காட்டுக.

**திமுதிமு**

(2 பள்ளி)

17 கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற **திருக்குறளை** எழுதுக.

தமக்குத் துன்பம் செய்தவருக்கும் இன்பமே செய்யாவிடின்,
சான்றாண்மை என்ற பெருங்குணம் இருந்தும் பயனில்லை.

(2 புள்ளி)

18 கொடுக்கப்பட்டுள்ள **நன்னூல் செய்யுளின் முதல் அடிக்கான** விளக்கத்தை மட்டும் எழுதுக.

அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடை மாணாக்கர்.

(4 புள்ளி)

19 கீழ்க்காணும் பனுவலில், அடைப்புகளுக்குள் இருக்க வேண்டிய **பொருத்தமான** மொழியணிகளை எழுதுக. (பத்தியை மீண்டும் **எழுத வேண்டாம்**)

டத்தோ தெய்வீகன், மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியை முதன்மைப் பாடமாக எடுத்துப் படிக்கும் போதே சக மாணவர்கள் அவரை ஏளனமாகப் பார்த்தார்கள், அதனையே ஒரு சவாலாக நினைத்தார். **(i இணைமொழி)** நினைத்தது போலவே எல்லாத் தேர்வுகளிலும் சிறந்த புள்ளிகளும் பரிசுகளும் பெற்றுத் தனது திறமையை நிரூபித்தார்.

உண்மையில், அவர் படித்த இந்திய ஆய்வில் துறையிலேயே பேராசிரியராக வேண்டும் என்பதுதான் அவரது லட்சியமாக இருந்தது. ஆனால், அவரது வாழ்க்கைப் பயணம் காவல் துறை பக்கம் திரும்பி விட்டது. அதை நினைத்து அவர் **(ii மரபுத்தொடர்)** மனம் கலங்கவில்லை; அதனைத் திறந்த மனத்துடன் ஏற்றுக் கொண்டார்,

காவல் துறைப் பயிற்சியின் போது, அதில் கலந்து கொண்ட எல்லாரும் வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்களாக இருந்தனர், அவர் மட்டுமே தமிழ்த்துறையில் பட்டம் பெற்றவராக இருந்தார். இதை எண்ணித் தாழ்வுமனப்பான்மை கொள்ளவில்லை. மாறாகத் தனக்குக் கிடைத்த அந்த அருமையான வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்தி தனக்கு வேண்டிய வெற்றிக்கனியைப் பறிப்பதற்கு உறுதி பூண்டார். **(iii பழமொழி)**.

முயன்றால் எதையும் சாதிக்க முடியும் என்பதால் சோர்வு இல்லாமல் உழைத்தார், அவ்வாறு உழைப்பவர்களுக்கே வெற்றி கிட்டும் எனத் திடமாக நம்பினார். உடல் ரீதியான, மனோ ரீதியான பலவிதப் பயிற்சிகளையும் தேர்வுகளையும் முடித்தார். அதில் ஒன்று, காவல் துறையைப் பற்றியதும் காவல் துறைச் சட்டங்கள் பற்றிய தேர்வுமாகும். அந்தத் தேர்வில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகப் புள்ளிகள் பெற்றவரும் அவர்தாம். **(iv திருக்குறள்)**. படித்தது தமிழாக இருந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியாதா என்ன? என்பதே இளைஞர்களுக்கு அவர் விடுக்கும் வினா.

மக்கள் ஓசை : 2012
(எடுத்தாளப்பட்டது)

(12 புள்ளி)

**பிரிவு : இலக்கணம்**

**(20 புள்ளிகள்)**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) **வருவோம்** என்னும் சொல்லின் காலம், திணை, எண், இடம், பால் ஆகியவற்றை எழுதுக.

(5 புள்ளி)

(ஆ) பெயர்ச்சொல் என்றால் என்ன?

அதற்கு, **இரண்டு** எடுத்துக்காட்டுகள் எழுதுக.

(2 புள்ளி)

21 கொடுக்கப்பட்டுள்ள எதிர் மறைவினை வாக்கியத்தை **உடன்பாட்டுவினை வாக்கியமாக** மாற்றி எடுக்க.

| |
|---|
| பூரணி தன் வீட்டுத் தோட்டத்தில் பலவகையான செடிகள் நடாள். |

(3 புள்ளி)

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளை** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. (பத்தியை மீண்டும் **எழுத வேண்டாம்**. நிறுத்தக்குறிகளைப் பிழைகளாகக் கருத வேண்டாம்.)

| |
|---|
| மாணவ மாணவியரே! நன்றாகச் சிந்தித்து பாருங்கள். குலத்தின் நீர்மட்டம் உயர உயர மலரின் உயரமும் கூடிக்கொண்டே போகும். அதுபோல் உங்கள் உள்ளத்தின் உயர்வான என்னங்கள் தோன்றிக் கொண்டேயிருக்குமானால் உங்கள் வாழ்க்கையும் அம்மலரைப் போல் உயரும் என்பதனை தெய்வப்புலவர் தம் திருக்குரளில் கூறியுள்ளாரே நினைவிருக்கிறதா? |


(10 புள்ளி)

தமிழ்மொழி தாள் 2 (6354/2)

**2012**

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**
**(30 புள்ளிகள்)**

1. கீழ்க்காணும் இச்சுவரொட்டி உணர்த்தும் **இரண்டு** கருத்துகளை எழுதுக.




(2 புள்ளி)

2 கீழ்க்காணும் நாளிதழ்த் தலைப்புகளின்வழி உணர்த்தவரும் செய்தி யாது?

**ஒரே மலேசியா கொள்கையின் கீழ் தமிழ்மொழி மலேசிய ரிங்கிட்டில் இடம்பெறச் செய்ய வேண்டும்.**
- மலேசிய நண்பன்

**வங்கிகளில் தமிழை இடம்பெறச் செய்யுங்கள்! நிதி அமைச்சரிடம் நேரடி வேண்டுகோள்.**
- மக்கள் ஓசை

(2 புள்ளி)

3 கீழ்க்காணும் பகுதியை வாசித்து, ராதிகா சிற்சபை ஈசன் பற்றிய **இரண்டு** சிறப்புகளை எழுதுக.

*கனடிய நாடாளுமன்றத்தில் தமிழ் முழக்கம்*
**திருக்குறள் மீது பதவி உறுதிமொழி**



கனடா, ஜூன் 12-
கனடிய நாடாளுமன்றத்திற்குத் தேர்வு பெற்ற இலங்கைத் தமிழ்ப்பெண் ராதிகா சிற்சபை ஈசன், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தமது கன்னிப் பேச்சினைத் தமிழில் நிகழ்த்தியதோடு திருக்குறள் மீது பதவி உறுதிமொழியும் எடுத்துக்கொண்டு மாபெரும் சாதனை படைத்துள்ளார். "கனடிய நாடாளுமன்றத்தின் முதல் தமிழ் உறுப்பினர் என்ற வகையிலே இந்த மதிப்பிற்குரிய அவையில் என் தாய் மொழியான தமிழில் பேச முடிவதை எண்ணி ஒருங்கே பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். புலம்பெயர்ந்த தமிழர்களான எங்களையும் இந்த நாடு இருகரம் நீட்டி அரவணைத்துள்ளதோடு இந்த அவையில் திருக்குறள் மீது உறுதிமொழி எடுக்க அனுமதித்ததைத் தமிழுக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல; உலகெங்கிலும் வாழும் தமிழருக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே கருதுகிறேன், கனடா வாழ் தமிழரின் அடுத்தக்கட்ட முன்னெடுப்புக்கு இஃதுதொரு மைல்கல்லாகவே அமையும் எனக் கருதுகிறேன்," என்று அவர் தமதுரையில் கூறினார்.

*-நன்றி, மக்கள் ஓசை*

(2 புள்ளி)

4 கீழ்க்காணும் உரைவீச்சு உணர்த்தவரும் **கருத்து** யாது?

**காலம்!**

அம்மா!
அன்று
எனக்காக உழைத்தாய்
இன்றும்
எனக்காக உழைக்கிறாய் ...!

ரப்பர் மரக்காடுகளில்
ரப்பர் வழிகிறதோ இல்லையோ
இன்னமும் கசிகிறது
உன் வியர்வை மட்டும்!

அம்மா ...!
நீ அழுததைப் பார்த்திருக்கிறேன்
எப்போதாவது
சிரித்திருக்கிறாயா!



*ப.ராமு*
*- இப்போது நீ இருந்தால் ...*
(எடுத்தாளப்பட்டது)

(2 புள்ளி)

5 கீழ்க்காணும் துணுக்கில் மாணவரின் கூற்றைப் பற்றி நீ அறிந்துகொண்டது என்ன?




**"சார் என் தலையில் எறும்பு ஏறுது பாருங்க! ***

**"அதை ஏன் என்னைப் பார்க்கச் சொல்ற?"**

**"நீங்க தானே சார், என் தலையில் எதுவும் ஏறாதுன்னு சொன்னீங்க!"**

(2 புள்ளி)

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்து, எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றிய **இரண்டு** சிறப்புகளை எழுதுக.



பொன்மனச் செம்மல் எனப் போற்றப்படுபவர் எம்.ஜி.ஆர். என்னும் எம்.ஜி.இராமச்சந்திரன். இவர், புரட்சிமிக்க பாத்திரங்களின்வழி நடித்துத் தமிழக மக்களின் மனங்கவர்ந்தவர். 'அச்சம் என்பது மடமையடா! அஞ்சாமை திராவிடர் உடமையடா!', 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி' போன்ற பாடல்கள்வழி இளைஞர்களுக்கு எழுச்சியூட்டியவர்; தாயைத் தெய்வமாகப் போற்றிய பண்பினர். அரசியலில் ஈடுபட்டுத் தமிழகத்தின் முதலமைச்சரான இவர், தம் ஆட்சி காலத்தில் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செயற்கரிய செயல்கள் செய்த செம்மல்; வாரிக் கொடுத்த வள்ளல். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ 100 ஏக்கர் நிலம் கேட்டுச் சென்ற தமிழகப் புலவர் குழுவுக்கு 1000 ஏக்கர் நிலைத்தை ஒதுக்கிய அருட்கொடையாளர். தந்தை பெரியாரால் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சில மாற்றங்களுடன் அமலுக்குக் கொண்டுவந்தவர். ஈழத்தில் தமிழர்களின் இன்னலைத் துடைக்க உதவியவர். கருமவீரர் காமராஜர் சிந்தனையில் உருவான சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்திப் பள்ளிச் சிறுவர்களின் பசியைத் தீர்த்தவர். எம்.ஜி.ஆரைத் தம் இதய தெய்வமாக ஏற்றுக்கொண்ட இரசிகர்கள் அவரைப் போலவே புகைபிடிக்காமலும் மது அருந்தாமலும் பெற்ற தாயைத் தெய்வமாகப் போற்றியும் வரும் அன்பர்கள் அநேகம். 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும், அது முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்' என்று பாடியது போலவே காலமாகி கால் நூற்றாண்டு கடந்தும் தமிழர் இதயங்களில் நாடோடி மன்னனாக, எங்கள் வீட்டுப் பிள்ளையாக, அறிஞர் அண்ணாவின் இதயக்கனியாக இன்றும் வாழ்கிறார்.

**- உங்கள் குரல்**
(சில மாற்றங்களுடன்

(2 புள்ளி)

**கேள்விகள் 7-10**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை காண்க.*

1 மனித இனத்தின் தொடர்புக் கருவியாக மொழி மட்டுமே இருந்த காலம் கடந்துவிட்டது. இன்றைய நாளில் மொழியைக் கடந்து பல்வகைத் தொடர்புக் கருவிகள் உருவாகிவிட்டன. மொழியை அடிப்படையாகக் கொண்ட பல்வகைத் தொடர்பு ஊடகங்களும் உருவாகியுள்ளன அவற்றுள் குறுந்தகவல் குறிப்பிடத்தக்கதாகும். இது மக்களிடையே மிகப் பரவலாகப் பெருகியுள்ள ஊடகமாகும். ஆங்கிலத்தில் எஸ்.எம்.எஸ் எனச் சொல்லப்படுவதையே மொழியாக்கம் செய்து குறுந்தகவல், குறுஞ்செய்தி, துளிச்செய்தி என்றெல்லாம் சொல்கின்றோம்.

2 இன்று இளையோரிடையே மிகப் பரவலான செல்வாக்கினைப் பெற்ற தொடர்பு ஊடகமாகக் குறுந்தகவல் அமைந்துள்ளது. கடிதம், தொலைபேசி போன்ற தொடர்புக் கருவிகளை முறியடித்துவிட்டது குறுந்தகவல். சமுதாயத்தில் எல்லா நிலைகளிலுள்ளவர்களும் பயன்படுத்தக்கூடிய ஊடகமாக இஃது அமைந்துள்ளது. உலக மக்களில் அதிகமானோர் இத்தொடர்பு ஊடகத்தைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

3 இன்றைய நாளில் 2.4 பில்லியன் மக்கள் இச்சேவையினைப் பயன்படுத்துகின்றனர். கைப்பேசியைப் பயன்படுத்தும் 74 விழுக்காட்டினர் இச்சேவையைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. கடந்தாண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் மலேசிய மக்களால் அனுப்பப்பட்ட குறுந்தகவலின் எண்ணிக்கை 11.7 மில்லியனாகும். இத்தகவலைப் பல்முனைத் தொடர்புத்துறை வாரியம் அறிவித்துள்ளது.

4 உலக மக்களிடையே மிகப்பெரிய செல்வாக்கினைப் பெற்றுள்ள குறுந்தகவல் சில நன்மைகளுக்கிடையே பல்வகைத் தீமைகளையும் விளைவிக்கின்றது. பணச்சிக்கனம், காலச் சிக்கனம், விரைவான தொடர்பு முதலிய நன்மைகளைக் குறுந்தகவல் வழியாகப் பெறுகின்றோம் என்பதில் ஐயமில்லை. இருப்பினும், இவற்றை அடுத்துப் பல்வேறு தீமைகளையும் இஃது உருவாக்குகின்றது என்றால் மறுப்பதற்கில்லை.

5 குறுந்தகவலின் இன்றைய நிலை மாறிவிட்டது. தொடர்புநிலை யாவும் குறுந்தகவல் வழியாகவே நிகழ்கின்றது. கடிதம் எழுதுதல், வாழ்த்து அட்டை அனுப்புதல் என்னும் சூழல் **அற்றுவிட்டது**. இன்றைய தலைமுறையினருக்குக் கடிதம் எழுதுவதற்கான சூழல் அருகிவிட்டது. நலம் விழைதல், பாராட்டுத் தெரிவித்தல், வாழ்த்துக் கூறுதல் என்பன மிக மிகச் செயற்கையாகவும் சுருக்கமாகவும் நிகழ்கின்றன. மனித உணர்வினைக் கடந்து, சடங்கு என்னும் நிலையே எஞ்சியுள்ளது.

6 இஃதொருபுறமிருக்க குறுந்தகவல், மனித இனத்திற்கு மற்றுமொரு இழப்பினை ஏற்படுத்துகின்றது. இது மனிதச் சிந்தனைக்கு அடிப்படையாக உள்ள மொழிக்குக் குந்தகம் விளைவிக்கின்றது; மொழிச்சிதைவைப் பரவலாக ஏற்படுத்துகின்றது. பலர் எழுத்துகளையும் சொற்களையும் சுருக்கிச் செய்திகளைத் தெரிவிக்க முனைகின்றனர். ஆங்கிலத்திற்கு மட்டுமே இந்நிலை ஏற்பட்டுள்ளது என்று எண்ணிவிட வேண்டாம். பெருவாரியான மொழிகளுக்கும் இதே நிலைதான் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

**- செம்பருத்தி**
(எடுத்தாளப்பட்டது)

7 இளையோரிடையே மிகப் பரவலான செல்வாக்கினைப் பெற்ற தொடர்பு ஊடகமாகக் குறுந்தகவல் அமைந்துள்ளது. ஏன்?

(3 புள்ளி)

8 குறுந்தகவலின் வழியாகத் தொடர்புநிலையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் யாவை?

(3 புள்ளி)

9 கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

கடிதம் எழுதுதம், வாழ்த்து அட்டை அனுப்புதல் என்னும் சூழல் **அற்றுவிட்டது**.

(2 புள்ளி)

10 மனித வாழ்வில், குறுந்தகவலால் ஏற்பட்டுவரும் மாற்றங்களைக் களைவதற்கு மேற்கொள்ளவேண்டிய **வழிமுறைகளை** 50 சொற்களுக்குள் எழுதுக.

(10 புள்ளி)

**பிரிவு : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**
**(30 புள்ளிகள்)**

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

மாதவன் *கிராணி* தொண்டையைச் செருமி உயர்த்தி நீதிமன்றச் சேவகன் கூப்பிடுவதுபோல் கூப்பிட்டார். "முத்துசாமி ... முத்துசாமி ...!

*ஆஜர்* சொல்வதற்குக் கூட நா எழவில்லை முத்துசாமிக்கு. வறண்ட நாக்கை எச்சிலால் ஈரப்படுத்திக்கொண்டே முன்வந்து நின்றான், இதயம் என்றுமில்லா வேகத்தில் தடதடவென்று அடித்துக்கொண்டது, மாதவன் *கிராணி* உட்கார்ந்திருந்த மேசையோரம் போய்ப் பௌவியமாக நின்றான் முத்துசாமி.

"இந்தா, இதிலே கைநாட்டுப் போடு. உனக்கு மூனு மாசந்தான் *பர்மிட்,* அதுக்குள்ளே வேற எங்காச்சம் வேலை தேடிக்க இதோட மூணு மாசம் *நோட்டிசும்* இருக்கு. *பர்மிட்* முடியும்போது *நோட்டிசம்* முடிஞ்சிடும். புரிஞ்சுதா? ஆறுமுகம் ....'' கிராணி அடுத்த, நபரைக் கூப்பிட்டார்.

*நோட்டையும் பர்மிட்டையும்* கையில் பிடித்துக்கொண்டே, வெளியில் வந்தான் முத்துசாமி. கைநாட்டுப் போடும்போது மை பதிந்த கைவிரலைக் காற்சட்டையில் துடைத்துக் கொண்டே தன் வீட்டை நோக்கி நடந்தான். அவனைப்போல் *பர்மிட்* வாங்க *ஆபீசின்* முன் பலரும் கூடியிருந்தனர். முத்துசாமி அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவர்களில் சிலர் மாதவன் *கிராணிக்கு* வேண்டியவர்கள், சிலர் துரைக்குப் பிடித்தவர்கள், வேறு சிலர் **கையில் பசையுள்ளவர்கள்**. எப்படியும் சமாளித்துக் கொள்வார்கள் என்ற எண்ணத்தில்தான் முத்துசாமி அவர்களைப் பார்த்தும் பார்க்காமலும் நடந்து கொண்டிருந்தான்.

"வேலை *பெரமிட்* கிடைச்சவங்க சில பேருக்குத் திரும்பவும் வேலை கிடைக்குமாமே" என்று முன்னால் யாரோ சொல்லிக் கொண்டு போனது முத்துசாமியின் காதில் வந்து விழுந்தது. கொஞ்சம் ஆறுதலான வார்த்தைகள்தாம். ஆனால், அந்தச் சில பேரில் தானும் ஒருவனாக இருக்க வேண்டுமே?! முத்துசாமியின் மனம் பேயாய் அலைந்து கொண்டிருந்தது.

எங்கெல்லாமோ ஓடிப் பறந்து உருண்டு புரண்டு கிடந்த முத்துசாமியின் மனம் 'டங்கென்று' அவன் முன்னால் வந்து விழுந்தது. ‘ம்!... சிவப்புப் *பாஸ்போட்டுக்காரனுக்கு* எங்க போனாத்தான் போல கொடுக்கப் போறாங்க? நஞ்சானும் குஞ்சானுமா ஏழெட்டு ஆயிடுச்சு. இதுங்கள எங்க இழுத்துக்கிட்டுப் போய் எப்படிக் கஞ்சி ஊத்துவேன்?" புலம்பிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான் முத்துசாமி.

**"அட இதுக்காக ஏன்யா வருத்தப்படுற! மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான்?** எல்லாம் அந்த மகமாயி பார்த்துக்கவா?" அழுத்திக்கொன்டிருக்கும் தங்கள் வாழ்க்கையின் துயரத்தைத் தெய்வத்திடம் இறக்கிவைத்தபடியே கடைசிக் குழந்தையை இடுப்பில் இடுக்கிக் கொண்டு சமையல் கட்டுக்குள் நுழைந்தாள் மங்கம்மா.

"மாதவன் *கிராணி* மனசு வைக்காட்டி மூட்டை கட்டறத் தவிர வேறு வழியில்லை. எப்படியாச்சும் அவர் கால்ல, கையில விழுந்தாவது இன்னும் ஒரு ரெண்டு வருசத்துக்கு வேலை கெடைக்கும்படியா செஞ்சிடணும். அதுக்குள்ள *பிரஜா* உரிமை வந்திடும். இல்லாட்டி வயத்தக்கட்டி வாயக்கட்டி கப்ப காசு கெடச்சா போதுமுன்னு ஊரு பக்கம் ஓடிட வேண்டியதுதான்'' முணு முணுத்துக்கொண்டிருந்தான் முத்துசாமி.

முத்துசாமியை போன்ற பலரைப் பயமுறுத்தியபடியே இரண்டரை மாதங்கள் ஓடி முடிந்தன. *பிரஜா* உரிமையும் வந்தபாடில்லை. மாதவன் கிராணியை விட்டால் வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான் முத்துசாமி. மாதவன் கிராணியால் தன் மகளும் மனைவியும் பட்ட அவமானங்கள் இவன் மனத்தை அறுத்து ரணமாக்கிக் கொண்டிருந்தாலும் அவரைப் பார்த்து விடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். இப்போது போனால் என்ன பண்ணுவானோ? என்ற தயக்கம் வேறு அவனது நடையைத் தளர்த்தின. சிரம்பானிலிருக்கும் அண்ணாசாமியைப் பார்த்தாலாவது ஆறுதலாக இருக்குமென்று *டவுனுக்குப் பஸ்* ஏறினான்.

"என்னப்பா முத்துசாமி, கப்பலே கவுந்த மாதிரி முகத்தைக் காவுத்துக்கிட்டே வர?" ஓமப்பொடி, பக்கோடா இன்ன பிற இந்தியர் பலகாரங்களை விற்கும் அன்னாசாமியின் குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான் முத்துசாமி. ஏற்கனவே அந்தத் தோட்டத்தில் வேலை செய்தவன்தான் அண்ணாசாமி. மாதவன் கிராணியோடு ஏற்பட்ட வாய் தகராறு முற்றி அவசரத்தில் **கையை ஓங்கி விட்டான்**. அப்புறமென்ன? இருபத்து நான்கு மணி நேர *நோட்டிசு*. *நோட்டிசு* கொடுத்த அந்தக் கணத்தில் விழித்து நின்றான். மாதவன் கிராணியிடம் மன்னிப்புக் கேட்க அழைத்தும் போக மறுத்து விட்டான். பிஞ்சும் பூவுமாகத் தனது நான்கு பிள்ளைகளையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு சிரம்பானுக்கு வந்தவன்தான் இந்த அண்ணாசாமி.

"முத்துசாமி ..! என்னப்பா இது? கேட்டுக்கிட்டே இருக்கேன். ஒரு பதிலும் சொல்ல மாட்டேங்கிற?'

"ஒன்றுமில்ல அண்ணாசாமி, அடுத்த மூனு மாசத்திலே வேற எடம் பார்க்கணுமாம். *நோட்டிசு* கொடுத்துட்டானுங்க. அந்த *நோட்டிசும்* முடிய இன்னும் பத்துப் பதினைஞ்சி நாளுதான் இருக்கு. அதான் என்ன செய்யலாம்னு யோசிச்சிக்கிட்டே வர்ரேன். ம்ம்ம், என்ன நம்ம மாதிரி ரெண்டுங் கெட்டானுங்க இன்னும் எத்தனை பேரு நாயா பேயா அலைஞ்சிகிட்டு இருக்காங்களோ?"

"முத்துசாமி ...! இப்ப என்ன குடியா முழுகிப் போச்சு. பூனை கண்ண மூடிட்டா பூலோகம் இருண்டா போயிடும். இவனுங்கள விட்டா - அந்தத் தோட்டத்த விட்டா நம்மால பொழைக்க முடியாதா என்ன? என்னையும் நடுத்தெருவில் நிறுத்துனவனுங்க தானே இவனுங்க. நான் என்ன கெட்டா போயிட்டேன். இப்பதான் நான் நல்லா இருக்கேன். நீல *பாஸ்போட்டுக்கும்* எழுதிப் போட்டுட்டேன். உனக்கும் எழுதிப் போட்டுடலாம். கவலப்படாதப்பா. பட்டணத்துல ஒரு *செண்டோல்* கடை வச்சே நீ பொழச்சிக்கலாம். *பர்மிட்டாம் நோட்டிசாம் ...* சும்மா தூக்கிப் போட்டுட்டு வருவியா...!

மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான் - தன் மனைவி சொன்ன பழமொழியின் அர்த்தம் அப்போதுதான் முத்துசாமிக்குப் புரிந்தது.

**- ஆ.நாகப்பன்**
எடுத்தாளப்பட்டது)

11 தோட்டப்புறத்தில் முத்துசாமி எதிர்நோக்கிய பிரச்சனைகள் யாவை? (4 புள்ளி)

12 அண்ணாசாமி தோட்டத்தைவிட்டு வெளியேறியதற்கான காரணம் என்ன? (3 புள்ளி)

13 கீழ்க்காணும் சொற்றொடர்களின் சூழலுக்கு ஏற்ற பொருளை எழுதுக.

(i) கையில் பசையுள்ளவர்கள் (2 புள்ளி)
(ii) கையை ஓங்கி விட்டான் (2 புள்ளி)

14 (i) **"அட இதுக்காக ஏன்யா வருத்தப்படுற! மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான்?"**

மேற்காணும் வரிகள் உணர்த்தும் கருத்து யாது?

(4 புள்ளி)

(ii) இச்சிறுகதையின் வாயிலாக உமக்கு ஏற்பட்ட உணர்வென்ன?

(5 புள்ளி)

15 கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது **சொந்தமொழிநடையில் விளக்கம்** எழுதுக.

ஆண்டஇனம் என்றுதினம் ஆர்ப்பரித்தால் மட்டும்
ஆகிவாரா தெச்செயலும்? ஆதலினால் தோழா!
ஈண்டுநமைச் சூழ்ந்துறையும் இருளகற்ற ஒன்றாய்
இணைந்திடுவாய் மொழியின்கீழ் இன்றேநம் வாழ்வு
மீண்டுவர எளிதாகும் மேன்மையெல்லாம் கூடும்
வீரமிகு செந்தமிழா வினையாற்ற உன்னை
வேண்டுகிறேன்; குலங்காக்க விரைந்திடுவாய்; கொண்ட
வேதனைகள் போதுமினி விரைந்தெழுந்தே வாராய்!

**- எஸ்.எம்.தீன்**
(மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்)

(10 புள்ளிகள்)

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**
**(20 புள்ளிகள்)**

16 கொடுக்கப்பட்டுள்ள **மரபுத்தொடரைப்** பொருள்விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**தண்ணீர் காட்டுதல்**

(2 புள்ளி)

17 கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற **பழமொழியை** எழுதுக.

**நாம் பிறருக்குச் செய்கின்ற அறம், நமக்குத் துன்பம் வருங்கால் நம்மைக் காத்து நிற்கும்.**

(2 புள்ளி)

18 கொடுக்கப்பட்டுள்ள **விவேக சிந்தாமணிச் செய்யுளின்** விளக்கம் எழுதும்.

**புத்திமான் பல்வா காவான் பலமுளான்**
**புத்தி யற்றால் எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தே தீரும்**
**மற்றொரு சிங்கத் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே**
**உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போல்**

(4 புள்ளி)

19 அக்காளும் உரையாடலில், அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான** மொழியணிகளை எழுதவும். **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

தம்பி! நீ முயன்றால் எழுத்தாளனாக ஆகலாம். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லல்ல; ஒளி வீசுகின்ற எல்லாமே தங்கமல்ல **(i பழமொழி)** என்பதுபோல் புறத்தோற்றத்தைக் கண்டு ஏமாறக்கூடாது என்று நீ அறிந்திருப்பாய். அதுபோல எழுதுவதெல்லாம் எழுத்தல்ல என்பதையும் நீ அறிந்திருக்க வேண்டும்.

எழுதுகிறவனெல்லாம் எழுத்தாளன் அல்லன். அவன் எழுத்தான். அவ்வளவுதான். எழுத்தை ஆள்பவன்தான் எழுத்தாளன், உயர்ந்த உள்ளத்தைப் பெற்று நிறைந்த கருத்துகளைக் கொண்டு, குறைந்த எழுதுத்துகளால் எழுதப்படுவதே எழுத்து என்றாகும். அவ்வாறு எழுதுபவனே நல்ல எழுத்தாளன்.

நெல்லைத் தேய்த்து உமியை ஊதிவிட்டால் அரிசியைக் காண முடியும். எழுத்துகளைப் படித்துக் குறைகளை நீக்கிவிட்டால், கருத்தகள் காணப்பட வேண்டும். இன்றேல், நெற்பதர்களைப்போல அவையும் பதராகிப் போய்விடுவதோடு நற்சிந்தனையுடைய வாசக மனங்களில் தீய எண்ணங்களை விதைத்து நாளடைவில் தரமற்ற வாசகர்களாய் அவர்களை உருமாறச் செய்துவிடும். **(ii உவமைத்தொடர்)**

எழுத்துகளுக்கு ஓர் ஆற்றல் உண்டு; அதுவும் பேராற்றல். மன்னரின் செங்கோலைவிட மக்களின் எழுதுகோலுக்கு அதிக ஆற்றல் உண்டு. வில்லும் வேலும் கண்ணாற் கண்டவரின் உடலில் மட்டும் பாயும்; காயம் உண்டாக்கும். ஆனால், எழுத்து, கண்ணாற் காண முடியாதவர் உள்ளத்திலும் பாயும்; உள்ளத்தையும் புண்படுத்தும். தீக் காயத்தைவிட நாவினால் பட்ட காயம் வேதனையானது அல்லவா ..! **(iii திருக்குறள்)**.

அதுமட்டுமல்ல தம்பீ, எழுத்துகளுக்கென்று ஒருநெறி உண்டு. நெறி என்பது நன்நெறியையே குறிக்கும். அதனால், நல்ல நெறிகளை எண்ணி, நல்ல நெறிகளைப் படித்து, நல்ல நெறிகளைக் கேட்டு, நல்லனவற்றை எழுதி மக்களுக்கு நல்வழி காட்டும் நல்ல எழுத்தாளர்கள் நமது நாட்டில் பெருகியாக வேண்டும். இவர்களுள் நீயும் ஒருவனாக இருந்து தடுமாறி நடப்பவர்களுக்கு உதவும் கைக்கோல்போல, வாழ்க்கையில் தடுமாறுபவர்களுக்கு உன் எழுத்துகள் அறிவுரைகளாக அவர்களுக்குத் துணை நிற்க வேண்டும். **(iv திருக்குறள்)**

(12 புள்ளி)

**பிரிவு ஈ : இலக்கணம்**
**(20 புள்ளிகள்)**

20 கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி,

(அ) சேர்த்து எழுதுக.

i) செம்மை + பயிர்
ii) வந்து + பார்
iii) தீ + பெட்டி

(3 புள்ளி)

(ஆ) வினைச்சொல் என்றால் என்ன? அதற்கு **இரண்டு** எடுத்துக்காட்டுகள் எழுதவும்.

(4 புள்ளி)

21 கொடுக்கப்பட்டுள்ள தன்வினை வாக்கியத்தை **பிறவினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

நீலகண்டன், குழந்தை வளர்ப்புமுறை என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவார்.

(3 புள்ளி)

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. பத்தியை மீண்டும் **எழுத வேண்டாம்.**

கட்டுரை எழுதும்போது முண்ணுரை, பொருள், முடிவுரை என்று பாகுபாடு செய்து, பொருளை மிகைப்படுத்தாமலும் குரைத்துக் கூறாமலும் வழுவின்றி இனிய தொடக்கமும் அழகிய முடிவும் அமைத்து எழுதுதல் வேண்டும். கட்டுரை எழுதுவோர் கூடியமட்டும் பிற மொழிச் சொற்களை விலக்கி தேவைப்படும் இடத்தில் மட்டும் பிற மொழிச் சொற்களை பயன்படுத்தும் வழக்கத்தை மேற்கொள்ளுதல் நலமாகும். மொழிநடை? கற்பவரின் உள்ளம் கவரும் முறையில் எலிய தமிழில் நல்ல முறையில் இருத்தல் மிக மிக விரும்பத்தக்கது.

(10 புள்ளி)




https://play.google.com/store/books/details?id=Y9PoDwAAQBAJ&rdid=book-Y9PoDwAAQBAJ&rdot=1&source=gbs_atb&pcampaignid=books_booksearch_atb




**தொடர்புக்கு : 019-5652222**

www.tamilsmkpahang.com